Registered as a News Paper

# ஈழநாதம்

விலை: 15.00
பக்கம் : 20

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 14 | வெள்ளி - 38 | 14 - 20 - நவம்பர் - 2003



## பூநகரி வெற்றி 10 ஆண்டு நிறைவு

## சந்திரிகாவால் சமாதானத்தைப் பலியிட முடியுமா?



## சமாதானம் இப்போது...



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 14 .11.2003
மின் அஞ்சல் : Ehatham@sltnet.lk

# பொறுமை இழக்காத புலிகள்

தென்னிலங்கை அரசியல் பரபரப்புகளுக்கு மத்தியில் விடுதலைப் புலிகள் மிகவும் நிதானமாக மௌனத்தோடு இருக்கிறார்கள்.

மெய்யாகப் பார்த்தால் தெற்கின் அரசியல் அதிரடி நிகழ்ச்சியில் அதிகம் கொந்தளித்துப் போய் இருக்கவேண்டியவர்கள் விடுதலைப்புலிகள்தான்.

விடுதலைப் புலிகள் யாருடன் உடன்பாடு செய்துகொண்டதற்கு இணங்க யுத்தத்தை நிறுத்தி அமைதிப் பேச்சை முன்னெடுத்தார்களோ அவர்களின் மறுதரப்பு உடன்பாடு செய்ததற்கான எல்லா அதிகாரத்தையும் இழந்து போய் நிற்கிறது.

இத்தகையதொரு உடன்பாட்டை யாருடன் செய்து கொள்ள விடுதலைப்புலிகளாலும், சர்வதேச சமூகத்தாலும் முடியவில்லையோ அவர்களே உடன்பாடு செய்ததற்கான அதிகாரத்தைப் பறித்துவைத்திருக்கிறார்கள்.

உடன்பாட்டை அமுலாக்கும் அதிகாரம் இப்பொழுது உடன்பட்டவர்களிடம் இல்லை. மாறாக, முன்னர் இதற்கு உடன்படாதவர்களிடமும், ரணிலுடனான சமாதான முன்னேற்றத்தில் உடன்பாடற்றவர்களிடமுமே இருக்கிறது.

இதன் யதார்த்தத்தில் உடன்பாடு தன்னகத்தில் எந்த வலுவையும் இப்பொழுது கொண்டிருக்கவில்லை.

அது இப்பொழுது தங்கி நிற்கக்கூடிய இடம் அல்லது தொங்கி நிற்கக்கூடிய இடம் சிறிலங்காவின் அரசியல் கலாச்சாரம்தான்.

சிறிலங்காவின் அரசியல் கலாச்சாரமோ, நாட்டின் பொருத்தமான கொள்கைக்கேற்ப நாட்டை வழிநடத்திச் செல்வதல்ல. மாறாக, ஆட்சியில் இருக்கும்போதான அதிகாரத்தைப் பயன்படுத்தி, மேம்படுத்தி எதிர்க்கட்சியை எப்படி அரசியலிலிருந்து ஓரங்கட்டுவது என்பதும், கட்சிக்குள் இருக்கும் தலைவர் தனக்கான எதிர் நிலைகளை கீழ் அமர்த்தி தான் எப்படி மேலெலுவது என்பதும் தான்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து பண்டாரநாயக்கா சுதந்திரக் கட்சியைத் தொடங்கியதற்கான காரணம் தொட்டு இன்றுவரை இரு கட்சிகளும் மாறி மாறி எடுத்த அரசியல் நடவடிக்கைகளும் கொண்டுவரப்பட்ட சட்டங்களும் இவற்றை மெய்ப்பிக்கும்.

இப்பொழுதும் மூன்று அமைச்சு அதிகாரங்களைப் பறித்துள்ள சனாதிபதி ஒரு மாற்றுக் கொள்கைக்காக அதனைச் செய்ததாக அறிவிக்கவில்லை.

இந்த அரசியல் கலாச்சாரத்தில், விடுதலைப்புலிகள் தாம் உடன்பட்ட ஒப்பந்தத்தை தொடர்ந்தும் கடைப்பிடித்து மதித்து நடந்துகொள்வது என்பதே மிகவும் அசாதாரணமான ஒரு நிலைதான்.

இத்தகையதொரு அச்சுறுத்தல்நிலை உடன்பாடு காணப்பட்ட நாளிலிருந்தே விடுதலைப்புலிகளுக்கு இருந்துவந்தது. ஆனால், அத்தகையதொரு நிலைமை உடன்பாட்டின் மறுதரப்பிற்கு இருக்கவுமில்லை, இருக்கவேண்டிய தேவையுமில்லை.

அத்தகைய நிலையில் சமாதானத்தை அதிக எச்சரிக்கையோடு அணுக வேண்டியவர்கள் விடுதலைப்புலிகளாகவே இருந்துவந்தனர். இப்பொழுதோ அதற்கான ஆபத்தும் வந்துவிட்டாயிற்று. ஆயினும், புலிகள் அதனை மதித்து நடப்பதற்கு பொறுமையோடு இணக்கம் காட்டியிருப்பது சமாதானப் பேச்சுமூலம் இணக்கமென்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு பொய்யல்ல என்பதை மெய்ப்பிப்பதாக இருக்கிறது .

அரசியல் சட்டவலுவுமற்று, அரசியல் கலாச்சாரவலுவுமற்று உடன்பாடு இப்பொழுதும் உயிர்வாழ வேண்டுமென்றால் ஒன்று, புலிகள் அந்த வலுவற்ற உடன்பாட்டை மதித்து நம்பிக்கை கொண்டு ஒழுகவேண்டும். இரண்டு, சர்வதேச சமூகம் தன் சக்திமிக்க நாடுகளின் கரங்களால் உடன்பாடு வலுவிழக்காதவாறு சனாதிபதி அதிகாரத்தின்மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கவும், தனது ராஜீக முயற்சியின்மூலம் தெற்கின் நிலைமையை மீளொழுங்கு படுத்தி உடன் பாட்டுக்கு வலுவூட்டவும் வேண்டும்.

சமாதானத்தைத் தக்கவைப்பதற்கான இந்த இரண்டு வழிமுறைகளில் விடுதலைப் புலிகள் மிகுந்த பொறுப்போடும் அரசியல் கண்ணியத்தோடும் தமது பங்கில் செயற்பட்டிருக்கின்றனர்.

ஒரு அசாதாரணமான சூழ்நிலையில் புலிகள் தமது அரசியல் கண்ணியத்தையும், சமாதானத்தின் நம்பகத்தையும் வெளிப்படுத்தியதன் மூலம் ரணிலையும், சர்வதேச சமூகத்தையும் சமாதான விடயத்தில் தமிழ் மக்களுக்கு அதிகம் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களாக மாற்றியிருக்கின்றனர்.

## தூரனின் பார்வையில்

# கதிர்காமர் சரணம் கச்சாமி... சங்கரியார் சரணம் கச்சாமி... இப்படிக்கு பேரினவாதசக்திகள்

**ஆளும்** கட்சிக்கும், அதிகார பீடத்தில் வலுவாக அமர்ந்திருப்போருக்கும் அவர்கள் எத்தகைய கொள்கை கோட்பாடுகளைக் கொண்டவர்களாக இருந்தாலும் கூட, தேசத்திற்கோ, இனத்திற்கோ ஏன் சமுதாயத்திற்கே விரோதிகளாக இருந்தாலும் கூட, அவர்களை அண்டிப் பிழைப்பு நடத்தி அரசியல் வாழ்வை வளமாக வாழும் மனிதர்களை என்னவென்று சொல்வதாம்?

சுயநலம் என்பதும் அரசியல்வாதிகளுடன் ஒட்டிப்பிறந்த குணாம்சம் என்று கண்ணதாசன் கூறுவார்.

பதவிகளின் உயர் பீடத்தில் அமர்ந்திருப்போர்க்கு நன்றியும் விசுவாசமும் காட்டி, அவர்கள் விடும் தவறுகளையெல்லாம் பகிரங்கமாகவோ அன்றில் மௌனமாகவோ அங்கீகரித்து, தன்னினத்துக்கு அவலமும், அவமானமும், அழிவும் ஏற்பட்டாலும் கூட, அதற்கும் ஒரு நியாயத்தைக் கற்பித்து தனது விசுவாச நன்றியுணர்வை வெளிப்படுத்தி தன் இருப்பின் நிலைப்பாட்டினை உறுதி செய்ய குயுக்தியுடன் செயற்படுவோர் பட்டியல் தமிழ் அரசியல் வாதிகளிடையே நீளமாகிக் கொண்டே வருகிறது.

ஒரு நியாயமானதும், கண்ணியமானதும், இலட்சிய பூர்வமானதுமான கொள்கைக்கும் அதனை இலக்குவைத்து செயற்படும் தலைமைக்கும் விசுவாசமாக இயங்குவது என்பது கௌரவத்துக்குரிய விடயமாகும். ஆனால், தனது சுயநல அரசியல் அபிலாஷைகள், பதவி வேட்கைகள் போன்றவற்றை நிறைவு செய்யும் நோக்குடன் அரசியல் அநாகரிகம் பேணும் எந்தவொரு அரசியல் வாதியும் தனது இனத்திற்கும், மொழிக்கும், அவலத்தையும், ஆபத்தையும், தலைகுனிவையும் ஏற்படுத்துபவராகவே வரலாற்றில் பதிவு செய்யப்படுவார் என்பது சர்வ நிச்சயமாகும்.

சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் தமிழினத்தின் துயர் படிந்த சரித்திர நிகழ்வுகளுக்குரிய அத்தியாயங்களுக்கு காரணமான தமிழர்கள் பலரை உலகத் தமிழினம் நன்கு அறியும்.

எல்லாக்காலத்திலும் யாரோ ஒருவரோ அல்லது சிலரோ இந்த துரோகத்தனத்தை நடைமுறைப் படுத்தியே வந்துள்ளார்கள்.

டி.எஸ்.சேனநாயக்கா காலம் முதல் சந்திரிகா காலம் வரை இத்தகைய அதிகார பீடத்தவரின் அடிவருடிகள் ஒருவர் மாறி ஒருவராய் தம் விசுவாசப்பணிகளை தமது அரசியல் எஜமானர்களுக்கு ஆற்றியே வந்துள்ளனர்.

அவர்களுடைய சுயநல-பதவி மோக செயற்பாடுகளால் அவர்களின் சொந்த இனமே மிக மோசமாக பாதிக்கப்படுகிறது என்பதைஅவர்கள் மிகத்தெளிவாகவே புரிந்து கொண்டும், தம்மைத் திருத்திக்கொள்ளும் சுயசிந்தனை அற்றவர்களாகவே தொடர்ந்தும் செயற்பட்டமைதான் தமிழ் மக்களின் இன்றைய அவலங்களுக்கெல்லாம் மூலகாரணம்.

இவர்களின் சகல விதமான பலவீனங்களையும் நன்கு அறிந்து கொண்ட பேரினவாத அரசியல் தலைமைகள், இவர்கள் கைகளைக் கொண்டே இவர்களைச் சார்ந்தோரின் கண்களைத் தோண்டும் மூலோபாயத்தைக் கன கச்சிதமாக கையாண்டதுடன், அவர்களைச் சாட்சி ஆதாரமாக வைத்துக் கொண்டே தமது தமிழின விரோத - தமிழின அழிப்பு நடவடிக்கைகளை எல்லாம் நியாயப்படுத்தவும், சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகவும், தமிழரின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாத செயற்பாடுகளாக நிலைநிறுத்தவும் முயன்று வெற்றியும் கண்டனர். இதனால் தமிழ் மக்கள் அடைந்த இன்னலும், இழப்பும் எழுத்தில் அடக்க முடியாதவைகளாகும்.

சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காத அற்ப சுயநலமிகளாக செயற்பட்ட இந்த நபர்களின் துரோகத்தனம் எந்தவகையிலும், எக்காலத்திலும் தமிழ் மக்களால் மன்னிக்கப்பட முடியாதவைகளேயாகும்.

இந்தவகையில் கடந்த ஆட்சியில் அதாவது சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இந்த தமிழின விரோத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென்றே வெளியுறவு அமைச்சர் என்ற பெரிய பதவிக் கதிரையில் முன்பின் அரசியல் அனுபவமற்ற ஒரு வெறும் சட்டத்தரணியான லக்ஷ்மன் கதிர்காமர் என்பவர் அமர்த்தப்பட்டார். அப்படி ஒரு பதவி தனக்கு கிடைக்கும் எனக் கனவு கூடக் கண்டிராத கதிர்காமர் அந்தப் பதவிக் கதிரையில் அமர்ந்ததும் அதுவரை எந்த தமிழ் அரசியல் வாதிகளும், அதாவது பேரினவாத அரசியல் அதிகார பீடத்தவர்களின் அபிலாஷைகளுக்கேற்ப, தன் இன மானம் அனைத்தையும் கைகழுவி விட்டு காலடியில் கைகட்டி நின்று ஏவல் களை பணிவுடன் செய்த பவ்வியம் வரலாற்றுப் புகழ் பெற்றது. அவர் தனது இனத்திற் கும், அவர்களின் உரிமைக்கும், விடுதலைப் போராட்டத் திற்கும் எதிராக, சனாதி பதிக்கும், சிங்கள பேரினவாதத் தலைமைகளுக்கும் ஆற்றிய விசுவாசமான சேவையை அவர்கள் காலம் காலமாய் நன்றியுடன் நினைத்தும் போற்றாவிட்டால் நன்றிமறந்தவர்களே யாவர். அவர் அப்படி இருப்பார்கள் என்று கதிர் காமரும் எண்ணக்கூடும். அதனால் தான் தனது ஊழியத்தை இன்னமும் எஜமான பக்தியுடன் தொடர்ந்து வருகிறார் போலும்.

கதிர்காமரின் கதைபொரியது. எல்லோரும் அறிந்தது. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி கதிர்காமரையே விழுங்கி ஏப்பம் விடும் திறன் கொண்டவராகியுள்ளார். அவர் அவர் அடித்துவரும் அரசியல் குத்துக்கரணங்கள் பிரசித்தி பெற்றவை. எட்டி உதைத்தாலும் பதவிக் கதிரையை கெட்டியாகக் கட்டிப் பிடித்துக்கொண்டும் வீம்பு காட்டும் சங்கரியார் மெல்ல மெல்ல தன்னிலை இழந்தவராகத் தனது சுயத்துவத்தை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளார்.

சங்கரியாரின் சங்கதிகள் பற்றி ஒரு சரித்திரமே எழுதலாம். அது அநாவசியம், தமிழராயிருப்போர் அவர் சரித்திரம் அறிந்தவராகவே இருப்பர்.

பிரதமர் நாட்டில் இல்லாத வேளையில் மூன்று முக்கிய அமைச்சர்களை தன் அதிகார பலத்தால் பதவி நீக்கிவிட்டு அவ்வமைச்சுப் பதவிகளை சனாதிபதி பொறுப்பேற்றது சரியா?

இந்தக் கேள்வியை சிங்கள 'தினமின நாளிதழ்' கதிர்காமரிடம் கேட்டபோது; அவர் சரி - பிழை - என எதையும் அறுதியிட்டுக் கூறாமல், இம்மூன்று அமைச்சுக்களையும் சனாதிபதி தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்திருப்பது நாட்டில் யுத்த சூழ்நிலையொன்றை ஏற்படுத்துவதற்கல்ல, மாறாக காலத்தின் தேவையை நிவர்த்தி செய்யவே இவ்வாறு செய்யவேண்டி நேரிட்டது என்றுள்ளார்.

ஆனால் ஆனந்த சங்கரியாரோ இதே வினாவுக்கு சற்று அதிகப் பிரசங்கித்தனமாக, சனாதிபதி மீதிலான தனது அதீத விசுவாசத்தை வெளிப்படுத்தும் வகையில் - 'யுத்தநிறுத்த கண் காணிப்புக் குழுவின் தலைவர் ரெலிவ்சன் விடுதலைப்புலிகளுக்கு, அவர்களின் ஆயுதக்கப்பல்கள் தொடர்பான தகவல்களை வழங் கியதை தேசத்துரோகச் செயலாகவே நான் காண்கிறேன். நாடு இவ்வாறான பயங்கர சூழ்நிலைக்கு சென்றதால் தான் சனாதிபதி இவ்வாறு தனது அதிகாரத்தை பயன்படுத்தி அமைச்சுக்களைப் பொறுப் பேற்கவேண்டி வந்தது. இதனை ஒரு துணிச்சலான செயலாகவே கருதுகிறேன்' எனப் பதிலளித்துள்ளார்.

சனாதிபதியின் உச்சி குளிரச் செய்துள்ளார்.

பேசாமல் சங்கரியார் கூட்டணித் தலைமையை கைவிட்டுவிட்டு பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பி, சிகல உறுமய அல்லது பிக்குகள் முன்னணி... போன்ற ஏதாவது ஒன்றில் இணைந்து விசுவாசமாக தனது ஊழியத்தைத் தொடரலாமே...!

இது அவருக்கான எமது பணிவான ஆலோசனையாகும்.



# சந்திரிகாவால் சமாதானத்தை பலியிட முடியுமா?

நிலாந்தன்



சில மாதங்களுக்கு முன்பு வன்னியில் உள்ள ஒரு மூத்த பத்திரிகையாளர் சனாதிபதி சந்திரிகாவை "சமாதானத்தின் கைதி" என்று கூறியிருந்தார். ஆனால் இப்போதுள்ள நிலைமைகளை வைத்துக் கூறின், போகிறபோக்கில் சந்தி ரிகா சமாதானத்தின் பலியாடாகப்போகிறாரா என்றே யோசிக்க வேண்டியுள்ளது.

எந்தச் சமாதானம் அவருடைய எதிரியின் பலமாக இருந்ததோ. எது அவரை முடக்கிக் கைதி போலாக்கியதோ அந்தச் சமாதானத்தை உடைத்து விட்டால், தான் பலமடைந்து விடலாம் என்று சந்திரி[illegible] யோசித்திருக்கக்கூடும்.

ஆனால் அவரைப் பொறுத்தவரை ஒரு பொறி போல அல்லது சிறைபோல காணப்பட்ட சமாதானத்தை உடைத்துக் கொண்டு வெளியில் வரும் முயற்சியில் அவர் மேலும் இறுகிப்போய் நிற்கிறார் என்பதே உண்மை நிலை. கைதி நிலையிலிருந்து தன்னை விடுவிக்கும் முயற்சியில் அவர் தன்னுடைய பெயரையும் கட்சியின் எதிர்காலத்தையும் பலியிடும் நிலைமைகளே அதிகமதிகம் உருவாகிவருகின்றன.



இலங்கைத்தீவில் இப்பொழுது நடந்து கொண்டிருப்பது அரசியலமைப்புக்கும் அரசியல் நாகரிகத்துக்கும் இடையிலான ஒரு மோதலே.

இந்த மோதலில் வென்றாலும், தோற்றாலும் வெற்றி ரணிலுக்கே. இதில் அவர் வென்றால் தொடர்ந்தும் சமாதானத்தை முன்னெடுக்கலாம். தோற்றால், தேர்தல் வரும். அதில் மறுபடியும் சமாதானத்தின் பேரால் அவர் பெரு வெற்றி பெறலாம் என்பதால் தான் அவர் ஆகக்கூடிய நிதானத்துடன் காணப்படுகிறார்.

மாறாக சந்திரிகாவைப் பொறுத்தவரை அவரால் தோற்கமுடியாது, வென்று தானாகவேண்டும். இல்லையென்றால் எதிர்காலமே இல்லை. ஆனால் இதில் அவர் பெறக்கூடிய எந்த ஒரு வெற்றியும் சமாதானத்தைப் பலியிட்டால்தான் கிடைக்கும்.

ஆனால். இலங்கைத் தீவின் சமாதானம் பலியிடப்படக்கூடிய ஒன்றா என்பதே இங்கு முதலில் கேட்கப்பட வேண்டிய கேள்வி.

இக்கேள்விக்குப் பெறப்படும் விடையை அடிப்படையாக வைத்தே இப்பொழுது நிலவும் அரசியல் ஸ்திரமின்மை பற்றிய முடிவுகளைக் கூறமுடியும்.

முதலில் இலங்கைத்தீவில் இப்பொழுது நிலவும் சமாதான முயற்சிகளின் தன்மை பற்றிப் பார்ப்போம்,

இம்முறை சமாதானத்தின் பலமே சர்வதேச சமூகம் தான். இது முதலாவது.

இரண்டாவது, இம்முறை சமாதானம் புலிகளால் முறியடிக்கப்படும் வாய்ப்புக்கள் அருந்தலாகவே காணப்படுகின்றன என்பது.

மூன்றாவது, இம்முறை சமாதானத்தில் உள்ள பல வீனமானஅம்சங்கள் இரண்டு. இதில் முதலாவது, இந்தியாவின் பங்களிப்பின்மை. இரண்டாவது, எதிர்க் கட்சிகளின் பங்களிப்பின்மை.

மேற்சொன்ன இந்த இரண்டு காரணங்களும்தான் இப்போதுள்ள எல்லாக் குழப்பங்களுக்கும் காரணம்.

ஆனால் இவை இரண்டையுமே, சமாதானத்தின் பாதுகாவலராக உள்ள மேற்கு நாடுகள் நினைத்தால் கையாள முடியும். ஏனெனில், இந்தியாவும் சரி, சந்திரிகாவும்சரி சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயங்களைப் புறக்கணிப்பது கடினம்.

சமாதானத்தை முறிப்பது என்பது ரணிலை மட்டும் முறிப்பது அல்ல. சர்வதேச சமூகத்தின் விருப்பங்களையும், வர்த்தக நலன்களையும் முறிப்பதாகவும் அது அமையும்.

சந்திரிகாவைப் பொறுத்தவரை அது அரசியல் நாகரிகத்தை முறிப்பதாகவும் அமையும். எனவே எளிதில் முறிக்கப்படவியலாததாக இலங்கைத் தீவின் சமாதானம் காணப்படுகிறது.

இது சந்திரிகாவுக்கும் தெரியும். இதன் முடிவுகள் எப்படி அமையும் என்பதும் அவருக்கு நன்குதெரியும்.

ஆனால் இதில் அவருக்கு வேறு தெரிவுகள் இருக்கவில்லை.இதைவிட்டால் வேறு தருணமும் வாய்க்கப்போவதில்லை.

ஏனெனில் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அமைப்புக்கான வரைபு மேற்கு நாடுகளின் பின்பலத்துடன் கவனத்திலெடுத்துக்கொள்ளப்படும் ஒருநிலை தோன்றினால் கடந்த சுமார் ஆறுமாத காலமாகத்தேங்கி நிற்கும் சமாதான முயற்சிகள் அசையத் தொடங்கிவிடும். இது ரணிலை மேலும் பலப்படுத்தும். எனவே அதற்கு முதல் ரணிலை வீழ்த்த வேண்டிய அவசியம் சந்திரிகாவுக்கு இருந்தது.



அதோடு புலிகளின் யோசனைகளின் மீது சமாதானத்துக்கு எதிரான அபிப்பிராயங்களைத் திரட்டுவதற்கும் இது தான் உகந்த தருணம் என்றும் அவர் திட்டமிட்டிருக்கக்கூடும்.

சமாதானத்தை இப்படியே வளர விட்டுத் தன்னுடையதும் கட்சியினுடையதும் எதிர்காலம் பல ஆண்டுகளுக்கு இருண்டதாக மாறுவதை விடவும் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தில் ரத்தம் சிந்தாத ஒரு சதிப்புரட்சி மூலம் நிலைமைகளைத் தனக்குச் சாதகமாகக் குழப்பிவிடலாம் என்றும் அவர் திட்டமிட்டிருக்கக்கூடும்.

ஆம். இதை ஒரு அரசியலமைப்புச் சதிப்புரட்சி என்றே அழைக்க வேண்டும். இலங்கைத்தீவின் அரசியலமைப்பு மக்கள் தீர்ப்புக்கு எதிராக எப்படி இயங்கமுடியும் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு.

இலங்கைத்தீவின் அரசியலமைப்பு எப்படி அரசியல் நாகரிகத்துக்கு முரணானதாகப் பிரயோகிக்கப்பட முடியும் என்பதற்கும் இது ஒரு எடுத்துக் காட்டு.

ஆனால் இதிலிருக்கும் நடைமுறை வரையறைகள் இப்பொழுது தெரியத்தொடங்கிவிட்டன.

சமாதானத்தைப் பலியிடும் முயற்சிகளில் சந்திரிகா தன்னைப்பலியிடும் ஒரு நிலை வந்தாலும் வரலாம்.

ஏனெனில், அவர் மேற்கொண்ட சதிப்புரட்சி ரணிலைப் பலப்படுத்துவதில்தான் இதுவரை முடிந்திருக்கிறது.

இப்பொழுது ரணில் தன்னை ஒரு சமாதானத்தின் தியாகி போல காட்டிக்கொள்கிறார்.

சந்திரிகாவின் சதிப்புரட்சி ரணிலை சமாதானத்தின் தியாகியாக்கியதுதான் மிச்சம்.

இப்போதுள்ள அரசியல் யதார்த்தத்தின்படி ரணில் எவ்வளவுக்கெவ்வளவு சமாதானத்தின் தியாகியாக மாறுகிறாரோ அந்தளவுக்கு சந்திரிகா சமாதானத்தின் பலியாடாக வேண்டி வரும்.

இலங்கைத்தீவின் சமாதானம் யாருடையதும் தனிப்பட்ட தெரிவு அல்ல. அது ஒரு சர்வதேச யதார்த்தம்.

அது ஒரு விதத்தில் சர்வதேச நிர்ப்பந்தமும் கூட. சக்திமிக்க மேற்கு நாடுகளைப் பகைப்பதென்று முடிவெடுத்தால் மட்டுமே சமாதானம் குழம்பும். இப்படியொரு முடிவை மரபுரீதியான அரசுகளோ அல்லது கட்சிகளோ எடுப்பது கஸ்ரம். மரபுசாரா போராட்ட அமைப்புக்கள் வேண்டுமானால் சர்வதேச அபிப்பிராயத்தைப் புறக்கணித்துவிட்டு முடிவுகளை எடுக்கலாம்.

ஜே.வி.பி, சிகல உறுமய போன்ற அமைப்புக்கள் இது விசயத்தில் எழுந்தமானமாக நடக்கலாம். ஆனால் மிகவும் ஸ்தாபிக்கப் பட்ட, மரபு ரீதியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி போன்ற கட்சிகளோ அல்லது அவற்றின் தலைமைப்பீடங்களோ இத்தகைய முடிவுகளை எடுப்பது என்பது அவற்றை சர்வதேச அளவில் தனிமைப் படுத்திவிடும். சந்திரிகா ஏற்கனவே சர்வதேச அளவில் தனிமைப் படுத்தப்பட்டுவிட்டார்.

பிராந்திய மட்டத்திலும் அவர் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லைப் போலத் தோன்றுகிறது.

சமாதானத்தின் பேரால் நடக்கப்போகும் எந்த ஒரு தேர்தலும் அவருடைய தோல்வியை மேலும் நிரூபிப்பதாகவே அமையும்.

எனவே ரணில் கேட்பது போல பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலுக்கு விடுவதும், அவரைப் பொறுத்தவரை ஆபத்தானது.

வரவர அவருடைய தெரிவுகள் குறைந்துகொண்டே வருகின்றன. அவருடைய கவர்ச்சியும் குறைந்து கொண்டே வருகிறது. முன்னைய தடவைகளைப் போலல்ல, இம்முறை சமாதானத்துடன் விளையாட முடியாது என்பதை அவர் ஒப்புக்கொள்ளும் வேளைவரும் போது நிலைமைகள் அவருடைய கைகளைக் கடந்துபோய் விடக்கூடும். ●

## ஓகோ! அப்படியா!




செய்தியாளர்களிடம் புத்திரசிகாமணி.

**உரிமைப்போராட்டத்தில் பதவி நாற்காலியை துச்சமாக மதிப்பவன் நான்.**

## ஓகோ ! அப்படியா!

யாழ் மாவட்ட செயலகத்தில் ஜயலத் ஜெயவர்த்தன.



**நான் அரசியல் லாபம் கருதி வட -கிழக்கு மக்களுக்கு உதவி செய்யவில்லை.**

## ஓகோ ! அப்படியா!



விகாரமாதேவி பூங்காவில் நடைபெற்ற கூட்டத்தில் ரில்வின் சில்வா.

**பச்சோந்தி அரசாங்கத்தை அமைக்க ஜே.வி.பி. ஒரு போதும் ஆதரவளிக்காது.**

## ஓகோ ! அப்படியா!

செய்தியாளரிடம் ஜோண் அமரதுங்க



**உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் பொலிசாருக்கு இல்லாததால் சிங்கள - தமிழ் ஒன்று கூடலில் ஏற்பட்ட தாக்குதலை தடுக்க முடியவில்லை.**

## ஓகோ ! அப்படியா!



சனாதிபதிக்கு ஆனந்த சங்கரி கடிதம்.

**நாம் எல்லோரும் இந்தியாவிலிருந்து வந்தவர்களே. இந்தியா எமது தாய்நாடு என்பதை நாம் அனைவரும் நோக்க வேண்டும்.**

## ஓகோ ! அப்படியா!

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கக் கூட்டத்தில் எல்லே குலவன்ச தேரர்.



**எமது பௌத்த தர்மத்தின் உபதேசம் இன்றைய கால கட்டத்திற்கு பொருந்தாது. அதனை அலுமாரியில் பூட்டி வைத்துவிட்டு நாட்டைப் பாதுகாக்க எழுச்சியுடன் வீறுகொண்டு எழ வேண்டும். முகச்சவரம் செய்து மொட்டை அடித்து விட்டால் பிக்குகள் மூளை குறைந்தவர்கள் என நினைக்கிறார்கள்.**

நறுக்கென....

## தடுமாறும் சந்திரிகா.... நிலைமாறும் சிறிலங்கா



**அவசரகால** நிலைமையை பிரகடனம் செய்வதில் சந்திரிகா பின்வாங்கிவிட்டாலும், பாதுகாப்பு அமைச்சை தன்வசம் எடுத்துக்கொண்ட சந்திரிகா பிரகடனம் செய்யப்படாத அவசரகால நிலையொன்றினை தனது கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ள முப்படை மற்றும் பொலிஸ்படையினரின் அநுசரணையுடன் நடைமுறைப் படுத்த ஆரம்பித்து விட்டார் என்றே தோன்றுகின்றது. நாட்டின் சகல மாவட்டங்களிலும் முப்படையினரையும், பொலிசாரையும் 24 மணிநேர உஷார்நிலையில் இருக்கப் பணித்துள்ள சந்திரிகா, சந்தேகத்திற்குரிய நபர்களை கைது செய்யவும், தடுத்துவைக்கவும், சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதிகாரத்தையும் படைத்தரப்பினருக்கு வழங்கியுள்ளமையானது, மீண்டும் வீதித்தடைகள், சோதனை நிலையங்கள் காவல் அரண்கள் ஆகியவற்றை படைத்தரப்பினர் உருவாக்கிப் பலப்படுத்தும் அவசரகாலப் பணிகளை மேற்கொள்ளவைத்துள்ளது.

இது பாதுகாப்பு என்ற பெயரில் விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கு காரணமாகப் போகிறது என்பதில் ஐயமில்லை. கொழும்பில் கடந்த 08ஆம் திகதி சனிக்கிழமை மட்டும் தேடுதல் நடவடிக்கையின்போது 45 பேரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளமையானது மீண்டும் ஓர் அமைதிக் குலைவு நிலைக்கான முன்னெச்சரிக்கையாக உள்ளது.

மீண்டும் ஒரு சந்திரிகா யுகம் தோன்றும் அபாயம் குறித்து மக்கள் அச்சம் அடையத் தொடங்கியுள்ளனர்.

ஊடகத்துறையை பொறுப்பேற்றதும் அதிரடியாக அவர் அரச ஊடக அமைப்புகளில் செய்துள்ள பதவி மாற்றங்கள் சர்வாதிகாரத்தனமானவை. இதன் மூலம் ஊடகங்களினூடாக உண்மைகள் வெளிவருவது கட்டுப்படுத்தப்படும் என்பது தெளிவு. இந்தவகையில் பிரகடனம் செய்யப்படாத ஒரு செய்தித் தணிக்கையைக் கூட சனாதிபதி அமுல் செய்யமுடியும்.

இவையனைத்தையும் மேற்கொண்டதன் மூலம் சந்திரிகா தன்னைப்பாதுகாக்க விரும்பியுள்ளாரா, தேசத்தின் பாதுகாப்பை கவனத்தில் எடுத்துள்ளாரா என்பது தான் கேள்வி.

தேசத்தின் பாதுகாப்பு அவரின் சமாதானத்திற்கான யுத்தகாலத்திலேயே பெரும் அச்சுறுத்தல்களுக்குள்ளாகி இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். சமாதான காலத்தில் சிறிலங்காவின் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்குள்ளாகி விட்டுள்ளது எனச் சந்திரிகா கூறுவதானது வலிந்து கூறப்படும் ஒரு பொய்யான காரணமேயாகும்.

காரண காரியங்களை முன்னிட்டு சந்திரிகா எதுவுமே செய்வதில்லை என்பதும், தனது சொந்த அபிலாஷைகளுக்கேற்பவே அனைத்தையும் மேற்கொள்வார் என்பதும் அனைவரும் அறிந்த உண்மை. யுத்தமானாலும் சரி சமாதானமானாலும் சரி, இந்த அடிப்படையில் தான் அவரது அணுகுமுறைகள் அமைந்திருக்கும். இதனால் தான் யுத்தத்தையும் அவரால் எதிர் கொள்ள முடியாது போய்விட்டது. சமாதானத்தையும் அவரால் ஏற்படுத்தமுடியாமற் போய்விட்டது.

ஆகவே தான் சமாதானத்திற்கான யுத்தம் என்ற குழப்பக் கோட்பாட்டை அறிமுகப்படுத்தி அவலப்பட்டார்.

இப்போது பாதுகாப்புக்காகப் பதவிப்பறிப்பு என்றுள்ளார். உண்மையில் இது பதவிப்பறிப்பே பாதுகாப்பு என அவர் நினைத்ததன் எதிரொலியேயாகும்....

## காய் வெட்டலும்... காய் நகர்த்தலும் ____



அமெரிக்கா போகு முன் ரணிலுக்கு இருந்த உஷாரைவிட இப்போது அங்கிருந்து திரும்பி வந்த பின்னர் அதிகம் போலுள்ளது.

அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் புஷ் ரணிலின் தோளில் கைபோட்டபடி புன்னகைக்கும் புகைப்படமானது எதிர்க் கட்சியினருக்கு வயிற்றில் புளி கரைக்கும் படலமாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

அதனை விடவும் ரணிலின் அரசுக்கும் அதன் சமாதானச் செயற்பாடுகளுக்கும் அமெரிக்காவினதும்,சனாதிபதி புஷ்ஸினதும் ஆதரவு முழுமையாக இருக்குமென்ற வெள்ளை மாளிகையின் அறிவிப்பு, சனாதிபதிக்கும் எனைய அவது பரிவாரங்களுக்கும் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதிலும் சந்தேகமில்லை.

உலக வல்லரசு இப்போ ரணிலின் பக்கம்.

ரணிலின் உச்ச மொத்தப் பலமும் அதுவேயாகும்....

புஷ் சொல்வதற்கு ஆமா போட, அவுஸ்ரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே, டென்மார்க்,... என ஒரு வில்லுப்பாட்டு அணியே அவரின் பின்னால் அணிவகுத்து நிற்கிறது.

அவர்கள் ரணிலின் பின்பலமாக இருப்பர் என்பதில் சந்தேகமில்லை. சிறிலங்காவின் திறைசேரி நிறைய இவர்களின் கருணை வேண்டும். இவர்களைப் பகைத்துக்கொண்டோ, எதிர்த்துக்கொண்டோ சந்திரிகாவால் எந்த வகையிலும் ஆட்சி நடத்த முடியாது.

அதேபோல் தான் இவர்கள் அனைவரும் சமாதான நகர்வுகளுக்கான பின்னுதைப் பாளர்களாகவும் இருப்பதனால் சந்திரிகா ரணிலின் சமாதான நகர்வுகளுடன் முரண்படவும்முடியாது.

இப்போது ரணிலின் பாதுகாப்பு கவசங்களாக சர்வதேசமும், சமாதான சுலோகமும் உள்ளன.

இதில் எந்த ஒன்றையும் நிராகரித்து விட்டு தன்னால் எதுவும் செய்ய முடியாது என்பதை சந்திரிகா புரிந்துகொண்டு விட்டார் என்பதும் தெளிவு.

ஆனாலும் கௌரவப்பிரச்சினை விடுவதாக இல்லை.

பிடித்ததை விடவும் முடியாது, விட்டால் பிறகு பிடிக்கவும் முடியாதென்ற நிலை சந்திரிகாவுக்கு.....

விட்டதை பிடிக்கவேண்டும், பறித்ததை பிடுங்க வேண்டும் என்ற நிலை ரணிலுக்கு. முக்கிய அமைச்சுக்களை சனாதிபதியிடம் பறி கொடுத்துவிட்டு செயலற்ற போலி அரசொன்றை நிர்வகிப்பதில் ரணிலுக்கு எவ்வித பெருமையும் இல்லை. ரணிலிடம் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு நிறைவேற்று அதிகார சனாதிபதியாக இருப்பதில் சந்திரிகாவுக்கும் எதுவுமில்லை. ஆக.... இருவரும் என்ன செய்யப் போகிறார்கள்.....?சந்திரிகா புத்திசாலித்தனமாகத்தான் நிதியமைச்சை பொறுப்பேற்கவில்லை. நிதியற்ற ஓர் அரசில் நிதியமைச்சராக இருக்கும் சிக்கலை அறிந்தவரல்லவா?

இப்போது நிதியை தேடிக்கொள்ளக்கூடிய வழி ரணிலின் கையில் இருப்பதுவும் சந்திரிகாவுக்குத் தெரியும்.... அதுவும் வரவு- செலவுத்திட்ட நேரமிது.... இப்போது பொறுப்பேற்றால் ஒன்றும் செய்ய முடியாது. சந்திரிகா புத்திசாலித்தனமாக காய்களை வெட்டுவதாக நினைக்கிறார். ரணிலோ தந்திரோபாய ரீதியில் காய்களை நகர்த்துவதாக நினைக்கிறார். நாட்டின் அரசியல் சதுரங்கக் களத்தில் யூகங்களும், வியூகங்களும் மோதிக்கொள்ளும் நேரம்.

பாவம் சமாதானம்.......! பரிதாபம் தேசம்......!!

## சந்திரிகாவின் அதிரடிகள் பெற்று வரும் பதிலடிகள்



சிறிலங்கா சனாதிபதி சந்திகாவினால் மேற்கொள்ளப்பட்ட அதிரடி நடவடிக்கையினால் அரசியல் நிலைமைகள் குழப்பமடைந்துள்ள நிலையில், சந்திரிகா தான் எல்லாரிலும் அதிகம் குழம்பியுள்ளார் போல் தெரிகிறது.

ஏதோ நினைத்து ஏதையோ செய்ய அது வேறு என்னமோவாக மாறிவிட்ட நிலையில் அம்மணி அலமலந்து நிற்பதாகக் கேள்வி.

தனது நடவடிக்கை மூலம் அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்யப்போய் தானே இப்போது அதிர்ச்சியடைந்துவிட்டுள்ளார்.

தனது நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பை காரணம் காட்டிய சந்திரிகா அதனை நிரூபிக்க காட்டிய ஆதாரங்கள் எவையும் பிரதமர் நாட்டில் இல்லாத நேரம் பார்த்து அமைச்சர்களை தன்னிச்சையாக தனது அதிகாரபலத்தைப் பிரயோகித்து பதவி நீக்கியதுடன் அந்த அமைச்சுக்களையும் தம்வசமாக்கிய ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு, நியாயம் கற்பிக்க போதுமானவைகளாக இல்லை.

இதேவேளை ரணிலோ சந்திரிகாவின் அதிரடிகளுக்கு அசைந்து கொடுப்பவராகவும் இல்லை. அவரது நோக்கமெல்லாம் பாராளுமன்றத்தில் தனது பலத்தை உத்தரவாதப்படுத்துவதிலும், மக்களிடையேயான தனது செல்வாக்கை நிரூபித்துக்காட்டி சனாதிபதிக்கு பதிலடி கொடுப்பதிலேயே கவனமாக இருப்பது தெரிகிறது.'

சந்திரிகாவால் மேற்கொள்ளக்கூடிய அதியுச்ச நடவடிக்கையான பாராளுமன்றக் கலைப்பையும் கூட ரணில் சாவகாசமாக எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவே காட்டிக்கொள்கிறார்.

அமைச்சுப் பதவிகளைக் கைப்பற்றிய சூட்டுடன், அவசர கால நிலைமையை பிரகடனம் செய்ய முயன்று, முயன்ற வேகத்திலேயே பின்வாங்கி தான் அப்படி எதனையும் செய்யவில்லை என அறிக்கை விட்டதில் சந்திரிகாவின் உறுதியின்மை தெளிவாகியது.

ரணில் தனது மக்கள் செல்வாக்கை காட்ட விமான நிலையம் முதல் கொழும்பு வரை ஏற்படுத்திய பேரணியின் முன்னே, சந்திரிகாவின் ஆதரவு சக்திகள் நடத்திய பேரணி சுருண்டு போயிற்று.

புலிகளுடன் பேசத் தயார், போரைத் தொடரப் போவதில்லை என்று கூறியதன் மூலம் பேரினவாதிகளின் எதிர்பார்ப்பை நொருக்கிவிட்ட சந்திரிகா கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள், புரிந்துணர்வு ஒப்பந்த செயற்பாடுகள் தொடரும் என அறிவித்ததன் மூலம் கடந்த சில வாரங்களாக எழுந்திருந்த சமாதான எதிர்ப்பு - நோர்வே எதிர்ப்பு நிலைப்பாட்டிலிருந்து சறுகுவதையும் வெளிப்படுத்தி விட்டார்.

அவர் எதிர்பார்த்த இந்தியத் தரப்பு ஆதரவும் சாத்தியமில்லாது போய்விட்டதில் சந்திரிகா ஆடித்தான் போய்விட்டார்.

இப்போது சர்வதேச சமூகம் சமாதானத்தின் பின்னாலும், ரணிலின் பின்னாலும் அணிதிரண்டு நிற்பதில் அரண்டு போன சந்திரிகா தேசிய அரசமைக்க அழைப்பு விடுத்துவிட்டு காத்திருக்கிறார்.

அவர் மூன்று குட்டு கொடுக்கப்போய் இப்போது முப்பது குட்டு வாங்கும் நிலையில் முழுசிக் கொண்டிருக்கிறார்.....

நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியும் கூட இன்னமும் தனது எண்ணம் நிறைவேறவில்லை என்பதில் சந்திரிகா அலமலந்து தான் நிற்கிறார்....

கூடாத கூட்டங்கள் கூடுவானேன்....
கூடாத கூட்டங்கள் கூடினாலும் கூடங்கள் மாடங்கள் ஏறுவானேன்.......
கூடங்கள் மாடங்கள் ஏறினாலும் நாதங்கள் கீதங்கள் பாடுவானேன்.....
என்று பாடத்தான் தோன்றுகிறதல்லவா.....?

## துச்சாதனனாகப் போகும்... அநுரா ____



அக்காவின் அதிரடியால் ஆகாயத்தில் பறப்பவர் தம்பி தான். சந்திரிகாவையும், அநுராவையும் தான் கூறுகிறேன்.

ஏதோ தனது அற்புதமான, அதிவிவேகித்தனமான ஆலோசனைகளால் தான் சந்திரிகா இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டதாக நினைக்கும் அநுரா வழக்கத்திலும் பார்க்க சற்று அதிகமாகவே தனது அரசியல் அலட்டல்களை அலறிக்கொண்டிருக்கிறார்.

அமைச்சர்கள் மட்டுமல்ல, ரணில் விக்கிரமசிங்கா - அதாவது பிரதமர் கூட முரண்டுபிடிப்பார்களேயானால் கைது செய்யப்படுவார்கள் என அநுரா அதிகப் பிரசங்கித்தனமாக அறிக்கை விடுத்திருப்பதை அலறல் அல்லது உளறல் என்று சொல்லாமல் வேறு என்ன வென்று வர்ணிப்பதாம்! பதவி நீக்கப்பட்ட அமைச்சர்களே கைது செய்யப்படவில்லை. அதற்குள் பிரதமருக்கு கைதாணை அனுப்பத்தயாராகிறார் அநுரா. அதுதான் அநுராவின் அரசியல் கோமாளித்தனம்.

எல்லாவற்றைவிடவும் மற்றொரு முக்கியமான - மிரட்டலுடன் கூடிய அதிர்ச்சியூட்டும் அறிக்கையையும் தனது வாய் மொழியாக பகிரங்கமாகவே வெளியிட்டுள்ளார்.

இது மிகவும் முக்கியமான, பௌத்த சிங்கள பேரினவாதிகள் அவசியம் கருத்தூன்றிக் கவனிக்க வேண்டிய - மகாசங்கத்தினர் மகா எச்சரிக்கையுடன் ஜீரணித்துக் கொள்ளவேண்டிய - விடயமாகும்.

அதாவது சனாதிபதியின் ஆலோசகர் தான் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

'கண்டியில் உள்ள மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகள் நாட்டின் நிலமை தெரியாமல் அறிக்கைவிடுகிறார்கள்...' இது அநுரா தெரிவித்த முதல் விடயமாகும்.

இதன்மூலம் அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகள் நாட்டின் நிலமை அறியாது அலம்பிக் கொண்டிருக்கிறார்கள்... அவர்கள் பேச்சை யாரும் கேட்காதீர்கள்.. அவர்களுக்கு அரசியல் நடவடிக்கைகள் தெரியாது என்பதை நாட்டுமக்களுக்கு அநுரா பகிரங்கப்படுத்தியுள்ளார்.

நல்லது - அடுத்து அவர் கூறுவதை கவனியுங்கள். இது மிக முக்கியமானது 'இந்தப் பீடாதிபதிகளுள் கலகொட ஞானேஸ்வரதேரர் முக்கியமானவர். இவர் மறைந்த எனது தாயை விமர்சித்தவர்... நான் இவரின் காவியுடையை ஒரு நாள் பகிரங்க இடத்தில் வைத்து கழற்றுவேன்...

இது வெறும் வார்த்தைகள் அல்ல... அச்சுறுத்தல்....

ஒரு பௌத்த பீடாதிபதியின் மரியாதைக்குரிய அங்கியை பகிரங்கமான இடத்தில் வைத்து உரியப்போகிறாராம் அநுரா... இதனை மகா சங்கம் எப்படிப்பார்க்கப் போகிறதாம்!

நாட்டின் சனாதிபதியின் ஆலோசகர், இரு முன்னாள் பிரதமர்களின் மகன், எதிர்காலத்தில் சனாதிபதியாகும் கனவில் மிதப்பவர் துச்சாதனனாக மாறப்போகிறார் என்றால்....

பாவம் கலகொட ஞானேஸ்வர தேரர்...

இனிமேல் அநுரா பகிரங்கமான இடங்களில் ஓட்டம் பிடிக்கப் போகிறார்? என்னடா... மஹாசங்கத்திற்கு வந்த சோதனை!

-செங்குட்டுவன்-

செய்வதற்கு ஒன்றும் இல்லாதிருப்பதே, சுமைகளில் பயங்கரமானது. - நிக்கோலா புவாலோ

# சமாதானம் இப்போது ஒரு அஸ்திரம்

சிறி. இந்திரகுமார்



சமாதானம் இலங்கையில் பல பிறவி எடுத்துவிட்டது.

இதனால் சமாதானத்திற்கு பல அவதாரங்கள் உண்டு. இதன் பயனாக சமாதானத்தின் இறுதி வடிவமாக அது ஒரு அஸ்திரமாகிவிட்டது.

இந்த சமாதான அஸ்திரத்தை எந்த தளத்திலிருந்து பிரயோகப்படுகிறதோ அந்த தளத்தின் இசைவுக்கு ஏற்ப அது ஒவ்வொரு பிரயோக வடிவங்களையும் பெற்றுக்கொள்கிறது.

ஆக சமாதானம் இலங்கையில் ஒரு அஸ்திரமாக பயன்படுத்துவது என்பதை எவர் மறுத்துரைக்க முடியும்?

சந்திரிகாவை வீழ்த்த ரணில் சமாதானத்தை அஸ்திரமாக பிரயோகிக்கத்தொடங்கினார்.

ஆனால் சந்திரிகாவோ நோர்வேயின் உதவியுடன் சமாதானத்தை ஆரம்பிக்க முதல் காரணியாக இருந்தபோதும் சமாதான அஸ்திரம் கைமாறிப் போய் விட்ட நிலையில் எதுவும் செய்ய முடியாத நிலையிலிருந்தார்.

இதனைப் பயன்படுத்திய ரணில், சமாதானம் என்கிற அஸ்திரத்தை பலமாகவே பிரயோகிக்க தொடங்கியிருந்தார்.

ஏறத்தாள சந்திரிகாவுக்கு சமாதானம் அவுஸ்ரேலிய பழங்குடியினர்களால் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் "பூமாராங்" என்கிற ஆயுதத்தை தவறாக பயன்படுத்திய ஒருவரின் நிலைக்கே கொண்டு சென்றிருந்தது.

எப்படியென்றால் இந்த பூமாராங் என்கிற ஆயுதத்தை எவர் மீது பிரயோகிக்கப்படுகிறதோ அவரை தாக்கிவிட்டு மீண்டும் எய்தவரின் கரங்களை வந்து சேர்ந்துவிடும்.

ஆனால் அதனை தவறாக பயன்படுத்தினால் பிரயோகிப் பவரையே அது தாக்கிவிடும்.

இந்த நிலைதான் சந்திரிகாவுக்கு. மூன்றாம் கட்ட ஈழப் போரின் இறுதிகளில் இலங்கையின் சமாதானத்தை ஏற்படுத்து வதற்காக என நோர்வேயை சந்திரிகா அணுகி, பின்னர் அது ஐக்கிய தேசிய முன்னணி அரசின் கைகளிற்கு மாறிய போதும் இருந்தது.

இப்போது ஐக்கியதேசிய முன்னணி அரசின் கரங்களிலிருந்து மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை கைப்பற்றிய பின்னர் ஏற்படுகின்ற எதிர் வினைகளும் அத்தகைய ஒரு நிலையையே ஏற்படுத்தியுள்ளது.

ஒட்டு மொத்தத்தில் சந்திரிகாவுக்கு சமாதானத்தை தனக்கு எதிராகப் பயன்படுத்த ஒரு அஸ்திரமாக நோக்க வேண்டிய நிலையை ஏற்படுத்திவிட்டது.

இது இப்படியிருக்க தென்னிலங்கை இருப்பு அரசியலில் ஏற்பட்டுள்ள கொதி நிலையையடுத்து புலிகள் மௌனம் சாதித்து வந்த நிலையில் தமது எந்தவிதமான கருத்து நிலைகளையும் வெளிப்படுத்தாது ஒரு பார்வையாளர் போன்ற நிலையிலிருக்க:

ரணில் சந்திரிகாவை வழிக்கு கொண்டு வர முக்கிய அமைச்சுப் பொறுப்புக்கள் ஐக்கிய தேசிய முன்னணி அரசு வசம் இல்லாததால் சமாதானத்தை சனாதிபதி சந்திரிகாவே தொடர் வது பொருத்தப்பாடானதாக இருக்குமென்று ஒரு தகவல் ஊடாகவும்,

அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு திரும்பியவுடன் சமாதானத்திற்காக மக்கள் தந்த ஆணையை நான் நிறைவேற்றுவேன் என இன்னொரு புறமுமாக வெவ்வேறு வடிவமாக சமாதான அஸ்திரத்தை பிரயோகிக்க:

சனாதிபதி சந்திரிகாவோ புலிகளுடன் பேச தயாராக இருப்பதாகவும் சமாதானத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது எனவும்,

ரணில் சமாதானப் பொறுப்பை சனாதிபதி ஏற்க வேண்டுமென்பதற்கு சனாதிபதி அதற்கு தயாராகவே இருக்கிறார் என எதிர்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ பதில் கொடுத்ததன் ஊடாக ஒரு புறமும் சமாதானம் நேர் எதிர் அஸ்திர வடிவம் பெற்று உள்ளது.

சர்வதேச சமூகமோ இலங்கையில் சமாதான முயற்சிக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் செயற்பட்டால் மட்டுமே சர்வதேச உதவிகள் வழங்கப்படும் என ஒரு புறமும் தனது இராஜதந்திரிகளூடாக சனாதிபதி சந்திரிகாவுக்கு நேரடியாகவே கடும் தொனியிலான சமாதான அஸ்திரப் பிரயோகிப்பை மேற்கொள்ள,

இலங்கைத்தீவிற்குள் ஆளும் கட்சி, எதிர்கட்சி, சர்வதேச சமூகம் என சமாதான அஸ்திரப் போராட்டம் இந்த இரண்டு வாரங்களாக கடுமை பெற்றுள்ளது.

ஆனால் புலிகளோ சமாதானத்தை ஒரு அஸ்திரமாக நோக்காது சமாதானத்தை தமிழ் மக்களின் வாழ்வாக சமர்ப்பித்து காத்திருக்கிறார்கள்.

சமாதானத்திற்கு கேடு புலிகளின் பக்கம் இருந்தே வரும் என உலகுக்கெல்லாம் சொல்லி சொல்லி தென்னிலங்கை அரசு மையம் சர்வதேச வலைப் பொறியை பின்னிக்கொண்டிருக்க;

புலிகளோ சமாதானத்திற்கு பலமாக நம்பிக்கை தரும் வகையில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் (ISGA) திட்ட வரைபை சமர்ப்பித்து காத்துள்ள நிலையில் சமாதானத்திற்கு கேட்டை நாட்டின் சனாதிபதி ஏற்படுத்தினார்.

வழமையாக சமாதானத்தின் பெயரால் புலிகளை சீண்டுவதும் தமிழ்மக்களை பலவீனமாக்க முயல்வதன் ஊடாக தென்னிலங்கை அரசுகள் யுத்தத்தை தூண்டுவது வழமை.

ஆனால் இந்த முறை இது பலிக்காது. பொறுமை இழந்துபோய் சமாதானத்திற்கு கேடு விளைவிக்கும் பாங்கை நேரடியாக கையேற்று நிற்கிறார் சந்திரிகா.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இரண்டு பிரதான கட்சிகளையுமே ஒரே நிலையிலேயே நோக்கும் பாங்கு காணப்படுகிறது.

இதனை ரணில் கூறுவது போல தென்னிலங்கை அரசியல் போராட்ட பருவமழை தொடரும் நிலையில், தணியும் வரை தமிழ் மக்கள் காத்திருக்க வேண்டுமா?

இந்த நிலையில் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த அதிக கரிசனை வேண்டுமா அல்லது இலங்கையில் கொழும்பு அரசியல் தலைமைகளுக்கிடையிலான ஒற்றுமையை ஏற்படுத்த அதிக கரிசனை வேண்டுமா என்பதையெல்லாம் தீர்த்து தமிழ் மக்களிற்கான தீர்வை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளவேண்டுமா என்பதை தீர்மானித்துக் கொள்ள வேண்டிய தருணம் இது.



ஏனென்றால் இலங்கையின் அரசியல் இழுபறி பருவமழை என்பது ரணில் வென்று சந்திரிகா தோற்பதாலோ, அல்லது சந்திரிகா வென்று ரணில் தோற்பதாலோ தீர்ந்து விடப்போவதில்லை.

தமிழ்மக்களிற்கான ஒரு தீர்வுக்கு முயலும் போதெல்லாம் தென்னிலங்கை அரசியல் இழுபறி பருவமழை பெய்து கொண்டேயிருக்கும்.

இதை நம்பி தமிழ் மக்கள் எப்படி தங்களை பலவீனமாக்கிக்கொள்ளமுடியும்.

ஏறத்தாள இந்த சமாதான அஸ்திரப் போராட்டமானது மகாபாரதத்தில் கர்ணனிடம் இருந்த நாகாஸ்திரத்தை ஒரு தடவைக்கு மேல் அர்ச்சுணன் மீது பிரயோகிக்கக்கூடாது என குந்தி வேண்டியவரம் போல எவரும் வாங்கமாட்டார்கள் என்பதால் இந்த சமாதான அஸ்திரம் ஆட்சி கதிரையைப்பிடிக்க இலங்கையில் மாறி மாறி பிரயோகித்துக் கொண்டே இருக்கப் போகிறார்கள்.

இது எதுவரை தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க வழிவகுக்கப்போகிறது.

சமாதானத்தின் பெயரால் ரணில் தன்னை பாதுகாத்துக் கொள்ளவும் அதன் பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு வரும் என காத்திருக்க வேண்டுமா என்பதெல்லாம் இப்போதுள்ள கேள்வி.

இந்த நிலையில் சமாதானம் மலர்ந்து தமிழ் மக்களிற்கான இயல்பு வாழ்வு எப்போது திரும்புவது.

இதுவரை தமிழ் மக்களுக்கு சமாதானத்தின் அறுவடையாக எதனையும் வழங்காதவர்கள் ரணிலுக்கான பாதுகாப்பிலூடாக எதை வழங்கப் போகிறார்கள்.

தமிழ் மக்களின் இன்னல்கள் ஊடாக எவரையும் ஒரு வரையறைக்கு அப்பால் பாதுகாக்க முடியாது.

ஏனென்றால் சர்வதேசத்தின் விழிகளுக்கு தெரியாத இலங்கையின் அரசியல் குழறுபடிகள் தமிழ் மக்களிற்கு தெளிவாகவே தெரியும்.

## மதவடி மயிலர்



**செய்தி** : சனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கா மீது மூன்று நம்பிக்கையில்லாப் பிரேரணைகள்!

**மயிலர் :** *சந்திரிகாவுக்கு ரணிலில் நம்பிக்கையில்லை..... அமைச்சர்களில் நம்பிக்கையில்லை..... நோர்வேயில் நம்பிக்கையில்லை. புலிகளில் நம்பிக்கையில்லை..... சந்திரிகா மீது அரசுக்கு நம்பிக்கையில்லை...... சந்திரிகா தனக்கு நம்பிக்கையில்லாதோரையும், அரசு சந்திரிகாவையும் தூக்கியெறியவே முனைகின்றனர் பாருங்கோ... எதிலும் நம்பிக்கையில்லாதவர்களை நம்பி நாட்டை கொடுத்ததாலை நம்பிக்கெட்டவர்கள் சிறிலங்காவின் மக்கள் தான் பாருங்கோ.....*

**செய்தி** : அரசு, புலிகள் சமாதானப்பேச்சு சர்வதேச ஆதரவைப் பெற்றுள்ளது என்கிறார் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர்.

**மயிலர் :** *சர்வதேச ஆதரவைப் பெற்றென்ன... சந்திரிகாவின் ஆதரவைப் பெறாமல் என்னபயன் பாருங்கோ.... சமாதானத்தை ஆதரிக்கும் சர்வதேசம் சந்திரிகாவுக்கும் அழுத்தத்தை கொடுக்க வேணும்.... அழுத்தம் இல்லாமல் ஆதரவு இல்லை.... என்ன நான் சொல்லுறது விளங்குகிறதா......*

**செய்தி** : படையினருக்கு பொலிஸ் அதிகாரம் சனாதிபதி சந்திரிகா வழங்கியுள்ளார்.

**மயிலர் :** *நல்ல வேளை.... படையினருக்கு சனாதிபதி அதிகாரத்தை வழங்கவில்லை.... அதை வழங்கினால் அவவுக்கெல்லே ஆபத்து.... ஏன் ஊடகத்துறை அதிகாரத்தையும் அவைக்கு வழங்கியிருக்கலாமே....! தணிக்கை உத்தரவு பிறப்பிக்காமலேயே எல்லாம் தணிக்கையாகி வருமெல்லே.... அதிகாரம் கூடினா இப்படித்தான்.... ஆடாத ஆட்டமெல்லாம் ஆடச்சொல்லும் பாருங்கோ.....*

**செய்தி** : இராணுவ வாகனம் மோதி மூன்று பொதுமக்கள் படுகாயம்.

**மயிலர் :** *இயமன் எருமைமாட்டை விட்டிறங்கி இராணுவ வாகனங்களில் பவனி வர ஆரம்பிச்சிட்டான் போல இருக்கு..... அது என்ன அதிசயம்..... பொது மக்களை இலக்குவைச்சு மட்டும் இராணுவ வாகனம் மோதுது பாருங்கோ..... இனிமேல் ஆமி வாகனத்தைக் கண்டா சாமியைக் கும்பிட வேணும் பாருங்கோ காப்பாத்தடா சாமியென்று...*

**செய்தி** : ஈராக்கில் அமெரிக்க உலங்கு வானூர்தி சுட்டு விழுத்தப்பட்டது, ஆறு படையினர் பலி.

**மயிலர் :** *ஆழமறியாமல் காலை விட்டால் அவலம் இப்படித்தான் வரும் பாருங்கோ.... என்னடா அமெரிக்காவுக்கு வந்த சோதனை..... என்று புஷ் புலம்புவது சதாமுக்கு கேட்காமல் இருக்காது.... ஆனால் புஷ் விழுந்தாலும் மீசையிலை மண் படேல்லை எண்டுதானே சொல்லுறார்...*

நேர்நோக்கு

# உச்ச நிலையில் அதிகாரப் போட்டி

தென்னிலங்கையில உச்சமடைந்திருக்கின்ற அதிகாரப் போட்டியும் அதனால் கடந்தவாரம் இடம்பெற்ற அதிரடி மாற்றமும் தமிழ் மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பொதுவாகவே இம் மாற்றங்கள் தமிழ் மக்களுடைய வாழ்வு நிலையில் பயன் தருவதில்லை என்பது வெளிப்படையாகும். ஆனால் அவை தமிழ் மக்களின் வாழ்வில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்ற மையும் உண்மையாகும்.

இந்த அதிகாரப்போட்டியின் உச்ச நிலையானது தமிழ்மக்கள் மீதே பெரும் பாதகங்களைச் சுமத்திவருவது வழமையாகும். இங்கு பலவீன நிலையிலுள்ள சக்தி, தான் பலம் பெறுவதற்கு ஒரேவழியாக தமிழ் மக்களுக்கு எதிரான செயற் பாடுகளை செய்து வந்துள்ளது. இன்று பலவீனமான சக்தியாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இருப்பதானது தமிழ் மக்களுக்கு இந்த அச்சத்தை மேலும் வலுப் படுத்துகிறது.

20வருட கால தொடர்ச்சி யான யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட அமைதி நிலை, பெரும் ஈகங்களுக்கு மத்தியில் நடத்திய போராட்டம், அதன் காரணமாக அமைதி வழியில் உரிமைகளுடன் கூடிய ஒரு தீர்வுக்கு அவாவி நிற்கின்றனர் தமிழ் மக்கள்.

இந்த முயற்சியின் அடித்தளமாக அமைந்தது புரிந்துணர்வு ஒப்பந்தம். கடந்த 22 மாத காலமாக நடை முறையில் இருக்கின்ற ஒப்பந்தத்தின் முற்று முழுதான பலனை தமிழ் மக்கள் இன்னமும் அனுபவிக்கவில்லை. எனினும் அமைதி வழியிலான நல்லதொரு தீர்வு கிட்டலாம் என்பதற்கு நம்பிக்கையாக இது இருக்கின்றது.

இந்த ஒப்பந்தத்திற்கு ஆரம்ப முதலே எதிர்புத் தெரிவித்து வருபவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. உடன்பாடு ஏற்படாது தடுக்க எடுத்த முயற்சிகள் தோல்வி கண்ட நிலையில், அதன் நடைமுறைக்கு பல முட்டுக்கட்டைகளை அவர் போட்டு வந்தார். அதேவேளை பல ஒப்பந்த மீறல்களுக்கு அவரே தூண்டுதலாகவும் இருந்து வந்துள்ளார்.

இவ் ஒப்பந்தம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? எனக் கண் காணிக்க வந்துள்ள சர்வதேசக் கண்காணிப் பாளர்கள் மீது இவர் பகையுணர்வுடனேயே காணப்படுகிறார். இப்பொழுது கண்காணிப்புக் குழுத் தலைவர் மாற்றப்பட வேண்டும் என்பதில் பிடிவாதமாக உள்ளார்.



இப்பொழுது இவ் உடன்பாட்டை நடைமுறைப்படுத்தவேண்டிய ஒரு தரப்பின் முழுக்கட்டுப்பாட்டையும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே பெற்றுக்கொண்டுள்ளமையானது தமிழ் மக்கள் தரப்பில் பல கேள்விகளை எழுப்புவதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

தானேமுற்று முழுதாக எதிர்த்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தொடர்ந்து கடைப்பிடிக்கப்போவதாக சனாதிபதி சந்திரிகா கூறுவது, அவரது குணவியல்புகளை நன்றே தெரிந்துகொண்டுள்ள தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் எனக் கூற முடியாது.

இது போலவே சமாதான முயற்சி களின் நிலையும் காணப்படுகின்றது. நோர்வே அனுசரணையுடனான சமாதான முயற்சிகளைத் தானே ஆரம்பித்து வைத்ததாக அடிக்கடி தனக்குத் தானே புகழ்மாலை சூடிக்கொள்ளும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அந்த முயற்சிகளுக்கு எதிரான செயற்பாடுகளிலேயே ஈடுபட்டுவருகின்றார்.

சமாதானத்துக்கானது என்ற பெயரில் அவர் நடத்திய யுத்தம் பாறையில் முட்டி நின்ற வேளை நோர்வேயை அழைத்த அவர், அனு சரணையாளர் மீதே தனது ஆட்சிக்காலத்தின் போது பழிசுமத்தத் தவறவில்லை. இன்றும் கூட நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாக அவர் இல்லை. நோர்வேயோடு மட்டுமல்ல சமாதான முயற்சியில் ஈடுபடும் எவரையும் அவர் மதிப்பதில்லை. அவர்களை யும் பகை உணர்ச்சியுடனேயே பார்த்து வருகிறார். இவர்களை மட்டுமல்ல என்றுமே நல்ல புத்தி சொல்பவர்களை சந்திரிகாவுக்குப் பிடிப்பதில்லை.

இந்நிலையில் சமாதான முயற்சிகள் குறித்த நம்பிக்கையும் தமிழ் மக்கள் மத்தியிலே அருகிவிடக்கூடிய சூழ்நிலையே காணப்படு கின்றது.

அடுத்ததாக எவ்வாறாயினும் பாராளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்றி விடுவதற்கான போட்டியை வலுப்படுத்த அடுத்துவரும் காலங்களில் அவர் முயலப்போகின்றார். இந்த அதிகாரப்போட்டியில் பாதுகாப்பு அமைச்சைக் கைப்பற்ற அவர் கூறிய காரணங்கள் கற்பனையானவை என்பது மட்டுமல்ல, அது பாதுகாப்பு அமைச்சருடன் சேர்த்து தமிழர் தரப்பு மீதும் குற்றம் சுமத்துகிறது.

இந்தப்போக்கு இத்துடன் நின்று விடாது நாட்டுக்கே அச்சுறுத்தலாக தமிழர்கள் இருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டையும் அவர் முன்வைக்கத் தயங்கமாட்டார்.

ஆனால் இந்த அதிகாரப்போட்டியில் பாதிப்படையப்போவது தமிழ் மக்கள் மட்டுமல்ல என்பதும் வெளிப்படையாகும். கடந்த 22 மாதங்களாக தென்பகுதி மக்கள் புரிந்துணர்வு உடன்பாட்டின் பயன்களை அனுபவித்து வருகின்றனர். சமாதான முயற்சிகள் வெற்றி பெறுமானால் அதன் பயன்களை அவர்களுமே பெறப்போகின்றனர்.

கடந்த இரு வருடங்களுக்கு முன்பிருந்த நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட சூழல் தென்பகுதி மக்களுக்குக் கிடைத்தது. ஆனால் சனாதிபதியின் அதிரடி நடவடிக்கை இடம்பெற்று மறுதினமே மீண்டும் அவ்வாறான சூழல் தோற்றம் பெறுவதறகான காட்சிகள் தென்னிலங்கையில் விரிந்தன. இது அம் மக்களுக்கு சந்திரிகா வழங்கிய எச்சரிக்கை என்றே கூறவேண்டும்.

அதாவது வடக்கு கிழக்கில் போர் மூண்டால் மட்டுமல்ல தென்பகுதி அரசியல் நெருக்கடி தீவிரமடையுமாயினும் அதே நிலையே தோன்றுமென இரு நாட்கள் மட்டுமே ஆயுளைக்கொண்ட அவசரகாலச் சட்டம் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

அதிகாரப்போட்டி மேலும் வலுவடையும் சூழலே காணப்படுகின்ற நிலையில் இதன் விளைவுகள் தென்பகுதி மக்களுக்கு பெரும் பாதகங்களை ஏற்படுத்தவே போகின்றது. உண்மையில் தென்னிலங்கையில் அரசியல் சூறாவளி வலுவடையுமாயின் அதில் அதிகாரத்துக்குப் போட்டியிடும் தரப்புகள் கூட சிக்கிக்கொள்ளவே வாய்ப்புகள் உண்டு.

வேலவன்

# தேசிய விளையாட்டு விழாவில் தமிழ் மொழி புறக்கணிப்பு

கடந்த வருடம் நடைபெற்ற 28வது அகில இலங்கை விளையாட்டு விழாவில் விளையாட்டு அமைச்சரின் உரையில் 29வது விளையாட்டுப் போட்டி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்றே சூழ் உரைத்தார். அன்றைய காலம் இலங்கை அரசிய லில் சமாதானத்திற்கான காலகட்டத்தின் அடிப்படை நாட்களாக அமைந்திருந் தது.

கடந்த 20 வருடங் களாக தென்னிலங்கை அமைச்சர்கள் எவராலும் கற்பனையிட முடியாத சிந் தனை ஒன்று விளையாட்டு அமைச்சருக்கு வந்ததே வியப்பு வாய்ந்தது என்றே கூறவேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி எழுதப் பட்ட சரத்துக்களின் ஒழுங் குகளை அமைச்சர்கள் அனைவரும் நிறைவேற்றி யிருந்தால் 29வது அகில இலங்கைப் போட்டி யாழ்ப் பாணத்தில் சிறப்புற நடைபெற வாய்ப்பு எட்டி யிருக்கும். ஆனால் 20 வருடங்களுக்கு மேலாக எண்ணற்ற துன்ப துயரங் களை தாங்கி வாழ்ந்து கொண்டு இருக்கும் வட - கிழக்கு தமிழர்களின் விளையாட்டு தரத்தினை தென்னிலங்கை மாகாணங் களுடன் ஒப்பிட்டு நோக்கி இவ் மாகா ணங்களின் ஒதுக்கீட்டில் 10% மாவது வட - கிழக்கிற்கு அக்கறை யு டன் வழங்கியிருந்தால் ஏனைய மாகாணங்களைப்போல் சம அளவு அந்தஸ்த் தில் வட - கிழக்கு கலந்து கொள்வதுடன் யாழ்ப்பாணம் 29வது போட்டிக்குப் பொருத்தமா கவும் அமைந்திருக்கும். மாறாக விளையாட்டு அரசியலில் இல்லை. அதில் இருந்து அப்பாற்பட்டது, தனித்துவமானது, ஏனைய விடயங் களிலும் மாறுபட்டது என பேச்சுக் களில் மட்டுமே காணப்படுகின்றது. ஆனால் யாழ்ப்பாணம் 95ம் ஆண்டு காலம் தொடக்கம் சிங்கள பேரின வாதத்தின் அடக்கு முறைக்குள் இருந்தபோதும் யாழ்மாவட்டத்தின் விளையாட்டுத் துறையின் வளர்ச் சியையோ அல்லது மைதானத்தின் திருத்தங்களோ ஏன் அன்றைய காலங்களில் அவர்களின் எண்ணத் தில் தோன்றவில்லை.

மேலும் சுசந்திகா போன்ற சில வீராங்கனைகளை உருவாக்கு வதே யாழ்ப்பாண விளையாட்டுப் போட்டியின் நோக்கம் எனக் கூறும் போது கடந்த இருபது வருடங் களுக்கு மேலாக நடந்த கொடிய யுத்தத்தினையும் அதன் தாக்கத் தினையும் தென்னிலங்கை ஆட்சி யாளர்கள் மறந்து இருக்கக் கூடும். ஆனால் வட - கிழக்கு தமிழர்கள் மறக்கவில்லை ஏனெனில் சுசந்திகா போன்ற ஆயிரம் ஆயிரம் வீரர்கள் இந்த மண்ணின் விடுதலைக்காக உயிர் தியாகம் செய்துள்ளார்கள். இருந்தும் யாழ்ப் பாணத்தில் இன்றைய காலகட்டத்தில் இப்போட்டி நடந்திருந்தால் கம்பிவேலிகள், இராணுவ அனர்த் தங்கள், நெருக்கடிகள், இயல்பற்ற வாழ்க்கையின் அடிப்படையில் 29வது விளையாட்டுப்போட்டி நடைபெற்று இருக்கும்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் போட்டிகளை நடாத்தி சிங்கக் கொடியினை ஏற்றி யாழ் நகரும் சிங்கள தேசத்தின் முக்கிய பகுதியாக வந்துள்ளதாக சர்வதேச சமூகத்திற்கு பறைசாற்றுவதே இப்போட்டியின் வெளிப்பாடாக இருந்திருக்கும். இதன் ஊடாக சுசந்திகா போன்ற வீரர்களை உருவாக்க நினைத்தால் அல்லது அக்கறைகொண்டு இருந்தால் இதுவரைக்கும் நீச்சல், கிரிக்கட் உட்பட அனைத்து போட்டிகளிலும் அடிப்படை வசதிகள் இல்லாத வட - கிழக்கு வீரர்களுக்கு இன்று வரைக்கும் அரசால் எத்தகைய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



மாறாக, இடம்பெயர்ந்து விளையாட்டு மைதானங்களின் சூழல்களில் குடிசைகள் அமைத்து வாழுகின்ற மக்களையும் உயர் பாதுகாப்பு வலய போர்வைகளில் வெளியேற்றப்பட்ட மக்களின் இன்னல்களை கருத்தில் எடுக்கும் படி கேட்டு இருந்தபோதும் அதனை கவனத்தில் எடுக்காதது மட்டு மல்லாமல் விசமமான பிரச்சாரங் களையும் கட்டவிழ்த்துவிட்டு சிறிலங்காவின் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் திட்டமிட்டு இருக்கையில் நடத்தப்பட்ட 29வது அகில இலங்கைப் போட்டிகளில் வேண்டுமென்றே தமிழ் மொழி புறக்கணிக்கப் பட்டும், தமிழ் வீரர்களுக்கு பாராபட்சத்தையும் காட்டி யுள்ளதுடன் சிங்கள மொழி தெரியாத வட - கிழக்கு வீரர்களுக்கு அறி வுறுத்தல்களையும் செய்திகளையும் தனிச் சிங்களத்தில் ஆற்றியமை இன்றைய சமாதானத் திற்கான காலகட்டத்தில் வேதனை தரும் விடயம் என்பது டன் இப்போட்டி யாழ்ப்பாணத்தில் நடந்திருந்தாலும் இந்நிலமைதான் ஏற்பட்டு இருக்கும் என்பதனை இப்போட்டி உணர்த்தி நிற்கின்றது.

யுத்தம் இடம்பெற்ற காலங்களில் கூட மூன்று மொழி களிலும் நடாத்தப்பட்ட அகில இலங்கைப் போட்டிகள் புரிந் துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டு 20 மாதங்களை நெருங்கியபோதும் விளையாட்டு அமைச்சர்களால் வட - கிழக்கிற்கு என்ன கிடைத்திருக்கின்றது என்றால் தமிழ் புறக்கணிக்கப்பட்டுள்ளது. முதலில் எவற்றை நிவர்த்தி செய்யவேண்டும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். "மக்கள் பாண் இல்லா மல் அலைகின்றார்கள் என்றால் கேச் சாப்பிடச் சொல்லுங்கள்' என்ற பழமொழிக்கு ஒப்பாகத்தான் இன்றைய விளையாட்டு அமைச் சர்கள் உள்ளார்கள். அதைவிட 29வது அகில இலங்கை விளை யாட்டுப்போட்டி தனிச்சிங்கள மொழியில் நடத்தப்பட்டுள்ளது என்றால் இதன் பொருள்தான் என்ன? 29வது அகில இலங்கை விளையாட்டுப் போட்டியில் வட - கிழக்கு எட்டாம் நிலையிலேயே நிற்பதற்கு யார் காரணம்? தென்னிலங்கை அமைச்சர்களின் செயற்பாடு ஒன்றாக இருந்தாலும் விளையாட்டுத் துறையின் வளர்ச்சியில் உள்ள வட - கிழக்கு அதிகாரிகளின் அசமத்தனமான செயற்பாடே இன்றைய வீழ்ச் சிக்குக் காரணம் என்றே கூறவேண்டும். கடந்த காலங்களில் உதைபந்தாட்டப் போட்டிகளில் வட - கிழக்கு 2ம்,3ம் இடங்களை அகில இலங்கை ரீதியில் பெற்றிருந்தது. ஆனால் இவ்வருடம் கராட்டி 'போட்டியில் மாத்திரமே சில பெறுபேறுகளை பெறக்கூடிய இக்கட்டான' நிலையில் வீழ்ச்சி கண்டுள்ளது. எனவே தென்னி லங்கை அமைச்சர்களின் திட்டமிட்ட அடக்குமுறைகளின் செயற்பாட்டிற் குள் வீழ்ந்து விடாமலே விளையாட் டுத்துறையில் அக்கறையுடன் வட - கிழக்கு அதிகாரிகள் செயற்படுவார்கள் ஆயின் இனிவரும் காலங்களில் எமது தனித்துவத்தை விளையாட்டின் மூலம் நாமே நிரூபித்துக் காட்ட முடியும்.

அ. நிலா

# நாற்றிசை நடப்புகள்

"காலம் நன்றாக மாறிப்போச்சுது" என்றார் நண்பர்.

"எதைப்பற்றி இப்படிச் சொல்லுகிறீர்?" என்றேன்.

"பனைமரத்தில் தேள் கொட்டினால் தென்னை மரத்தில் நெறிகட்டுகிற மாதிரி, கொழும்பில் எந்தவொரு மூலையில் சிறு சம்பவம் தமிழர் சம்பந்தப்பட்டதாக நடந்துவிட்டால் அடுத்தகணமே புறக் கோட்டையில் எதிரொலிக்கும்" என்று தொடர்ந்தார் நண்பர்.

"அதுக்கு இப்ப என்ன?" என்றேன்.

"போன புதனும் வியாழனும் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் சிங்கள- தமிழ் கலைக்கூடல் நடந்தது அல்லவா?"

"ஓமோம் அந்தக்கலைக்கூடலில் குழப்பம் செய்து இனவெறியைக் கிளப்புவதற்கு "சிகல உறுமய" என்ற இனவாத அரசியல் கட்சியினர் முயற்சி செய்தனர். இவர்களுடன் இனத்துவேசத்தையே பிரசாரம் செய்தவரும் திவயின, ஐலண்ட் பத்திரிகைக்காரர்களும் சேர்ந்து குழப்பத்திலீடுபட்டனர். இங்கு நின்ற பொலிசார் கூட அதிகம் சிரமப்படாமலிருந்ததாகச் சொல்லுகிறார்கள்." என்றேன் நான்.



"இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த சூரியக் குடும்பத்தினர் இப்படிப் பெரிதாக எதையும் எதிர்பார்க்காததால் பொலிஸ் பாதுகாப்புக் கோரவில்லை. மிகக்குறைந்த பொலிசாரே நின்றனர். அவர்கள் இயன்றவரை பணியாற்றினர். சூரியக்குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களும் இளைஞிகளும் உஷாராகச் செயற்பட்டனர்" என்றார் நண்பர்.

இந்த இனவாதப் பத்திரிகைகள்தானே இந்தக் கலைக் கூடலுக்குப் புலி முத்திரை குத்தி பொங்குதமிழ் கொழும்பில் கொண்டாடப் போறாங்கலென்று தூண்டிவிட்டது."

1956 ஆம் ஆண்டு ஜுன் ஐந்தாம் திகதி அன்றைய பிரதமர் எஸ். டபிள்யு. ஆர்.டி.பண்டார நாயக்கா (சந்திரிகாவின் தந்தை) 'சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகரும மொழி' எனப்பிரகடனப்படுத்தும் மசோதாவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதாக அறிவித்திருந்தார்.

தந்தை செல்வா தலைமையில் இந்த மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக நாடாளுமன்றப் படிக்கட்டுக்களில் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், தொண்டர்கள் சிலரும் நாடாளுமன்றக் கூட்டம் முடியும் வரை உண்ணாவிரதமிருக்கப் போவதாக பிரதமருட்பட அனைவருக்கும் அறிவித்திருந்தனர்.

"தமிழரசுக்கட்சியினர் செல்வநாயகம் தலைமையில் சென்று நாடாளுமன்றத்தை உடைக்கத் திட்டமிட்டிருப்பதாக அன்றைய சிங்கள ஆங்கிலப்பத்திரிகைகள் இனவாதத்தைக்கக்கி இன வெறியைத் தூண்டி விட்டிருந்தன."

"இதனால் நாடாளுமன்றப் படிக்கட்டுகளில் அமைதியாக இருந்து பட்டினிகிடக்கச் சென்ற நிராயுதபாணிகளான தமிழரசுக்கட்சித் தலைவர்களையும் தொண்டர்களையும் காலிமுகத்திடலில் கூடிய காடையர் பொல்லுகளாலும், கல்லுகளாலும் தாக்கி மண்டையை உடைத்தனர். அன்று காலிமுகத்திடலில் கடமையிலிருந்த பொலிசார் மேலிடத்து உத்தரவின்படி கண்டும் காணாமலிருந்தனர். காலிமுகத்திடலில் காடையர்களின் கைகள் ஓங்கியதால் அன்றிரவும் மறுநாளும் கொழும்பு நகரிலும் புறநகர்ப்பகுதிகளிலும் சில இடங்களில் தமிழர்கள் தாக்கப்பட்டனர், சில கடைகள் சூறையாடப்பட்டன. அம்பாறை, இங்கினியாகலயில் இது பெரிதாகப் பரவியதால் கொழும்பிலும், புறநகர்ப் பகுதிகளிலும் இது அடக்கப்பட்டது."

"இந்தத்திட்டத்துடன் தான் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடந்த சிங்கள - தமிழ்க்கலைக்கூடலிலும் பேரினவாதிகள் தங்கள் கைவரிசையைக் காட்ட முனைந்திருக்க வேண்டும். இதற்கு "திவயின" பத்திரிகைகள் அடி எடுத்தும் கொடுத்தன; பங்கும் பற்றின.

"ஆனால் கலைக்கூடலில் பங்குகொண்ட அறிஞர்கள், கலைஞர்கள் மட்டுமல்ல பார்வையாளர்களாகக் கலந்துகொண்ட சிங்களப் பொது மக்கள் கூட கொஞ்சமும் இடம் கொடுக்கவில்லை. கலைக்கூடல் ஏற்பாட்டாளர்களான சூரியக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் துணிந்து நின்று எதிர்த்துத்தாக்கி அடித்து விரட்டினர்."

இதுமட்டுமல்ல தமிழ் மக்களும் நிகழ்வில் பங்கு கொண்டவர்களும் ஒரு சொட்டு இரத்தமும் சிந்தவிடாமல், அந்த சிங்கள இளைஞர்கள் காடையர்களின் தாக்குதலில் தங்கள் இரத்தத்தைச் சிந்திய தியாக வரலாறும் இங்கு எழுதப்பட்டது.

1956,58 - ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பழைய கதைகளைப் புதிதாக எழுத முயன்ற பேரினவாதிகளுக்கு ஏமாற்றமே ஏற்பட்டிருக்கிறது.

பேராசிரியர் சுசரித கம்லத், அசோகா ஹதகம, தர்மசிறி பண்டாரநாயக்கா போன்றவர்கள் சிங்கள - தமிழ் உறவுக்காக தம் உயிர்களையும் அர்ப்பணிக்கத் தயாராக இருப்பதாகக் கூறியது இனிப் பழையகதையைப் புதுப்பிக்க முடியாதென்பது தெளிவாகத் தெரிந்தது!

முதல்நாள் நிகழ்ச்சியில் "புனைகதை" கருத்தாடல் நிகழ்ச்சியில் பிரபல எழுத்தாளர் செ. யோகநாதன் பேசுகையில் கலை, பண்பாட்டுத் துறைகளில் உள்ள பொறுப்பையும், விடுதலைப் புலிகள் ஏற்றுச் சிறப்பாகச் செய்கின்றனர் என்று சொன்னபோது சபையில் பின்வரிசையில் இருந்த ஒருவர் சிங்களத்தில் ஏதோ கேட்டார்.

அவர் தனது கேள்வியை விளக்கமாகக் கேட்பதற்கும் மேடையிலிருந்தவர்கள் அதற்குப் பதிலளிக்கவும் சந்தர்ப்பமில்லாது சபையில் அவருக்கு முன்னும் பின்னும் இருந்தவர்களும் அங்கு சபையிலிருந்து உரத்த சத்தத்துடன் சூழ்ந்து கொண்டவர்களும் திட்டமிட்டபடி கூச்சலிட்டு ஆரவாரப்படுத்தினர்; கைகலப்புக்கும் முனைந்தனர். கதிரைகள் பலவும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருந்ததுடன் சுலபமாகத் தூக்கமுடியாதவாறு அதிக பாரம் கொண்டவையாகவுமிருந்தன.

எப்படியோ சிங்கள - தமிழ்க் கலைக்கூடல் சிகல உறுமய, திவயின ஆகியவைகளினால் பிரபல்யம் பெற்றதுடன், கொழும்பில் இனி ஒரு இனக்கலகத்துக்கு இடமில்லை என்றும் எடுத்துக் காட்டியிருக்கிறது போலத் தெரிகிறது என்கிறார் எதிர் வீட்டுக்காரர். இவர் முன்னைய இனக் கலவரங்களில் கொழும்பில் அனுபவம் பெற்றவர்.

கலைக்கூடலில் சில முஸ்லிம்களும் கலந்து கொண்டனர். ஆனால் அவர்கள் தனித்தரப்பு எதுவும் கோரவில்லை என்றார் நண்பர்.

கொழும்பு நகரில் பெரும் முஸ்லிம் தனவந்தர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்ட சில தினங்களின் பின் பொல்கட வாவியிலிருந்து அவரது சடலம் மீட்கப்பட்டது. இச்சம்பவம் கிழக்கு மாகாணத்தில் நடந்திருந்தால் கிழக்கு என்ன பாடுபட்டிருக்கும்; சந்திரிகா சும்மா இருந்து இருப்பாரா? எத்தனைபேர் அறிக்கை விட்டிருப்பார்கள்? என்று கேட்டார் எதிர்வீட்டுக்காரர்.

இதையெல்லாம் யார் சிந்திக்கிறார்கள்!

**எஸ்.எம்.ஜி**

# குழப்பமடைந்த தென்னிலங்கை வர்த்தக சமூகம்



அண்மையில் சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக தென்னிலங்கை வர்த்தக சமூகமும், தென்னிலங்கை மக்களும் பெரும் குழப்பத்திற்கும் பதட்டத்திற்கும் உள்ளாகியுள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த வகையில் அவர்களின் பதட்டத்திற்கு காரணம் இல்லாமல் இல்லை.

ஏனெனில், அவர்களே சமாதான காலங்களில், பெரும் லாபத்தினையும், நன்மையினையும் ஈட்டிக் கொண்டவர்களாக உள்ளனர்.

இதில் ஒரு அங்கமாகவே அண்மையில் வெளிநாட்டு விஜயங்களை முடித்துக்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய போது, அவருக்கான ஆதரவாளர்கள் ஒன்று கூடி வரவேற்பளித்தபோது தென்னிலங்கை வர்த்தக சமூகத்தினர் தமது பங்களிப்பின் மூலம் ஆதரவினையும் வெளிப்படுத்தியுள்ளனராம்.

இவ்வரவேற்பும், ஆதரவும் ரணிலுக்கானது அல்ல, சமாதானத்துக்கான வரவேற்பும் ஆதரவும் என்பதே மிகப்பொருத்தமானதாகும்.



தென்னிலங்கையில் பெரும்பான்மையான மக்கள் சமாதான விரும்பிகளாகவே தங்களைக் காட்டிக்கொள்கின்றனர்.

இவர்களில் ஒரு பகுதியினர் தான் சமாதான சூழ்நிலை ஏற்பட்டு ஏ-9 பாதை திறப்பின் பின்பு தென்னிலங்கை சந்தைகளை வடபகுதி நோக்கி நகர்த்தி பெரும் லாபத்தினை ஈட்டிக்கொண்டவர்கள்.

இந்த நிலையில் பேரினவாத தீய சக்திகளே சமாதானத்தினைக் குழப்பி மீண்டும் போராட்டத்தினை தொடக்கிவிட்டு அதன் பயனாக அரசியலில் லாபம் தேட எத்தனிக்கின்றனர்.

இதேவேளை, சமாதான காலங்களில் தென்னிலங்கை சிங்கள மக்களே கூடுதலாக சமாதானத்தின் சுகங்களையும், நன்மைகளையும் பெற்றுக்கொண்டுள்ளார்கள். அதே போன்றுதான் வர்த்தகர்களும் கூடுதலான லாபத்தினை ஈட்டிக்கொண்டுள்ளார்கள்.

ஆனால் சிங்கள மக்கள் குழம்பிய அளவுக்கு தமிழ் மக்கள் குழப்பமடையவோ பதட்டமடையவோ, இல்லை. ஏனெனில் சமாதான காலத்திலும் அவர்களுக்கு எத்தகைய தீர்வோ, உரிமையோ எட்டவில்லை என்பது தெரிந்ததே.

தென்னிலங்கை மக்களைப் பொறுத்தளவில் ஒரு பகுதியினரே யதார்த்தமான சமாதான விரும்பிகளாகவுள்ளனர். மற்றைய படி பெரும்பான்மையானவர்கள் தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வு எதனையும் அனுமதிக்காமல், தங்களின் சுகபோகங்களை அனுபவித்துக் கொள்ளவும், வர்த்தக சமூகம் தங்களின் வர்த்தக ரீதியான லாபத்தினை ஈட்டிக்கொள்ளவுமே முழுமூச்சாக நின்று செயற்படுகின்றனரே தவிர, தமிழ் மக்களுக்கான சுதந்திரத்தினை வழங்க வேண்டும் என்று செயற்படவில்லை.

இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகாவின் திடீர் அதிரடி நடவடிக்கை மீண்டும் ஒரு போரைப் பற்றியும், மீண்டும் அழிவுகளின் மீள் நினைப் புக்கள் பற்றியும் இலங்கை மக்கள் மத்தியில் ஏற்படுத்தவே செய்தன.

இதன் உச்சக்கட்டமே ஏ-9 வீதி மூடப்பட்டுள்ளதாக தவறாக செய்திகள் வெளிவந்தபோது தென்னிலங்கை வர்த்தக சமூகத்தினரின் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது.

இவ்வாறாக தென்பகுதி மக்களினதும் வர்த்தக சமூகத்தினதும் நிம்மதியைக் கெடுத்தவராக சனாதிபதி சந்திரிகா தன்னுடைய செயற்பாடுகளின் மூலம் இனம் காட்டினார்.

இவை எல்லாம் சனாதிபதி சந்திரிகாவிற்கு செல்வாக்கு அதிகரிப்பினை ஏற்படுத்தப்போவதில்லை. பதிலாக அவருக்கான இறங்குமுகத்தையே ஏற்படுத்தப்போகிறது.

இதெல்லாம் சரி வட - கிழக்குப் பகுதியில் நிலவும் மீன்பிடித் தொழிலுக்கான கெடுபிடிகளுக்கு மத்தியில் தென்னிலங்கை நுகர்வோரின் நாக்குகளை மட்டும் ருசிப்படுத்தாது பணப்பைகளையும் குஷிப்படுத்திய வட - கிழக்கின் பணச்சந்தையை அவர்கள் எப்படி கை நழுவ விட முயல்வார்கள்.

இவற்றின் முழு வடிவங்களும் தான் சமாதானத்தின் பெயரால் ரணிலுக்கு வழங்கப்பட்ட அமோக வரவேற்பாக இருக்குமோ என எவரெல்லாமோ கேள்வி கேட்பது தெரிகிறது.

**க.ஜெயசீலன்**

# பரதக்கலை பற்றிய நினைவுப் பதிவுகள்



**பாவம்,** தாளம்,ராகம் ஆகிய மூன்றும் ஒருங்கிணையும் போது கனியும் அழகு பரதத்தில் உள்ளது. தமிழ் மக்கள் வாழ்வில் பரதக்கலை பண்டுதொட்டு இணைந் துள்ளது. முத்தமிழில் ஒன்றான நாடகத்தமிழுள் நடனம் சிறப்புக் கூறாக அமைகின்றது.கலைகளுள் நடனம் உயர்ந்த இடம் வகிக்கின்றது. கவின்கலைகள் புலன் வாயிலாக உள்ளத்துள் சென்று இன்பம் பயக்கின்றன.கவின் கலைகளுள் நடனம் முதலிடம் வகிக்கின்றது.

**நடனமே நாடகம் கண்ணுயர் நட்டம்**
**படிதம்ஆடல் தாண்டவம் பரதம்**
**ஆறுதல் நூல்கள் வாணிக் குரவை**
**நிலையம் நிருத்தம் கூத்தெ னப்படுமே.**

என்று திவாகர நிகண்டு வரையறுத்துக் கூறுகின்றது. சதிர் என்னும் ஆடலில் இருந்து இன்றைய பரதம் பிறந்ததாக அறிஞர்கள் முடிவு எடுத்துள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பரதக்கலை பற்றிய ஆய்வுக்காக முனைவர் பட்டம் பெற்ற டாக்டர் பத்மா சுப்பிர மணியம் பின்வருமாறு தெரிவிக் கிறார்,"தற்காலத்தில் காணப்படும் சாஸ்திரீய நடனம் தமிழ் நாட்டில் பரத நாட்டியம் என்னும் பெயருடன் விளங்குகிறது. முற்காலத்தில் தமிழ கத்தில் இக்கலையைக் கூத்து என்று அழைத்தார்கள். கடந்த மூன்று நூற் றாண்டு காலமாக இதற்கு சதிர் என்று பெயர் வழங்கலாயிற்று" (பரதக் கலைக் கோட்பாடு, பத்மா சுப்பிர மணியம், வானதி பதிப்பகம் 1985)

கொழும்புவின் இந்திய கலைகள் மையத்தைச் சேர்ந்த சுபாஷினி பத்மநாதன், "சதிர் என்பது கோயில்களில் தேவதாசிகள் ஆடிய நடனத்தைக் குறிக்கும். இன்றைய் பரதநாட்டியம் சதிர் நடனத்தில் இருந்து தோன்றியது." என்கிறார். தேவதாசிகள் மாத்திரம் ஆடும் நடனம் என்று ஒரு சாராருக்கு உரியதாக இந்த ஆடல் தள்ளிவைக்கப்பட்டது உண்மையே. இதற்குப் பிற்காலச் சோழ மன்னர்களும் பொறுப்பாவார் கள்.பிற்காலச் சோழர்கள் பெண் அடிமைத்தனத்தை வளர்த்தார்கள். பெண்களைத் தானமாகக் கொடுக்கும் வழக்கத்தை ஆரம்பித்தனர். தூக்கிக் கொடுக்கும் பண்டம் போல் கோயில் களுக்கும், செல்வந்தர் வீடுகளுக்கும்

பெண்களைத் தானமாகக் கொடுக்கும் வழக்கம் பிற்காலச் சோழர்கள் ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்தோடு தமிழகத்தை ஆரிய மயமாக்குவதிலும் பிற்கால சோழ மன்னர்கள் முனைப்பாக ஈடுபட்டனர்.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை தஞ்சைப் பெரிய கோயிலில் தேவதாசிகள் நடனப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டனர். பரதக்கலை வளரும் கலை. இன்று அதற்கு அனைத்துலக மட்டத்தில் மிக உயர்ந்த அந்தஸ்து உண்டு. ருக்மிணிதேவி அருண்டேல், பாலசரஸ்வதிதேவி போன்ற பெரிய இடத்துப் பெண்கள் இத் துறையில் பிரவேசிப்பது மூலம் தமக்கும் இக் கலைக்கும் பெருமை சேர்த்தனர். இவர்களை எத்துணை பாராட்டினும் தகும். சென்னை நகருக்குச் சற்றுத் தொலைவில் நூறு ஏக்கர் நிலத்தில் 'கலாக்சேத்திரா' என்ற கலைக் கோயிலை ருக்மிணி தேவி நடத்தினார். பரதம், பாட்டு, ஓவியம் என்பன ஆண்,பெண் மாணவர்களுக்கு இத்துறைகளில் உயர்ந்தோரால் கற்பிக்கப்படுகின்றன. இன்றும் இந்த நிறுவனம் இயங்கு கின்றது.

அருண்டேல் என்ற உயர் குடிப்பிறந்த ஆங்கிலேயரை ருக்மிணி தேவி திருமணம் செய்தார். சொற்ப காலத்தில் கணவனை இழந்த அவர் கலைப் பணிக்கே தனது வாழ்வை அர்ப்பணித்தார்.வயது சென்ற காலத்திலும் இளமைத் துடிப்போடு அவர் ஆடுவார். தனது நடனக் குழுவோடு 1977ம் ஆண்டு அவர் நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக நெதர் லாந்து நாட்டிற்கு வந்தார். அப்போது இந்திய ஜனாதிபதிப்பதவி வெற்றி டமாகியது.பிரதமர் பதவி வகித்த மொராஜி தேசாய் ஜனாதிபதிப் பதவியை ருக்மிணிதேவிக்கு வழங்க முன்வந்தார். தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு தானே இந்த அழைப்பை விடுத்தார். இந்தியப் பிரதமரின் அழைப்பை ஏற்க ருக்மிணி தேவி மறுத்தார். பரதக் கலைக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாக இந்த நிகழ்ச்சி கருதப்படுகின்றது.

1970ல் மூன்றாம் உலகத் தமிழ் மாநாடு பாரிஸ் நகரில் நடந்த போது யுனெஸ்கோ மண்டபத்தில் பரத நாட்டிய நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. டாக்டர் பத்மா சுப்பிரமணியம் நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கியதோடு தானும் பிரதம பாகமேற்று ஆடினார். தமிழ்ப் பாடல்களுக்கு அவர் பிடித்த அபிநயம் பார்வையாளர்களை மெய்மறக்கச் செய்தது. யுனெஸ்கோவின் துணை இயக்குநர் டாக்டர் மல்கம் ஆதி சேஷையா தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சிக்கு பெருமளவு மேற்கு நாட்டவர் வந்திருந்தனர்.பரதத்திற்கு வாய்ப்பாட்டு இன்றியமையாத பின்ன ணியாக அமைகின்றது. முன்பு பெரும் சிரமத்தோடு நர்த்தகிகள் பாடிக் கொண்டு ஆடுவார்கள். இப்போது வாயசைக்கும் தேவை கூடஇல்லை. நடனத்தில் முழுக்கவனத்தையும் செலுத்தலாம். ஆடுபவரின் வலப்பக் கத்தில் பாடுபவர், மிருதங்கம் வாசிப்ப வர், நட்டுவாங்கம் செய்பவர் ஆகி யோர் குழுவாக அமர்ந்திருப்பர். முன்பு நிற்பதுதான் வழக்கம், காலப்போக் கில் அமரத்தொடங்கியுள்ளனர். காலஞ்சென்ற வீரமணி தனது இளவயதில் உரத்த குரலில் பாடிக் கொண்டே ஆடுவார். அதுகும் துரித கதியில் ஆடுவார். பரதம் மத்திய கதியில் ஆடும் கலை. இளமைத் துடிப்பு வேகமாக மறைந்து விட பாடிக் கொண்டு ஆடும் வழக்கத்தை அவர் நிறுத்தினார். மத்தியகதியில் ஆடவும் தொடங்கினார்.

வாய்ப்பாட்டுக்கு அனு சரணையாகத் தம்புராவும் வீணையும் நடன மேடையில் ஏறிவிட்டன. ஆனால் நட்டுவாங்கம் செய்பவர் இல்லாமல் ஆடல் சோபிக்காது. அவர் தாளம் தட்டாமல் ஆட இயலாது. நடனத்திற்கு மிருதங்கம் வாசிப்பது வித்தியாசமான கலை. மேடைப் பாடகர்களுக்கு மிருதங்கம் வாசிப் போர்கள் வழமையாக பரதநாட்டிய மேடையில் வாசிப்பதில்லை .சொற் கட்டுக்களின் வாசிப்பு வித்தியாசப்படு கின்றன.

பரதக் கலையின் அண் மைக்கால வளர்ச்சிக்கு மிகப்பெரிய பங்களிப்புச் செய்தவர் மறைந்த மேதை வழுவூர் இராமையா பிள்ளை அவர்கள். டிசெம்பர் 02,1991ல் இறந்த வழுவூரார் "பேபி" கமலா, வைஜ யந்திமாலா, பத்மா சுப்பிரமணி யம்,கனகா சிறினிவாசன்,சித்திரா விஸ்வேஸ்வரன் போன்ற நாட்டிய தாரகைகள் உள்ளடங்கலான ஒரு மாணவ பரம்பரையை உருவாக் கினார். மாயபுரத்திற்கு சில மைல் தொலைவிலுள்ள வழுவூர் வாசியான அவர் பரதநாட்டியத்தின் நான்கு பாணிகளில் ஒன்றான 'வழுவூர் பாணியை' உருவாக்கினார். ருஷ்ய பாலே (BALLET) நடனத்தின் சாயல் அவர் புகுத்திய புதுமைகளில் தென்படுகின்றன.

பாலே ருஷ்யாவின் தேசிய நடனக்கலை தலைநகர் மொஸ் கோவின் பொல்ஷோய் கலையரங் கில் (BOLSHOL THEATRE) பாலே நடனங்களைப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. கால் பெரு விரலில் நின்று விசேட காலணி உதவியுடன் சுழன்று ஆடுவது பாலேயின் விசேட அம்சம். வேகமாக ஆடி மேடையின் வெற்றிடங்களை நிரப்புவார்கள். வாய்ப் பாட்டுப் பின்னணி கிடையாது. பெரும் எண்ணிக்கை வாத்தியக் கருவிகள் பின்னணி இசை வழங்கு கின்றன. உடல் அசைவுகளுக்கு பாலே முதலிடம் கொடுக்கின்றது. உணர்ச்சிகளை வெளிக்காட்டும் நோக்கில் உடல் அசைவுகள் இடம் பெறுகின்றன. பூமியின் இழுவையை மீறி உயர்ந்தெழும்பி ஆடுவது பாலேயின் சிறப்பம்சம்.

இசை வேளாளர் பரம்பரை யைச் சேர்ந்த வழுவூரார் நிருத்தம் எனப்படும் சுத்த நடனம் (PURE DANCE), அடவு எனப்படும் பாத அசைவுகள் (STEPS), அபிநயம் எனப்படும் உடற்தோற்றம் (POS-TURE) நாட்டிய வேதம் (TEMPO) ஆகிய நான்கு துறைகளில் பரதக்கலைக்குப் பழுதில்லாமல் மாற்றம் செய்தார். முன்பு இல்லாத முக அசைவுகளை அவர் கற்றுக் கொடுத்தார். வழுவூர் இராமை யாபிள்ளையின் தனி முத்திரை அவர் புகுத்திய உடல் அசைவுகளில் காணப்படுகின்றன. முகத்துடிப்பும் உடற் திருப்பங்களும் பாலேயின் சாயலில் உள்ளன. மொத்தத்தில் வழுவூர் பாணியில் ஒரு வசீகரம் (GRACE) இருக்கத்தான் செய்கிறது.



சில தசாப்தங்களாகத் தமிழ்த் திரைப்படங்கள் பரதக்கலை வளர்ச்சிக்கு உதவின. இன்று அப்படி இல்லை. 1921ல் காரைக்காலில் பிறந்த பரத நாட்டியக் கலைஞர் தண்டாயுதபாணிபிள்ளை திரைப்படத் தின் மூலம் நடனத்தையும் இசையை யும் வளர்த்தார். மெய்யப்ப செட்டியா ரின் ஏ.வி.எம் நிறுவனம் தயாரித்த அன்றைய படங்களுக்கு அவர் நடனங்களை வடிவமைத்தார். அவரு டைய ஏக புத்திரி உமா ஆனந்த் நடன விரிவுரையாளராக அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார்.



**அன்பரசு**

பாடுபவரின் சுருதிக்கேற்ப நடனமாடுபவரின் காற்சலங்கை ஒலிக்கவேண்டும் என்பது பொது விதி. சலங்கை கட்டினால் போதும் என்றில்லை: பார்ப்பதற்கு அழகாகவும் அவை இருக்கவேண்டும். இப்போ ஒப்பனைக்கலை நன்கு வளர்ந்துள் ளது. முக வியர்வை, முக வாட்டம் சிறிதளவேனும் தெரியாவண்ணம் ஒப்பனை செய்ய உதவும் பவுடா களும் ,கிறீம்களும் கிடைக்கின்றன. நடனமணிகளுக்கு மணப்பெண்ணின் ஆடை அலங்காரம், நகை அலங் காரம் செய்வது பண்டுதொட்டு நிலவும் மரபு. முன்பு தங்க நகை அணிந்து ஆடினார்கள். இப்போது மிகச்சிறந்த, தங்கம் பூசப்பட்ட மணப்பெண் நகை கள் கிடைக்கின்றன. விசிறி மடிப்பு டன் சேலை அணிந்து ஆடவேண்டிய அவசியம் இப்போது இல்லை. நடன மணிகள் அணிவதற்கென்று தயாரிக் கப்பட்ட விசிறி மடிப்பு இணைக்கப் பட்ட ஆடைகள் வாங்கி அணியலாம். நீளமான காற்சட்டை போன்ற 'டான்ஸ் உடுப்பை' ஆண்,பெண் இருபகுதியும் அணிகிறார்கள்.

தஞ்சை, பந்தணை நல்லூர், வழுவூர், காஞ்சிபுரம் என்ற நான்கு பரத நாட்டிய பாணிகளில் எதைப் பின்பற்றி ஆடினாலும் தாளம் பிசகக் கூடாது. தாளம் என்பது கால அள வீடு. சங்கீதத்திற்கு சுருதி தாயாகவும் லயம் தந்தையாகவும் அமைகின்றன. லயம் தாளமாகும். மேடையில் ஆடுபவர் கூறும் செய்தி அல்லது உட்கருத்து அவர் பிடிக்கும் அபி நயத்தின் மூலம் வெளிப்படுகின்றது. வாய்ப்பாட்டின் பொருளும் அபிநயம் வாயிலாக வெளிவரும்.

அபிநயம் நான்கு வகைப் படும். உடல் உறுப்புக்களின் அசை வினால் வெளிப்படும் அபிநயம், உள்ளுணர்வு, முகபாவம், உடற் சிலிர்ப்பு மூலம் வெளிப்படும் அபிநயம், சொற்களால் வெளிப்படும் அபிநயம்; ஆடுபவரின் ஆடை, நகை, ஒப்பனை போன்றவற்றால் வெளிப் படும் அபிநயம் என்று நான்காக வகுத்துள்ளனர். மேடைக்காட்சி அமைப்பையும் அபிநயச் சிறப்புக்கு உதவும் கருவியாக ஏற்றுக்கொள்ளலாம். சிறந்த நடனக் கலைஞரை நாம் 'அபிநய சுந்தரி ஆடுகிறாள்' என்கிறோம். அபிநயத்தின் சிறப்பை உணர்த்த இது போது மானது.

ஆணோ, பெண்ணோ யார் ஆடினாலும் மனதை நடனத்தில் செலுத்தி ஆடவேண்டும். தவறின் அது பாவைக் கூத்தாக அமையும். தான் இன்புற்று ஆடுவதே நடனம். இதற்கான பாடல்:-

**கைவழி நயனம் செல்ல,**
**கண்வழி மனம் செல்ல,**
**மனம்வழி உணர்ச்சி செல்ல,**
**அதனால் சுவை பிறக்கும் என்ப**

பொதுவாக ஆடுபவர் களுக்கு நல்ல உடற்கட்டும், முகப் பொலிவும், இசை, தாளம் என்பன பற்றிய இயல்பான அறிவும், அபிநயத் திறனும் இருத்தல் அவசியம். ஆர்வமும் அர்ப்பணிப்பும் சிக்கல் இல்லாத குடும்ப வாழ்வும் கட்டாய மாகத் தேவைப்படுகின்றன.

அரங்கம் முக்கிய இடம் வகிக்கின்றது. நீள்சதுர அரங்கம் விரும்பத்தக்கது. ஆடுபவரின் முகபா வம் தெரியக்கூடிய வெளிச்சமும் பாடல், காற்சலங்கை ஒலி துல்லிய மாகக் கேட்கக்கூடிய ஒலி அமைப்பும் இருக்கவேண்டும். பரதநாட்டிய அரங் கத்தில் மேடைச் சோடனைகள் தேவையில்லை. அளவோடு அலங் கரிக்கப்பட்டால் பரவாயில்லை. பார்ப் போர் கண்ணில் ஆடுபவர்தான் முக் கியமாகப்படவேண்டும்.அரங்க ஒழுங்கு இந்த நோக்குடன் செய்யப் படுதல் அவசியம். ஆடல் பற்றிய அடிப்படை அறிவுள்ள ரசிகர்கள் முன் வரிசைகளில் அமர்ந்திருந்தால் ஆடுபவர்களுக்கு உற்சாகமாக இருக்கும். நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்பவர்கள் இதைக் கவனத்தில் எடுப்பார்களாக.

# தொடர்கதை

பகுதி — 03

# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு




வெள்ளத்தினால் ஏற்பட்ட முற்று முழுதான அழிவிலிருந்து மீண்டு எழ சில வருடங்கள் தேவைப்படும் என்றே சிவத்துக்குத் தோன்றியது. எண்பத்திநாலு சித்திரை வரை மழை தொடர்ந்து பெய்தது.

நட்டமோ லாபமோ மண்ணை நம்பி வாழ்பவனால் நெல் விதைப்பை கைவிட முடியாது.இந்தத் தடவை விட்டதை அடுத்த தடவை எடுத்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை, பெரும் இழப்பிலிருந்து மனதை தேற்றிக்கொண்டு அடுத்த விதைப்புக்குத் தயாரானார்கள்.

அடுத்து வந்த நாட்கள் புதிய புதிய நெருக்கடிகளுடன் நகர்ந்து போனது. ஒரு வெள்ளிக்கிழமை வீட்டிலிருந்து புறப்பட்டு வயலுக்குப் போனபோது ஓவசியர் சந்தியில் ஒரு இளைஞன் காரை மறித்து, "பரந்தன் சந்தியில ஆமி நிற்குதா?" என்று விசாரித்தான். சிவம் அவனைப் பார்த்தார்.

மடித்துக்கட்டிய சாரம், அரைக்கை சேட்டு, தோளில் ஒரு கறுப்புப் பை பார்த்தவுடன் புரிந்தது. "ஆமி நிற்கிற சிலமன் இல்லை.நான் குமரபுரத்திலயிருந்து வாறன் தம்பி" "சரி ஐயா! நீங்கள் போங்கோ" அவர் கார் நகர்ந்து மேலே போனது. இப்படித்தான் முதல்தடவையாய் மாறன் அவருக்கு அறிமுகமானான். இன்னொரு நாள், மாலை நேரம் முருகன் கோவிலில் கும்பிட்டு திரும்பி வர ஒழுங்கை முகப்பில் நின்றுகொண்டிருந்தான். அவரைப் பார்த்து சிரித்து"எப்பிடி ஐயா இருக்கிறீங்கள்" என்றான்.

"என்னப்பன் பேர்?"

"மாறன்" என்றான். அது சொந்தப் பெயராய் இருக்காது என்று தெரியும். ஊர்பேர் எதுவோ யார்பெற்ற பிள்ளையோ.......மெல்லிய கறுப்பான தோற்றமுள்ள அந்த இளைஞனை பார்த்தவுடனேயே நேசிக்கத் தோன்றியது.

அவன் கண்களில் பசிக் களைப்பு இருப்பதைப் பார்த்து வீட்டுக்கு அழைத்து வந்து சாப்பிட வைத்தார்.

"வடிவாய் சாப்பிடு தம்பி" பராசத்தி அள்ளி அள்ளிப்போட்டாள்."நேற்று மத்தியானம் சாப்பிட்டது அம்மா" பராசத்திக்கு மனம்நெகிழ்ந்து விட்டது.அவன் அதிகம் பேசாமலே சாப்பிட்டான். கைகழுவி வாய் துடைத்துக் கொண்டு சிறிது நேரம் இரண்டு வயது சாந்தனைத் தூக்கி வைத்து விளையாடினான். போயிட்டு வாறன் என்று சொல்லிக் கொண்டு இருளுக்குள் நடந்து போய்விட்டான்.

அதன்பின்னர் எப்போதாவது மாறன் வருவான் தன்னுடன் வேறு சிலரையும் அழைத்து வருவான். எல்லோருமாய் சாப்பிட்டுப் போவார்கள்."இவன்தான் கார்த்திக். இந்த ஏரியாப் பொறுப்பாளர்,இவன் கண்ணாடி சந்திரன் கிளிநொச்சிக்கு இவன். இனி இவைதான் அடிக்கடி இங்க வருவினம்."

**அத்தியாயம்-02**

கார்த்திக்கும் கண்ணாடிசந்திரனும் முருகன் கோவில்முன்றலில் ஊரைக்கூட்டி வைத்துக் கூட்டம் நடாத்தினார்கள். தங்கள் கொள்கைகள், செயற்பாடுகள் பற்றியும் தாங்கள் இந்த நிலைக்கு வரவேண்டிய காரணங்கள் பற்றியும் விளக்கம் சொன்னார்கள்.

கிராமத்து மக்கள் ஆவென்று வியப்போடு அவர்களைப் பார்த்து நின்றார்கள். இப்போது வானத்திலும் இரைச்சல்கள் ஆரம்பமாகியிருந்தன. பயணிகள் விமானங்களை மட்டுமே பார்த்தவர்களுக்கு போர்விமானங்கள் கண்களை உறுத்தின. ஹெலிஹொப்டர்கள் வடக்கிற்கும் தெற்கிற்குமாக பறந்து திரிந்தன.வேவு விமானங்கள் அடிக்கடி வந்து சுற்றிவிட்டுச் சென்றன. கரடிப்போக்குச்சந்தியில் பொம்பர்கள் குண்டுபோட்டதில் நிலம் மட்டுமல்ல மனங்களும் அதிர்ந்தன.

நாட்கள் ஒவ்வொன்றாய் நகர்ந்தன.விக்னேஸ்வரன் பட்டதாரி



ஆசிரிய நியமனம் பெற்று ஊருடனேயே வந்தான். திருமணம் செய்து குழந்தைகளுடன் கிளிநொச்சியில் வசித்து வந்தான். சியாமளாவிற்கு ஊர்மெச்ச திருமணம் செய்து வைத்தார். செந்தில்நாதன் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக இருக்கிறான். குமரபுரத்தில் அவளுக்கென கட்டப்பட்ட வீட்டில் அவர்களை குடிவைத்தார். சியாமளா குமரபுரம் பாடசாலையிலேயே ஆசிரியையாக இருந்தாள். இப்போது பாடசாலை மூன்று கட்டடங்களுடன் அதிபர், ஆசிரியர்கள் என்று நல்ல விதமாக இயங்கிக் கொண்டிருந்தது. சித்திரா இந்த வருடம் உயர்தரப்பரீட்சை எடுத்திருந்தாள். முருகானந்தன் குடும்பத்தோடு வீட்டிலேயே இருப்பது அவருக்கு பெரிய ஆறுதலாய் இருந்தது. சின்ன வயதிலிருந்தே சாந்தன் அவருக்கு அருமையான வனாக வளர்ந்தான். மகேந்திரன் வெளிநாடு பயணமானான். அவருக்கு இதில் அவ்வளவு விருப்பமில்லா விட்டாலும் பிள்ளைகளின் முடிவுக்கு மறுப்புச் சொல்லாமல் அனுப்பிவைத் தார்.

இப்போதெல்லாம் பிரதான வீதியில் இராணுவ வாகனங்களின் இரைச்சல் அதிகமாய்க் கேட்டன. கணேசபுரத்தில் வைத்து சந்தேகம் என்று இரண்டு இளைஞர்களை இராணுவம் பிடித்துப்போனது. அதில் ஒருவன் வயல் வீட்டில் இருக்கும் ராமசாமியின் மகன். ராமசாமியும் மரியக்கண்டுவும் பதறியடித்துக் கொண்டு அவரிடம் ஓடிவந்தார்கள். ராமசாமியின் கண்ணீர் மனதை வருத்தியது. இராணுவத்தை நெருங்கி எதுவும் கதைக்கமுடியாது. ஏற்கெனவே அறிமுகமாயிருந்த பொலிஸ் சுப்பிரிண்டனை அணுகினார்கள். அவர் சிங்களவராய் இருந்தாலும் பல வருடங்களாக அங்கே இருப்பதால் நன்கு அறிமுகமானவராய் இருந்தார்.

"அவங்களை விசாரிக்கிறதுக்காக ஆனையிறவுக்கு கூட்டிப் போயிருக்காங்க.பயப்படவாணாம் விட்டிடுவாங்க"

அவர் கண்களில் சங்கட உணர்வு பிரதிபலித்தது.

"போய் பார்க்க ஏலுமா ஐயா" ராமசாமி கைகளைக் குவித்து அழுதான். "பார்க்க ஏலாது பயப்படவாணாம் வருவாங்க" "உங்களால ஏதாவது செய்ய முடியுமா" அவர் கேட்டார். முடியாது என்பதை வருத்தத்தோடு ஒப்புக்கொண்டார். ஒல்லாந்தரின் பஸ்குலாக் கோட்டை வாடிவீடாகி இப்போது சித்திரவதைக் கூடமாக மாறிப் போயிருப்பது பற்றி அந்த அதிகாரியினால் வெளிப்படையாக கதைக்க முடியாமற் போனது.

அடுத்து என்ன செய்வது என்று திகைப்பாக இருந்தது. ஆனையிறவை நெருங்க முடியவில்லை. ஒருவாரத்தின் பின் கடும்சித்திரவதைகளுக்குப் பிறகு இருவரையும் குற்றுயிரான நிலையில் பரந்தன் சந்தியில் எறிந்து விட்டுப்போனார்கள்.இப்பிடி அடிச்சுப்போட்டிட்டாங்களே என்று ஆஸ்பத்திரியில் நின்று ராமசாமி அழுதபோது "ஏதோ உயிரோட பிள்ளை வந்திட்டான்தானே அழாதை....." என்று ஆறுதல் சொல்லத்தான் முடிந்தது.

என்ன ஏதென்று எந்தக் கேள்விகளும் கேட்கப்படாமலே இளம் வயதினர் கைதுசெய்யப்படுவது அங்கும் இங்குமாய்



நடந்துகொண்டிருந்தது. அவர்களில் சிலர்தான் விடுதலையாகி வந்தனர்.

இப்போது ஊருக்குள்ளும் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. கடிதங்கள் எழுதி வைத்து விட்டு இளம் தலைமுறையினர் காணாமல் போனார்கள்.அங்கே இங்கே என்று சிலதாக்குதல்கள் நடந்தன.ஊருக்குள் சுற்றிவளைப்புத் தேடுதல் என்று இராணுவம் உலாவத் தொடங்கியது.

நெல் ஏற்றிப் போன லொறிகளும், உழவியந்திரங்களும் ஆனையிறவில் கடும் சோதனைக்குள்ளாகின. மட்டக்களப்பிலிருந்து அரிவுவெட்டுக்கென்று வருகின்ற காக்காமாரின் வருகை இப்போது குறைந்து விட்டது. வழக்கமாய் இருபத்தைந்து பேருடன் வருகின்ற ஆதம்லெப்பைக்காக்கா இம்முறை பத்துப்பேருடன் வந்தார்.

"இங்கே வரப்பயப்பிடறாங்க முதலாளி, நாம ஒங்க காணியை வெட்டித்தந்திட்டு ஊர்பாக்க போயிடறோம் வெடிச்சத்தத்துக்குள்ள இங்க இரிக்க பயம்மா இருக்கு"

இயல்பான அத்தனை செயற்பாடுகளிலும் ஒரு தழும்பல் நிலை தோன்றியது. உட்புறக் கிராமங்களில் போராளிகளின் நடமாட்டம் அதிகரித்தன. தோளில் ஒரு பையுடன் காலில் செருப்பும் இல்லாமல் நடந்து திரியும் அவர்களை சனங்கள் கண்களை விரித்துக் கொண்டு பார்த்தார்கள். அவர்களின் நடமாட்டம் பற்றி இராணுவம் விசாரிக்கும்போது மௌனமாய் நின்றார்கள். மாறனும், கார்த்திக்கும், கண்ணாடிசந்திரனும் கிராம மக்களின் நேசிப்புக்குரியவர்களானார்கள். அலைந்து திரிந்து களைத்து வந்தவர்களுக்கு வாஞ்சையோடு உணவு கொடுத்தார்கள்.

ஆனையிறவில் கடும்சோதனை நடந்தாலும் லொறிகள் மட்டும் நெல் ஏற்றிக்கொண்டுபோக வந்துகொண்டிருந்தன. வழமை போலவே இரண்டு போக நெல்லின் அறுவடைக்காலங்கள் மட்டும் மனதுக்கு ஆனந்தம் தந்தன. வெள்ளத்தினால் ஏற்பட்ட அழிவிலிருந்து மீண்டு எழ அவர் எண்ணியபடி சில வருடங்கள் பிடித்தன. அடுத்த சிறுபோகமும், காலபோகமும் சிவத்துக்கு வாய்ப்பாய் அமைந்தன. பராசத்தியின் நகைகளை வங்கியிலிருந்து மீட்டுக்கொண்டு முக்கியமான கடன்களையும் கொடுத்து விட்டார்.

கிளிநொச்சி முகாமிலிருந்த இராணுவத்தை வெளிவர விடாமல் போராளிகள் சுற்றி வளைத்து நின்றார்கள்.கிளிநொச்சி நகரத்தின் மையப் பகுதி ஆளரவமற்று வெறிச்சிட்டுப் போய்விட்டது. நகரமத்தியில் இயங்கிய அத்தனை செயற்பாடுகளும் உட்புறக் கிராமங்களுக்கு நகர்ந்து கொண்டன. கச்சேரி,வைத்தியசாலை முரசுமோட்டைக்கு இடம்மாறின.

முகாமுக்குள்ளிருந்து இராணுவம் செலுத்திய எறிகணைகள் ஊர் மனைக்குள் வந்து விழுந்து வெடித்தன. இரவில் உறங்க முடியாமல் வெடிஅதிர்வுகள் கேட்டுக் கொண்டிருந்தன.

உருத்திரபுரம் விதானையாரின் மகன் முப்பத்திரண்டு வயது சிவரூபன் திருமணமான நாற்பத்தைந்து நாள் ஆன இளம் கணவன் எறிகணை வீச்சில் உடல் சிதறிப் பலியானதை ஊர் ரத்தம் உறைய பார்த்து நின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்த பஸ்ஸில் பிரயாணம் செய்த சுகந்தி ரீச்சர் விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி அதே இடத்தில் இறந்து போனது பெரும் அதிர்வினைத் தந்தது. அடிக்கடி இந்த விதமாய் ஏற்படும் மரணங்கள் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தின. தாக்குதலில் காயப்படுபவர்களை யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு பல சிரமங்களின் நடுவேதான் கொண்டுபோக வேண்டியிருந்தது.

முற்றுகையிலிருந்து பலதடவை வெளியேற முயன்றும் முடியாமல் இருந்த இராணுவம் ஒருநாள் உடைத்துக்கொண்டு வெளியே வந்தது. அது அறுவடைக் காலம், வயல்களில் அரிவுவெட்டு, சூடடி மும்முரமாய் நடந்து கொண்டிருந்த மாசி மாதம்.

சூடடித்து நெல் மூட்டைகள் நெல்லறைக்குள் அடுக்கப்பட்டுக் கொண்டிருந்த. இரண்டுதடவை லொறி வந்துநெல் ஏற்றிக்கொண்டு போனது. சூழலின் பதட்டத்தில் லொறிகளின் வருகை குறைவாக இருந்தன. அடிக்கிற நெல்லை அடுக்கி வையுங்கோ அண்ணை. கொஞ்சம் பொறுத்து லொறிகளைக் கொண்டு வாறன்" என்று புறோக்கர் குணம் சொல்லியிருந்தான்.

அவர்கள் யாரும் எதிர்பாராத விதமாக அதிகாலையிலேயே வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கிவிட்டன. தலைக்கு மேலாக ஹெலிஹொப்டர்கள், பொம்பர்கள் பெரும் இரைச் சலுடன் சுற்றிப் பறந்தன. சண்டை பெரிதாக இருக்கும் போல் தோன்றியது. கிளிநொச்சியிலிருந்து முற்றுகையை உடைத்துக்கொண்டு இராணுவம் பரந்தன் வரை முன்னேறியது.

கிராமத்திலிருந்து அனைவரும் வீடு வாசல் விட்டு வெளியேறினார்கள். சிவம் வீட்டார் எல்லோரும் ஊர்ஆட்களோடு பின்புறமாக போய் கிராம எல்லையில் ஒரு வீட்டில் பகல் எல்லாம் தங்கி நின்றார்கள். பொழுது இருளும் வரை பரந்தன் சந்தியில் வெடிச்சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. வானத்திலிருந்து குண்டுகள் மழையாய் வந்து விழுந்து வெடித்தன.

இராணுவம் பரந்தன்வரை வந்து நிற்பது தெரிந்தது. நாளைக்கு பகல் ஊருக்குள் போய் இருக்க முடியாது என்றே தோன்றியது. ஐந்து வயது சாந்தன் ஒவ்வொரு வெடிச்சத்தத்திற்கும் பயத்தில் அவரை கட்டிக் கொண்டு அழுதான். மூன்று வயது சுதன் பராசத்தியின் கையை விட்டு இறங்கவில்லை. அடுத்து என்ன செய்வது என்று ஒருவருக்கும் புரியவில்லை.

"என்ன செய்யலாம் சிவமண்ணை சொல்லுங்கோ" தர்மலிங்கமும் சிதம்பரியும் வந்து கேட்டார்கள். எல்லோர் முகங்களும் பயத்தில் வெளிறிப் போயிருந்தன. சிவத்துக்கும் யோசனையாகத்தான் இருந்தது. "நாளைக்கு என்ன நடக்குமோ தெரியாது. பொம்பிளையளும் பிள்ளை யளும் இங்கேயே இருக்கட்டும் ஆம்பிளையல் பின்பக்கத்தால போய் முக்கியமான சாமான்களை எடுத்து வருவம். கொஞ்சம் தூரத்திலபோய் இருந்திட்டு பிறகு நிலமை பார்த்து வருவம்"

"ஓமண்ணை அப்படித்தான் செய்வம்"பசியால் அழுகின்ற குழந்தைகளுக்கு அந்த வீட்டில் கஞ்சி காச்சிக்கொடுக்க ஒழுங்கு செய்துவிட்டு ஊருக்குள் போனார்கள். பின்ஒழுங்கையால் வீட்டிற்குப் போய் சிவம் காரையும் முருகானந்தன், செந்தில்நாதன் உழவியந்திரங்களையும் எடுத்து முக்கிய பொருட்களை அள்ளிப்போட்டுக்கொண்டார்கள். எதை எடுப்பது எதைவிடுவது என்று தெரியவில்லை. வீட்டுக்குள் எத்தனை பொருட்கள். நெல்லறைக்குள் அடுக்கப்பட்ட நெல்மூட்டைகள் முருகன் கோவில் கடந்து வரும்போது மனம் முருகா முருகா என அலறியது.

பின் ஒழுங்கைகளில் ஊர் ஆட்கள் திரண்டு நின்று சைக்கிள்கள் உழவியந்திரங்கள், மாட்டுவண்டில்களில் ஏறி நகர்ந்து போனார்கள். பலர் தலைச்சுமைகளுடனும் குழந்தைகளுடனும் நடந்தார்கள். குஞ்சுப்பரந்தன் வரை அவர்கள் பயணம் தொடர்ந்தது.வீடு வாசல்விட்டு நெஞ்சில் பாரத்துடன் இடம்பெயர்ந்து அவர்கள் ஓடிய முதலாவது நிகழ்வு அது.

(தொடரும்)

அரசாங்க அமைப்பு முறைகள் அனைத்திலும், மக்களே, உண்மையில் சட்டம் இயற்றும் சக்தி. - எட்மண்ட் பர்க்



## சிறுகதை

# படைப்பாளி

**க.தயாபரன்**

"**மேகநாதா,** முதலில சாப்பிடு அல்லது பேப்பரைப் பார்த்த துக்கப்புறம் சாப்பிடு...... இரண்டு வேலைகளையும் ஒரு சமயத்தில் செய்யாதே. புரையேறிடப் போகுது!" அம்மா செல்லமாகக் கடிந்தாள்.

"கல்லூரிக்குப் போகணும்..... ஆற அமர காரியமாற்ற நேரமில்லை."

"அப்படி எதைத்தான் பேப்பரிலை விழுந்து விழுந்து பார்க்கிறே......?"

"உதிரம் கொடுத்து வளர்த்த பயிர் தொடரின் ஐந்தாம் அத்தியாயம் பிரசுரமாகியிருக்கு. அப்படியே நெஞ்சத்தைத் தொடுகிறமாதிரி கதை அமைஞ்சிருக்கம்மா: ஒவ்வொரு அத்தியாயத்திலும் விறுவிறுப்பு ஏறிக்கொண்டே போகிறது. நமக்குள்ளே இப்படியொரு எழுத்தாளர் இருக்கிறதே இப்போதுதானே வெளிச்சத்துக்கு வருகிறது!"

"அட, அதுவா....! நானும் முதலிரு அத்தியாயங்கள் பார்த்தேன். கதை சொல்லும் பாங்கு நேர்த்தியாக விருந்தாலும் இதன் கரு யதார்த்தமாக இல்லியே....! யாழ்ப்பாண படித்த குடும்பத்துப் பாரம்பரியத்தில் பிறந்த அந்தப் பையன் கேசவன் வாசிட்டிக்குப் படிக்கப்போகிற வாய்ப்பை உதறிட்டு ஒரு போராளியாக மாறுகிறானாம்..... அப்போ அவன் கையே உதவியென்று நம்பியிருந்த தாய் மற்றும் அரைடஜன் இளைய சகோதரங்களின் கதி.....?"

"அம்மா, அவன் போராளியாக தூண்டின காரணிகளை மீட்டுப் பாரம்மா. கடலில தொழிலுக்குப்போன பேரனை படை வெறியாட்டத்தில் இழக்கிறான்.... தகப்பன் ஒரு பேராசிரியர் என்பதைக்கூட எண்ணிப்பார்க்காத வன்முறைக்கும்பல் இனக்கலவரத்தில் அவர் கதையை முடித்தது! இவ்வளவு கொடுமைகளுக்குப்பிறகும் அமைதியாக குடும்ப பாரத்தை சுமந்து வந்தவனை திசை மாற்றியது எது? ஒட்டுமொத்த யாழ்ப்பாணமுமே கொட்டும் மழையில் ஒரு வழிப்பாதை வழியே செல்லுமிடம் தெரியாது இடம்பெயர்ந்த அவலமும் அந்த மூன்று நாட்களும் அவனைச்சுற்றி நிகழ்ந்த மனதைப்பிழிந்த துயரங்களும் தான்....!"

"ஆனாலும் என்னால் உதை ஜீரணிச்சுக்கொள்ளமுடியாது, போ! அவன் படிச்சுப்பட்டம் பெற்று சமுதாயத்திலே முன்னணிக்கு வந்து குடும்பச்சுமையை தாங்கியிருக்க வேணும்: வறுமையில தவித்த குடும்பத்துக்கு ஒரு வழியைக்காட்டியிருக்க வேணும்."

"சுவரில்லாமல் எப்படிம்மா சித்திரம் கீற முடியும். அடுத்த நாள் உயிர் வாழ்வே நிச்சியமில்லாத போது அவனுக்க வேறு வழி....?"

அம்மா உலையில் அரிசி போட உள்ளே போனாள். மேகநாதன் எச்சிற்தட்டை தரையில் வைத்துவிட்டு பேப்பரை நீவிக்கொண்டு இரு கைகளிலும் வசதியாகப் பிடித்தான். ஒவ்வொரு தொடரிலும் நுழைவாயிலாக அமையும் முகப்பு எழுத்துக்கள்.....

'இது கற்பனை மெருகேற்றிய நவீனமல்ல: வாசகர்களின் சபல உணர்வை தூண்டி உள்ளக்கிளர்ச்சியை ஏற்படுத்தும் படைப்புமல்ல.... அதில் வரும் ஒவ்வொரு சம்பவங்களும் அக்கினியில் வெந்து புடம் போடப்பட்ட இந்த தாயகத்தினதும் அதன் மாந்தர்களினதும் கதை.."

அதன்கீழே வரையப்பட்டிருந்த நவீன ஓவியம் சொல்லும் செய்திதான் என்ன....? அகன்ற சமுத்திர நீரின் எல்லையாக வானம் இரண்டிற்கும் இடையே புள்ளியாகப் புலப்படும் ஆதவனின் கதிர்கள்.

ஆதவன் எழுகிறதா....? மறைகின்றதா? கதையின்படி விடிலியல் படிமம் தான் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவேண்டும்.

"அடே தம்பி, பூனை சாப்பாட்டுப் பிளேற்றில வாய் வைச்சிட்டுதடா" மரக்கறிக் கூடையுடன் படியேறி வந்த அப்பா உதைத்ததில் பூனை பந்தாய்ச் சுருண்டு அப்பால் விழுந்தது.

வெளியே வந்து பார்த்த அம்மா, "அது பாவம் வாயில்லாப்பிராணி" என்றாள். "மேகநாதா நேரம் கடந்திட்டிருக்கே கல்லூரிக்கு புறப்படலையா.....?" "போவதற்கிடையில் தமிழ் இலக்கியவிழா சம்பந்தமாக சிலரைப்பார்த்துப் போகவேண்டியிருக்கப்பா - இன்னும் நாலு நாட்கள் தான் மீதமிருக்கு! ரமணாவை எதிர் பார்த்திட்டிருக்கேன். "அப்படின்னா இந்தத் தடவை எனக்கு அழைப்பு இல்லையா.....?" என்றார் அப்பா முகம் சுருங்க. "தேசிய விருது வென்ற மறுமலர்ச்சி எழுத்தாளர் - திருவரங்கம் இல்லாமலா.....? நிச்சயம் உங்களுக்கும் அழைப்பு வரும்." மேகநாதன் மெதுவாகச் சிரித்தான். "இவ்வாண்டு ஆரை பிரதம அதிதியாக அழைக்கிறதாக உத்தேசம்?" மேகநாதன் உதட்டைப்பிதுக்கினான். "தேரியலேப்பா, நான் மாணவர் தமிழ்ச் சங்கத்தின் நடப்பு ஆண்டு காரியதரிசி மட்டுமே! பொதுக்கூட்டம், தாய்த் தமிழ்ச் சங்கக் கூட்டம் இரண்டிலும் கலந்தே இது சம்மந்தமாக முடிவு காணவேண்டும்.

"கல்லூரியில் பரவலாக எல்லோரிடமும் உள்ள அபிப்பிராயம், வழமையான சம்பிரதாயங்களிலிருந்து விடுபட்டு இளம் படைப்பாளியொருவரை அழைத்துக் கௌரவிக்க வேண்டும் என்பதே"அதைக்கேட்ட திருவரங்கம் நகைத்தார். "ஏன்டா தமிழ்ச் சங்க விழாவில அத்தனை பேர்நிறைந்த சபையில் நாலு கருத்துக்களை எடுத்துச்சொல்ல ஒரு ஆளுமையான ஆள் வேணும்டா....

ஏதோ எழுதுகிறேன், கிழிக்கிறேன் அப்படின்னு இப்போதுதான் பேனாவை எடுத்தவனை அதிதியாகப் போட்டால் சபை கொல்லுண்ணு போயிடும் மேகநாதா....!"

"அப்பா,உங்களைப்போல எழுத்தாளர் முகவரியை நெற்றியிலை ஒட்டிக்கொண்டு வாழுறவங்களுக்கு இளம் படைப்பாளிகளை - அதுவும் புரட்சிக் கருத்துக்களை விதைக்கிறவனை எள்ளளவும் பிடிக்காதே! இருபது முப்பது ஆண்டுகளாக எழுதிக் கொட்டை போட்டவர்கள் சாதிக்க முடியாததை நேத்தைக்கு முளைச்சவன் செய்யறானேன்னு ஆதங்கம்: உங்களை மிஞ்சிடுவானோ என்ற கலக்கம்.

"அப்பா ஒரு சமுதாயத்தை நேசிக்கிற கலைஞன் என்றவன் ஆரோக்கியமான மாற்றங்களை மனசார ஏற்றுக்கணும்: முன்னேற்றங்களை தட்டிக்கொடுக்கணும். அப்படிச்செய்யாத கலைஞன்- எழுத்தாளன் வடிகட்டின சுயநலவாதியாகவே இருப்பான்."

வார்த்தைப் போர் படிப்படியாக சூடு பிடிக்கத் தொடங்கியதை உணர்ந்த அம்மா வழமைபோல பூதாகாரமாகிவிடுமெனப் பயந்தாள். மகனிடம் சாப்பாட்டுப் பெட்டியைக் கொடுத்து கல்லூரிக்கு விரட்டினாள்.

• • •

மேகநாதன் சொல்ல தமிழ் ஆசிரியர் வேலாயுதம் முகத்தில் வியப்பு! "என்னது, வாராவாரம் வெளியாகிற இந்த 'உதிரம் கொடுத்து வளர்த்த பயிர்' தொடரை எழுதுவது ஒரு போராளியா....? அதுவும் எங்கள் கல்லூரியின் பழைய மாணவனா.....?" "ஆமாம் சேர் காலையில் தான் நானும் அறிந்தேன். இந்தக் காரணங்களுக்காகவே இளம் எழுத்தாளர் 'துருவன்' அவர்களை இலக்கிய விழாவிற்கு அழைக்கக் கோருகிறோம்"



வேலாயுதமும் அதை ஆமோதிக்குமாப்போல் தலையசைத்தார். "எங்கள் முற்றத்தில் வளர்ந்த ஓர் இளம் குருத்தை முதலில் கௌரவிப்பது நாங்களாகவே இருக்கட்டும்: இது அவரது எதிர்கால வளர்ச்சிக்கு உண்மையாகவே புத்தூக்கம் தரும்! இது ஒரு பரிசோதனை முயற்சியாக இருப்பதால் தாய்த் தமிழ்ச்சங்க செயற்குழுவின் கருத்தை நாடிபிடித்துப் பார்க்க வேணும்- முக்கியமாக பண்டிதர் பரமநாதனின் இசைவைப் பெற்றாகணும்....."

மேகநாதன் மைதானத்துக்குப்போக, வேலாயுதம் ஆவலுடன் பத்திரிகையைத் திறந்து உதிரம் கொடுத்து வளர்த்த பயிர்- ஒன்பதாம் அத்தியாயத்தில் மூழ்கினார்.

"...... கஸ்தூரி இது ஆஸ்பத்திரி! இப்பிடி பொது இடத்தில வந்து நின்று அழுகிறது பார்க்கிறவங்களுக்கு நல்லாயிருக்காது. இவ்வளவு காயங்களை உடலில சுமந்ததுக்குப் பிறகும் உயிர்பிழைச்சிருக்கேனே, அதுக்காக ஆறுதல் பட்டுக்கொள்."

"எப்பிடிக் கேசவன் அமைதியாய் இருக்க முடியும் ....? ஓய்வில்லாமல் இயங்கின உங்கள் கால் இரண்டும் இடுப்பின் கீழாக அப்படியே விறைச்சு சூம்பிக்கிடக்குதே!"

"அதனாலென்ன என் இரு கைகளும் பழுதின்றி இருக்குதே. இரு கைகளையும் முட்டியாக்கிக் காட்டினான்.

அவள் முகத்தில் சற்று ஏமாற்றம் முன்பென்றால் என்ன சொல்லியிருப்பான்? அவள் இரு கைகளையும் சேர்த்திழுத்து "எல்லாத்துக்கும் பதிலாக உன் வலக்கைகளிருக்கே கஸ்தூரி!"இவ்வாறு அவன் சொல்ல வேண்டுமென்றே எதிர்பார்த் தாள். "கடந்துபோன ஆண்டுகளில் நான் உனக்கென்று மடலெதுவும் அனுப்பவில்லை ஏன் தெரியுமா......?"

"............." "நீ என் நினைப்பையெல்லாம் மறந்து ஒதுக்கிடவேணுங்கறதுக்காகத்தான்."

"ஆனால் என் மனச்சுமையின் கனம் இன்னும் பல மடங்கு அதிகரிச்சிட்டது. உங்களுக்குப் புரியுமா கேசவன்?" "போராளியாகிவிட்ட என்னை நினைத்து இனியும் நீ காத்திருக்கவேண்டாம். இதோ! உன் கண்முன்னால் பார்க்கிறாயே கஸ்தூரி நான் உடலியக்கம் மந்தமாகி படுக்கையில் விழுந்திட்டதை. அதனால....."

" பள்ளிக்கூட நாட்களில இலக்கியப் பாடத்தில கேள்விப்பட்ட கண்ணகியோட வாழ்க்கையை மறந்துட்டீங்களா கேசவன். நிஜ வாழ்க்கையில அப்படியொரு கண்ணகி பாத்திரமாவது எனக்குக் கிடைக்கக் கூடாதா....! காலம் முழுதும் என் மனம் விரும்பியவனின் அருகி லிருந்து பணிவிடை செய்யும் பாக்கியமேனும் கிட்டாதா.....?"

"இல்லை, என்னால் முடியாது! உனக்கு அப்படி ஒரு ஆயுள்தண்டனையைத்தந்து விட நான் தயாரில்லை. உன்னால் முடிந்தால் இடைநடுவில் நின்றுபோன என் தாயகத்தின் விடிவு நோக்கிய பயணத்தை நான் விட்ட இடத்திலிருந்து ஆரம்பி...." சொல்லிமுடித்த கேசவன் ஆயாசத்தோடு கண்களை இறுக்க மூடினான்.

வேலாயுதம் மாஸ்டர் பத்திரிகையை மடித்து மேகநாதனின் மேசை மீது போட்டுவிட்டு எழுந்தார். 'அடுத்ததும் இறுதியுமான அத்தியாயம் எப்படி அமையப் போகிறதோ.....?'

• • •

"கொஞ்ச நேரம் காத்திருங்கள். துருவன் அண்ணா சாப்பிட்டு முடிகிற நேரமாச்சு..." என்று கூறிய விபுலன் எனும் அந்தச் சிறிய போராளி தொடர்ந்தும் முற்றத்தில் நின்ற வெள்ளை வானை கழுவுவதில் ஈடுபட்டான்.

வட்டக்கொட்டிலின் மேலே பரப்பியிருந்த வைக்கோலின் உபயத்தினால் சித்திரை வெக்கை காணாமல் போயிருந்தது. பண்டிதர் பரமநாதனின் பார்வையில் அங்கு மேசையில் கிடந்த கையெழுத்துப்பிரதியொன்று பட அதைக் கையிலெடுத்தார்.

"மாஸ்டர், உது துருவன் அண்ணா எழுதிவருகிற 'உதிரம் கொடுத்து வளர்த்த பயிர்' தொடரின் இறுதி அத்தியாயம்..... வாசித்துவிட்டு உங்கள்கருத்தைச் சொல்லுங்களேன்" கைவேலையை விட்டு நிமிர்ந்த விபுலன் சொன்னான்.

"தம்பி உனக்கும் கூட இலக்கிய ஈடுபாடு உண்டோ?" வேலாயுதம் ஆர்வமாகக் கேட்டார்.

"சே...சே.., எல்லாரையும் போல நானுமொரு சாதாரண வாசகன். அவ்வளவே....! துருவன் அண்ணாவின் அத்தனை எழுத்துக்களையும் அச்சில் ஏறமுதல் வாசித்துத் திருத்தம் சொல்வது இந்த விபுலன் தான்!" மெல்லச் சிரித்தான்.

"விபுலா கிணற்றடியில் கழுவிப்போட்ட உடுப்புக்கள் இருக்கு..... எல்லாத்தையும் வெய்யிலில் உலரப்போடு!" வீட்டினுள் இருந்து அந்தத் துருவன் உரத்துச் சொல்வதுகேட்டது. திறந்திருந்த கதவினூடு விறாந்தையின் எதிர் ஓரத்தில் மேசைக்குப் பின்னால் வாட்டசாட்டமான அவன் உருவம் தெரிந்தது. வீட்டின் பின்பக்கம் போன மதன் திரும்பும்போது பெரிய இரும்பு வாளி நிறைய ஈர உடுப்புக்கள்.

கையெழுத்துப்பிரதியை மேய்ந்துகொண்டிருந்த பண்டிதர் இடையிடையே பார்வையை உயர்த்தி தொலைவை வெறித்தார்.

"தம்பி கல்லூரியிலிருந்து இலக்கிய விழா சம்பந்தமாக வந்திருக்கும் மாஸ்ரர்கள் இருவரையும் உள்ளே அழைத்து வா..." வாசலைப் பார்த்து அவன் அழைக்க இருவரும் எழுந்து போனார்கள்.

அவன் எச்சிற்தட்டில் கை கழுவிவிட்டதை வெளியே சிந்தாதவாறு விபுலன் எடுத்துக்கொண்டு வெளியேறினான். அப்போது பண்டிதர் வேலாயுதத்தை அர்த்தத்தோடு பார்த்தார். மேசைக்குப் பின்னாலிருந்தவாறு துருவன் ஒவ்வொரு சிறிய வேலைகளுக்கும் விபுலனை ஏவிக்கொண்டிருந்த போதெல்லாம் அவ்வாறுதான் வேலாயுதத்தைப் பார்த்தார்.

உரையாடல் பல விடயங்களுக்கும் தாவி தொடர்கதையில் வந்து நின்றது. "உங்கள் இறுதி அத்தியாயத்தின் கையெழுத்துப்பிரதியை வாசித்தேன். தொடர்கதை பூராகவுமே பிரிவும் துயரமும் விரவிக் கிடக்கு. கதை முடிவிலாவது விழுப்புண்ணடைந்த அந்த கதாநாயகனும் போராளியாக மாறின கஸ்தூரியும் ஒன்று சேர்கின்ற மாதிரி எழுதக் கூடாதா.....?" பண்டிதர் தனது பக்க நியாயத்தைக்கேட்டார்.

சற்றுநேரம் அமைதியாக இருந்தவன்,"முடியாது பண்டிதர் ஐயா! நிஜ வாழ்க்கையில் நான் எழுதியதுபோலவே சம்பவித்தது.... அதில கற்பனை மெருகேற்றி யதார்த்தத்தை மறுக்க மனம் ஒப்பவில்லை"

"துருவன், நீர் என்ன சொல்கிறீர்....?"

"அந்த கேசவன் என்ற கதாநாயகன் நான்தான்! என்னை தத்தி நடை பயின்ற நாளிலிருந்து அறிந்து, படிப்படியாக காதலை வளர்த்து எனக்குள் ஒரு தனி உலகத்தை சிருஷ்டிக்க காரணமானவள் இன்று அருவமாகிப்போனாள்! போராளியாக மாறியவள் கடல் மடியில் கலந்து ஐந் தாண்டுகள் கூட ஆயிற்று!" வார்த்தைகளில் பிசிறின்றிச் சொல்லிமுடித்தவன், விபுலன் உருட்டி வந்த சக்கர நாற்காலியில் ஏறி அமர்ந்து கொண்டான். எதிரே நின்ற பண்டிதரும், வேலாயுதமும் அதிர்ச்சியில் உறைந்துபோயினர்.

'என்ன சொல்ல.....? பண்டிதர் ஆழமாக சிந்திப்பது நீண்ட அவரது மௌனத்திலிருந்து வேலாயுதத்திற்குப் புரிந்தது. 'பொய்த்துப்போன தன் மனக்கணக்கை எடைபோடுகிறாரா...!" "தம்பி துருவன், எங்கள் மண்ணின் அவலங்களை அதில புதைந்துபோயிருக்கிற உண்மைகளை வெளிக்கொண்டு வருகின்ற உம்மைப்போன்ற இளம் படைப்பாளிகள், நிறையவே உருவாக வேண்டும்; ஏராளமான படைப்புக்களை உலகுக்குத் தரவேணும்.. இந்த நிலத்தின் விடிவுக்காக தந்த விலைகளை எதிர்கால தலைமுறைக்கு விபரமாக எழுதிவைக்க வேணும்.

இனிமேல் ஆயுதம் தூக்கி தொடரமுடியாமல் போய்விட்ட உமது பணியை உமது எழுத்தின் வலிமையால செய்யவேணும்; சாதிக்க வேணும்.

தயவு செய்து இலக்கிய விழாவிற்கான எங்கள் அன்பான அழைப்பை மறுக்கக்கூடாது." பண்டிதர் கைகளை சேர்த்து நெஞ்சுக்குக் குறுக்கே குவித்தார். எத்தனையோ சாதனையாளர்களின் முன் தலை நிமிர்ந்து நடக்கும் பண்டிதர் ஒரு சாமானிய போராளியின் எதிரே கைகூப்பி நிற்பதன் அர்த்தம் அருகில் நின்ற வேலாயுதம் மாஸ்ரருக்குப் புரிந்தது. ●

நியாய உணர்வு உள்ளத்தை ஆளும் இடத்தில், சமாதானம் நாளும் ஆளும்: நின்று நிலவும். - வில்க்கி காலின்ஸ்

# தமிழ்த் தேசியமும், மட்டக்களப்பு கவிஞர்களும்

ஈழத்தின தமிழ் தேசிய வளர்ச்சி -வரலாறு இரு நிலைப் பட்டதென்பது பொதுவாக அறியப்பட்டதொரு் விடயமே. அதன் ஆரம்ப நிலை (1950-1975)மொழிவழிப்பட்டதாக விளங்கியது. தமிழ் மொழிக்குரிய உரிமை.தமிழ் மொழிப் பயன்பாடு என்பன மறுக்கப்பட்டபோது அதற்கெதிரான போராட்டமாக அது பரிணமித்தது. அதன் அடுத்தநிலை (1975ன் பின்) அரசியல் சித்தாந்த சார்புடையதாகி தமிழ்ஈழக் கோரிக்கையாக உருவெடுத்தது. இவ்விதத்தில் வசதி கருதி முதற் காலகட்ட தமிழ் தேசியக் கவிதை வளர்ச்சியில் மட்டக்களப்புப் பிரதேச கவிஞர்களது நிலை பற்றி நோக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

அவ்வாறு முதற்கால கட்டம் பற்றி நோக்குவதற்கான அவசியமொன்றுள்ளது. அதாவது இம் முதற்கட்டத்தில் பல்வேறு காரணங்களினால் ஏனைய பிரதேசங்களை விட மட்டக்களப்பு கவிஞர்கள் இத்தகைய கவிதைகள் இயற்றுவதில் கூடிய பங்களிப்பினை நல்கியுள்ளமை இன்று பின்நோக்கிப் பார்க்கும் போது தெளிவாகின்றது. குறிப்பாக. மட்டக்களப்பு இளைஞர்கள் பலரை தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகள் கவர்ந்திருந்தன. இன்னொரு விதமாகக் கூறின் தமிழரசுக் கட்சியும் அத்தகைய நோக்குடன் செயற்பட்டது என்று கூறுவதில் தவறில்லை. மறுபுறம் தமிழ்நாட்டு திராவிட முன்னேற்றக்கழக நூல்களும். பாரதிதாசன் கவிதைகளும் இங்கு நன்கு பரவியிருந்தன. இக்கால தமிழரசுக் கட்சி ஏடான சுதந்திரனின் செல்வாக்கும் இங்கு பரவலாகக் காணப்பட்டமையும் மறுக்கபடமுடியாததே. மேற்குறித்த ஆரோக்கியமான அரசியல் இலக்கிய சூழலில் மட்டக்களப்புப் பிரதேச கவிஞர்கள் பலர் 'தமிழ்த் தேசிய' உணர்வுக்குட்பட்டமை வியப்பிற் குரியதன்று. இவ்விதத்தில் நீலாவணணண்.ராஜபாரதி. ஆரையூர் அமரன்.ஜீவா ஜீவரத்தினம். எருவில் மூர்த்தி. புரட்சிக் கமால். காசிஆனந்தன்.திமிலைத்துமிலன் ஆகியோர் நினைவுக்கு வருகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவிதத்தில் கவனத்துக்குரியவர் ஆகின்றனர்.



ராஜபாரதியின் தமிழ் உணர்ச்சிக் கவிதைகள் ஏனைய பிரதேசக் கவிஞர்களின் தமிழ் உணர்ச்சிக் கவிதைக்கு நிகரானவையாக விளங்கின. 'கோடையில் எரிவெயிலிற்காயும் போதுகொப்பளித்து தமிழ் வெள்ளம் தோயவேண்டும். வாடை தருமூதலிலே நடுங்கும்போது வயந்த தமிழ்கதிரென்னைக் காயவேண்டும் பாடையிலே படுத்துாரைச் சுற்றும் போதுபைந்தமிழின் அழுமோசை கேட்க வேண்டும்.' ஓடையிலே என் சாம்பர் கரையும்போது ஒண் தமிலே சரசரத்து ஓய வேண்டும்.'

என்று அவர் பாடுகின்ற போது இதே காலப்பகுதியில் இத்தகைய கவிதைகள் எழுதிய யாழ்ப்பாண பிரதேசக் கவிஞர்கள் முக்கியமானவரான சச்சிதானந்தன் நினைவிற்கு வருவது தவிர்க்க இயலாததாகின்றது.

நீலாவணணண்.தீவிர மொழி உணர்ச்சி கொண்டவராக விளங்கினார். அவரது அத்தகைய தீவிரம் அவரது கவிதைகளின் தரத்தைக் குறைக்குமளவிற்கு வெளிப்பட்டது என்பதிலும் தவறில்லை. இத்தகைய கவிதையொன்றின் ஆரம்பம் பின்வருமாறு.

*'எண்ட எண்ட மாத்தையா*
*எதிர்மான சிங்க(ள)மே*
*பண்டங்கள் பட்டிருப்பின்*
*பாவத்தால் வந்துதித்த*
*சண்டாளி........'*

எருவில் மூர்த்தி இன்னொரு விதத்தில் கவனத்துக் குரியவர் ( அக்கால மொழி உரிமைப் போராட்டத்தின் முதற் 'களப்பலியான' அவர். அக்காலப் பகுதியில் ஒருதடவை யதேச்சையாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டிற்குறப்பட்டு கண்பார்வை இழந்தவர்). குறிப்பாக சிங்கள மொழி கற்பதற்கெதிராக அவர் எழுதிய கவிதைகளால் ஈர்க்கப்பட்ட சிலர் சிங்கள மொழி கற்காது விட்டனரரென்ற விதத்தில் அவரது கவிதைக்கு ஒரு பலமுண்டு. மொழி உரிமைப் போராட்டம் அக்கால முஸ்லிம் கவிஞர்களையும் ஆட்கொண்டிருந்தது. அதன் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவர் புரட்சிக்கமால் அவர் பாடிய அத்தகைய கவிதைகளுள் ஒன்று இவ்வாறு அமைகின்றது.

*'புலிநிகர் இளைஞரின் பொனிலா மகளிர்*
*பொங்கி எழுந்து புயலெனக் கிளர்ந்த*
*எங்கும் உணர்வை ஏற்குக. திரள்க.'*

மேற்கூறிய கவிஞர்களுள் தனித்துவமானவர் ஆரையூர் அமரன். அவரது கவிதைகளுள் கணிசமானவை ஊர்வலங்களின்போது மக்களால் நன்கு பாடப்படுமளவிற்கு நன்கு பரவியிருந்தன. அவை இதற்கு எடுத்துக்காட்டாக இங்கு ஒருபாடலைத் தருவது பொருத்தமானது.

'அழைப்பு'
(வழிநடைச் சிந்து)
புறப்படு-புறப்படு-புறப்படு

*அறப்போர் செய்யப்புறப்படு*
*அணிவகுத்து நின்றிடு*
*இறக்கவேண்டி நேரினும்*
*ஈட்டி போலப் புறப்படு*
*(புறப்படு)*

*வடக்கும் கிழக்கும் சேர்ந்தது*
*வலிவு பெற்று நிற்குது*
*அடக்கு முறையை அடக்கிட*
*ஆணும் பெண்ணும் சேர்ந்திடு*
*(புறப்படு)*

*படைகள் சீறிப் பாயினும்*
*தடைகள் நூறு போடினும்*
*மடை திறந்த வெள்ளமாய்*
*மக்கள் ஒன்று கூடிட*
*(புறப்படு)*

*திடுதிடுத்து வெடியது*
*திசைகளெட்டும் பாயினும்*
*திடம் படைத்தநெஞ்சோடு*
*திரண்டு நின்று எதிர்த்திட*
*(புறப்படு)*

*குண்டாந்தடி கொண்டு நம்*
*குருதி பாய அடிக்கினும்*
*தொண்டர் பொறுமை*
*தாங்கியே*
*நின்று வலிமை காட்டி*
*(புறப்படு)*

அவரது பாடல்கள் அக்கால பிரசித்தி பெற்றிருந்த சினிமாப் பாடல் மெட்டுகளில் அமைந்திருந்தமையால் பொது மக்களை மிக எளிதாக கவர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது இதற்கு எடுத்துக்காட்டாக இத்தகு பாடலொன்றினைத் தருவது பொருத்தமானது.

மெட்டு "காட்டுக்குள்ளே கண்ட பூ

*மோட்டார் தன்னில் போட்ட சிறி*
*நாட்டைக் கலக்குது இந்த*
*நாட்டைக் கலக்குது -அதன்*

*சலசலப்பு வேசங் கண்டு*
*சந்தி சிரிக்குது-இந்த சந்தி*
*சிரிக்குது*

*உலையைப் போல உளமிருந்து*
*உறுமிக் கொதிக்குது -எங்கும்*
*உறுமிக் கொதிக்குது -மொழி*
*உணர்ச்சி மீறி உயிரைக்கொடுக்க*
*உளமும் நாடுது -எங்கள்*
*உளமும் நாடுது.*

மொழி உரிமைப் போராட்டம் தொடர்பாக 'சுதந்திரன்' பத்திரிகை அவ்வேளை வாரம் தோறும் நடத்தி வந்த வெண்பாப் போட்டிகளிலும் ('நண்டெழுத்து வேண்டாம் நமக்கு' என்பது போட்டித்தலைப்புகளில் ஒன்று) மட்டக்களப்பு கவிஞர்கள் பலர் பங்குபற்றியுள்ளமையும் இவ்விடத்தில் நினைவிற்கு வருகின்றது.

முற்கூறிய கவிஞர்களுள் இருவர் தொடர்ந்து அடுத்த காலகட்டத்திலும் தமிழ்த் தேசியம் பற்றிப் பாடினர். இது காரணமாக .இவர்களுள் ஒருவரான பாண்டியூரான் அகால மரணத்தை தழுவிக்கொண்டமை பலருமறிந்ததே.

மற்றொருவர் காசிஆனந்தன் பாரதிதாசனின் 'சீடரான' காசி ஆனந்தன் உணர்ச்சிக் கவிஞரென ஈழத்தில் மட்டுமல்ல தமிழ்நாட்டிலும் நன்கறியப்பட்டவர். அறுபதுகளிலேயே தமிழ் ஈழம் பற்றிக் கனவு கண்டவர். 'தமிழன் கனவு' என்ற காவியம் அதன் வெளிப்பாடு பின்வருவது அதிலுள்ளதொரு பாடலாகும்.

*மண்ணில் அரசுடன் நிற்கவும் -தமிழ்*
*மக்கள் படையுடன் வாழவும்*
*விண்ணிடை ஊர்தி செலுத்தவும்-நம்*
*வில்கயல் வேங்கை பறக்கவும்*
*அன்னியர் கண்டு கலங்கிட -தமிழ்*
*ஆயுதச்சாலை விளங்கவும்*
*கண்ணிடைக் கண்ட கனவுகள்-என*
*காலத்தில் இங்கு நடக்குமோ*

காசி ஆனந்தன் தமிழ் தேசியக் கவிதை வளர்ச்சியின் இரு காலகட்டங்களிலும் முக்கிய இடம் பெறுபவராக திகழ்வது இங்கு கவனத்துக்குரிய விடயமாகின்றது. குறிப்பாக இரண்டாவது காலப்பகுதியில் முக்கிய சொல் நெறியாக தமிழீழ எழுச்சி நோக்கிலான மெல்லிசைப் பாடல்கள் உருவாகின்ற போது அதில் காசி ஆனந்தனுக்கும் முக்கிய இடமுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொகுத்து நோக்கும்போது ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று தமிழ் தேசியக் கவிதை ஓட்டத்தில் குறிப்பாக முதற்காலப்பகுதியில் மட்டக்களப்பு பிரதேசக் கவிஞர்களின் பங்களிப்பு கணிசமாயிருந்தமை தெளிவாகின்றது. இது விரிவான ஆழமான ஆய்வை அவாவி நிற்கின்றது.

**- கலாநிதி செ. யோகராசா**

## நிறைவு

ஆலயத்தில் அர்ச்சிக்கப்பட்ட
"பாதி" மலரை
நீ சூடிச் சென்றாய்
மூன்றாம் பிறைமுன் நின்று
வணங்கிக் கொண்டாய்
ஏன் என்ற போது
என் நிறைவான
வாழ்வுக்கென்றாய்
சகி!
எவருக்கும் பகிரப்படாது
என்
முழுமையென்றாகிய
என் வாழ்வின்
அரை குறைகளை
உன் பாதிகள்
பறித்து எடுத்து விட்டன.
என்னில்
நீ பாதியடி
பாதி தந்த
முழுமை நீ
நீ தந்த நிறைவு நான்.

**பொன்.காந்தன்**

## வாழாத மனிதனின் வாக்குமூலம்

என்னை உருப்படாதவன் என்று
ஊரார் உரைத்தபோது
எனக்கு
கவிதை எழுத ஒரு
கருக் கிடைத்தது.

நான்
அடுக்கு மொழியில்
கவிதை எழுதியபோது - என்
அடுப்படியில் பூனை உறங்கியது.

அம்மாவின் தாலி
அடகில் மாண்டபோது
முப்பது வயதில்
எனக்கொரு பட்டம் கிடைத்தது.

என் பாதி வாழ்க்கை
பசியிலும், படிப்பிலும் தான்
முடிந்தது.

என் இரு தங்கைகளுக்கும்
எல்லாம் கொடுத்து
மங்கலம் காண - எனக்கு
கண் மங்கலாகும்
நாற்பது வயதானது.
மீதி காலம்
மனைவி, பிள்ளைகள்
சினிமா, கோயில் என்று
சின்ன விசயங்களில்
சிதைந்து போனது.

என்னை நான் அறிய
எனக்கு வயது அறுபதானது.

மீண்டும் நான் பிறக்க வேண்டும்.
வாழ்ந்து நான் சாகவேண்டும்.

**அமிர்தநாதன்**




## சிறுவர் கதை

# பகை முடித்த நரி

ஒரு பெரிய காட்டில் பல மிருகங்கள் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள் ஒருவெறிபிடித்த சிங்கம் தனது வயிற்றுப்பசிக்கு இந்தச்சின்னச்சின்ன விலங்குணவுகள் போதாதென்று தன் உற்ற மிருகங்களை பிடித்துண்பதற்கு திட்டம் தீட்டி வெறிகொண்டு அங்குமிங்கும் அலைந்தது.

சிங்கத்தின் சதித்திட்டமறிந்த உற்ற மிருகங்கள் எல்லாம் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள பெரிய பெரிய பற்றைகளைத்தேடி தட்டுத்தடுமாறி ஓடி ஒழிந்து கொண்டிருந்தன. அப்பொழுது ஒரு புள்ளிமான் தன்குட்டியை எங்கு கூட்டிக்கொண்டு ஓடித்தப்புவதென்று தெரியாது யோசித்துக் கொண்டிருந்தது. இப்போதிங்கு அந்தக் கொடிய சிங்கம் வந்துதெண்டால் நமதிருவர் கதையும் அதன் வெறிக்குள் அடங்கிவிடுமென வரப்போகும் ஆபத்தை எடுத்துரைத்தது. மான் குட்டிக்கு தாய்மானின் தவிப்பை அறிந்து அம்மா... நாங்களிருவரும் எமதுறவுகள் பதுங்கியிருக்கும் அந்தப்பற்றைக்குள் ஓடி ஒழிந்து கொள்வோம் என்றது. இந்தப்பற்றையெல்லாம் அந்த சிங்கத்திற்கு புயலுக்கு தூசு போன்றது. அதுகளை முறித்தடித்துக்கொண்டு நம்மைக்கொன்றுவிடும் எனத் தாய்மான் புத்தி கூறியது. சரி இனியும் நாம் தாமதித்தால் நம்கதை முடிந்துவிடும் வா... இந்தப்பக்கமாக ஓடுவோம் என் தன்குட்டியுடன் ஓடத் தொடங்கியது. ஓடிக்கொண்டிருந்த அவ்வழியில் ஒரு கிணறு இருப்பதைக்கண்டு தாகம் தீர்த்துக்கொள்ள அருகில் சென்று எட்டிப்பார்த்தது. சிங்கத்தின் சதியறிந்து தட்டுத்தடுமாறி ஓடிய நரிகளில் ஒன்று கிணற்றுக்குள் விழுந்து கிடப்பதைக்கண்டது அந்த நரியின் நிலையைக் கண்ட மான் மிகவும் வேதனைப்பட்டது. நரியைக் காப்பாற்ற பல வழிகளிலும் முயற்சி செய்து பார்த்தது. இறுதியில் எதுவும் சரிவரவில்லை. மானின் முயற்சியைப்பார்த்த நரி. மானாரே நீ என்மீது வைத்திருக்கும் நேசம் புரிகிறது. என்ன செய்வது என்னிலை இப்படியாகிட்டுது. சரி பரவாயில்லை. மானே எமக்கு கொடுமை இழைக்கும் அந்த சிங்கத்தை இன்று நான் கொன்று விடுவதற்கு திட்டம் தீட்டியிருக்கிறேன். அந்தத் திட்டம் நிறைவேற புதிய திடம் பூண்டிருக்கிறேன். இன்றைக்கு அந்த சிங்கம் இந்த கிணற்றை தாண்டி வரமாட்டார். கட்டாயம் நீரருந்த வரும். நிச்சயம் முடிவொன்று காணவேண்டும் இவருக்கு.

நீங்கள் நின்று பார்க்காமல் ஓடி ஒழிந்துக் கொள்ளுங்கள். சிங்கத்தின் கதையை நான்முடித்துவிட்டு வருகின்றேன் என ஆசி கொடுத்தனுப்பியது நரி. மான் தன் குட்டியையும் கூட்டிக்கொண்டு அருகிலிருந்த மேடான பற்றைக்குள் ஒழிந்து கொண்டது. மிருகங்கள் ஒன்றையும் காணாமல் வாடிவதங்கி சிங்கம் நாக்கை தொங்கப் போட்டுக்கொண்டு கிணற்றை நோக்கி பாய்ந்து பாய்ந்து வந்தது. சிங்கம் வருவதைக்கண்ட மானும் அதன் குட்டியும் பெரு அச்சத்தோடு இருந்தது. கிணற்றுக்கருகில் வந்த சிங்கம் தாகத்துடன் கிணற்றை எட்டிப்பார்த்தது. நரி விழுந்து கிடப்பதைக் கண்டு ஏப்பமிட்டு சந்தோசமடைந்தது. நரியாரே! நீ ஏன் கிணற்றுக்குள் நிற்கிறாய் உனக்கென்ன நடந்தது. என நல்ல பிள்ளைமாதிரிக் கேட்டது. அது இந்த நீர் நல்ல சுவையாகவுள்ளது. இதை நாம் குடித்தால் மூன்று நாளைக்கு சாப்பாடே தேவையில்லை. அந்தளவுக்கு மாமிச வாசமும் உள்ளது. அதுதான் நான் இங்கு நிற்கிறேன் என தந்திரமாகக் கூறியது நரி. சிங்கம் நரியை பிடித்து சாப்பிடும் திட்டத்துடன் நானும் வரப்போறன் எப்படி நீ இறங்கினாய் எனக்கேட்டது.

நானொன்றும் பெரிதாக செய்யவில்லை. வேகமாக ஓடிவந்து குதித்தேன் அவ்வளவுதான் என்றது நரி. சிங்கம் நரியின் திட்டத்தை புரிந்துகொள்ளாது இதோ நான் வருகிறேன். மிகவேகமாக ஓடிவந்து குதித்தது. குதித்த சிங்கத்தால் வலி தாங்க முடியாமல் துடித்து துடித்து தன் உயிரைப் போக்கியது. கொடிய சிங்கம் செத்துவிட்டது என காடெங்கும் கேட்கும்படி குரல் கொடுத்தது நரி. நரியின் குரல் கேட்டதிசை நோக்கி மிருகங்கள் எல்லாம் துள்ளிக்குதித்து. ஓடோடி வந்தன. எங்குபோவதறியாது தவித்த மான் தன் குட்டியுடன் கிணற்றை சுற்றிச்சுற்றி மகிழ்ச்சியில் துள்ளித் துள்ளியாடியது. ஓடிவந்த மிருகங்கள் எல்லாம் நரியின் நல்ல செயலை பாராட்டி நரியை கிணற்றிலிருந்து காப்பாற்றி மீண்டும் நிம்மதியாக ஒற்றுமையாக எல்லாமிருகங்களும் கூடி வாழ்ந்து வந்தன.

**க. ஈழக்குகன்**



## வாரம் ஒரு குறள்

கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய்.தீர விசாரித்தறிவதே மெய் என எமது முன்னோர்கள் கூறியுள்ளார்கள்.

ஆனால் நாமோ எவ்வளவுதான் கல்வியறிவுடையவர்களாக இருந்தாலும், அடுத்தவர்களை வெகு இலகுவில் நம்பி விடுவோம். கண்ணால் பார்ப்பதையும் அச்சமின்றி ஏற்றுக்கொண்டு விடுவோம். அடுத்தவர்களது கருத்துக்கு மதிப்புக் கொடுக்கத்தான் வேண்டும். எதையும் பார்த்து பழகத்தான் வேண்டும். ஆனால் சரியா தவறா என்பதை சீர்தூக்கிப் பார்த்து உண்மைகளை மட்டுமே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி செயற்பட்டால்தான் நாம் அறிவுடையவர்களாக இருக்க முடியும் இதனைத்தான்

*"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு."*

என்று வள்ளுவப்பெருந்தகை அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 10

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| க | மு | ம் | சு | ஒ | ள் | வி |
| பு | ப் | மெ | த் | னி | ம் | ப |
| செ | ர | மூ | க | ஞ் | பு | ர |
| கி | ளே | வெ | ய் | க் | கு | ச |
| ளை | னி | ற் | பா | ள் | ட | ல் |
| த் | ம | ம் | ன் | அ | க | த |
| கா | ந | ம | அ | ழ | ர | றா |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 08 இன் விடைகள்

01. காப்பு.
02. மோதிரம்.
03. தோடு.

01. சிவப்பு.
02. மஞ்சள்.

## சொற்சிலம்பம் - 08 இன் பரிசுக்குரியவர்

ச. தனுஷா, தரம் - 03, கிளி/கனகபுரம் ம.வி, கிளிநொச்சி.

## சொற்சிலம்பம் - 08 இன் பாராட்டுக்குரியவர்கள்

01) சு.பிரணவன், தரம் -0[illegible], வேலனை மேற்கு நடராஜா வித்தியாலயம்,

02) ப.மயூரி, தரம் - 04, கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

03. ர. றஜீவன், இல:108, கற்குழி, வவுனியா.

04. ஆ. சயந்தினி, தரம் - 06, யா/ஏழாலை ம.வி

நாம் பாடசாலையில் கடைப்பிடிக்க வேண்டியவைகளில் இரண்டு?

01) ..........................................

02) ..........................................

பறவை இனங்களில் மூன்று?

01) ..................................

02) ..................................

03) ..................................

சொற்சிலம்பம் -10
ஈழநாதம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- ..............................................

முகவரி :-..............................................

..............................................

## கற்றுக் கொள்

*வறுமையில் வாழ்ந்தாலும்*
*கல்வியின் பெருமை*
*கணக்கிட முடியாதவை - இதைக்*
*கற்றிட வேண்டும்....*
*பொல்லாத சமுதாயத்தில்*
*இல்லாத சோலிகள் வந்தாலும் - யாருமே*
*வெல்லாத பொறுமையால்*
*சொல்லாமல் வென்றிட நினைப்பதை*
*கற்றுக்கொள்ள வேண்டும்....*
*நல்லவனுக்கு நண்பனாக*
*எதிரிக்கு கெட்டவனாக*
*அடக்குபவனை அடக்குபவனாக*
*வீரத்தோடுவாழ்வதைக்*
*கற்றிடவேண்டும்....*
*கண்ட கனவுகள்*
*நீண்ட உறவுகள்*
*நிலையான வாழ்க்கைகள்*
*நிம்மதியான உறக்கங்கள்*
*இவையெல்லாம் நிலைத்திட*
*பணம் வேண்டும் என்பதை*
*கற்றிட வேண்டும்...*
*எல்லாவற்றிற்கும் மேலாக - நல்ல*
*குணம் படைத்தவனாக*
*வாழ்வதை கற்றிட வேண்டும்...*

க.முருகானந்தன்
உடையார்கட்டு

## நகைச்சுவை



**பெரியவர்:-** ஒரே ஊசியில எப்படி நோயாளியோட மயக்கத்தை போக்கிட்டீங்க, என்ன மருந்து போட்டீங்க டாக்டர்.

**டாக்டர்:-** மருந்தா! வெறும் ஊசியைத்தான் கொஞ்சம் பலமாகக் குத்தினான்.

**சு.கௌரீசன்**

## அன்பு

அன்பென்ற பண்பொன்று அகிலத்தில் உண்டு
அது இதயத்தில் உறைந்திட்ட ஒன்று
அன்பினைத் தெய்வமென்று கூறினர் நன்று
அறிவுடனேயதனை ஏற்கிறோமின்று.

அன்பினை முதலிலே தந்தவள் அன்னை
ஆசானுமன்பினால் கற்பித்தார் பின்பு
என்புபோல் போர்த்த உடம்பிலே - இன்று
அன்பினை நாம் கண்டோம் உண்மை.

அண்ட சாராசரத்தின் அற்புத சக்தி
அன்பென்ற உன்னத பக்தி
தெய்வத்தின் சிருஷ்டியில் உதித்த
பண்பெனும் அரிய பண்பே

**ஜெ.சுபாஷினி**

## சிந்தனைக்கு

*வாசிப்பதற்கு நேரத்தை மிச்சம் பிடித்தால்*
*வாழ்நாளில் பலவற்றை அறியலாம்.*

*நீயும் நானும் திருந்தி விட்டால்*
*உலகத்தில் உள்ளவர்கள் எல்லாரும்*
*திருந்தி விடுவார்கள்.*

*முன்னேற பல வழிகள் உண்டு*
*இதன் அடித்தளம் முயற்சியே.*

N.உத்தமன






# பாடசாலை போகவேணும்

-ஆங்கிலத்தில் குவான்ஹு"வா -





எட்டாவது வழி இராணுவ வீரன் ஒருவன், ஆசிரியர் சாய்க்கும் இரும்பனுக்கும் ஆளுக்கு ஒவ்வொரு பாத்திரத்தில் கொதி நீரைக் கையளித்தான். இரும்பன் அதை மெது மெதுவாக உறிஞ்சிக் குடித்துக் கொண்டே அங்கிருந்தவர்களை ஆராயத் தொடங்கினான்.

அங்கிருந்த அனைத்து ஆண், பெண் போராளிகளும் திண்டுவைத்து தடிப்பாகத் தைக்கப்பட்டிருந்த இராணுவச் சீருடைகளை அணிந்திருந்தனர். சிலர் கண்ணாடிகளை அணிந்திருந்தனர். இவர்களுள் ஒருவர் அச்சிடும் இயந்திர இயக்குநராக இருந்தார். இளம் பெண்ணான அவர், இடுப்பில் தோலால் ஆன பட்டியொன்றை அணிந்திருந்தார். அவளுடைய இராணுவத் தொப்பி பின்னால் தள்ளி விடப்பட்டிருந்தது. அவளது கூந்தல் குட்டையாக வெட்டப் பட்டிருந்ததை அது வெளிக் காட்டிக் கொண்டிருந்தது. மை பூசிய உருளையை அச்சிடும் சட்டங்களுக்கு மேலாக அவ தானமாக உருட்டிய அவள் ஒவ்வொரு தாளாக பிரதிகளை அச்சிட்டுக் கொண்டிருந்தாள்.

தன் கையிலிருந்த கோப்பையை இரும்பன் கீழே வைத்துவிட்டு மெதுவாக அவளருகே சென்றான். அவனது கைகள் வளர்ந்தவர்கள் செய்வது போல் பின்னால் கோர்க்கப்பட்டிருக்க அச்சிடும் உருளையை அவதானமாகப் பார்வையிட்ட அவன், " நீங்கள் இப்போதுதான் எங்களுக்கான புத்தகங்களை அடிக்கத் தொடங்கியிருக்கிறீர் களா?" என்று வியப்புடன் கேட்டான்.

அவன் கேட்ட விதத்தில் அந்த இளம் பெண்ணுக்கு சிரிப்பு வந்து விட்டது. அவள் ஒரு முறை சிரித்து விட்டு, "இல்லை. உங்களுக்குரியவை பல நாட்களுக்கு முன்னதாகவே அடிக்கப்பட்டு விட்டன. அதோ பார்! அவை அங்கே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன." என்றாள்.

அவள் சுட்டிக்காட்டிய இடத்தை அவன் பார்த்தான். அங்கே குகைச் சுவரின் அருகே ஒரு தொகைப் புத்தகங்கள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அவனுக்கு மகிழ்ச்சி பொங்கியது.

ஓடிச்சென்று அந்த புத்தக அடுக்குகளை கட்டிப்பிடித்துக் கொண்ட அவன், "எங்களு டைய பாடப்புத்தகங்கள் கிடைத்து விட்டன! எங்களுடைய பாடப்புத்தகங்கள் கிடைத்து விட்டன!" என்று உரக்கக் கத்தினான்.

அங்கேயிருந்த வீரன் ஒருவனுடன் உரையாடிக்கொண்டிருந்த ஆசிரியர் சாய், அவனைத் திரும்பிப் பார்த்து, "இவ்வளவு பலமாகச் சத்தம் போடாதே!" என்றார்.

அந்த இளம் பெண்ணிடம் திரும்பிச் சென்ற இரும்பன், அளவற்ற மகிழ்ச்சியு டன், "இந்த அச்சு வேலைகள் எல்லா வற்றையும் நீங்களே செய்தீர்களா?" என்று கேட்டான்.

அந்த இளம் பெண் அவனை நோக்கி புன்னகை செய்துவிட்டு, உருளையை கீழே வைத்து விட்டு, அவனோடு கதைக்கத் தொடங்கினாள். தன் கண்களை அந்தப் பொத்தகங்களை விட்டு எடுக்காத இரும்பன், பசியோடிருக்கும் பூனைக் குட்டி போல் தன் உதடுகளை நக்கிக்கொண்டிருந்தான். அவள், கற்பாளத்தினாலான மேசையிலிருந்து ஒரு பொத்தகத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள். இரும் பன் அந்தப் பொத்த கத்தை கையில் பிடித்த படி பெரிதாக புன்னகை செய்து கொண்டிருந் தான். பின்பு ஒற்றை களை பிரட்டி முதலாம் பக்கத்தை விரித்துக் கொண்ட அவன், அதிலிருந்த வற்றை தனக்கு வாசித்துக் காட்டும்படி கேட்டுக் கொண்டான்.

"நாங்கள் போய்ச் சாப்பிடுவோம்" என்று ஆசிரியர் அழைத்தார். இரும்பன் அந்தப்பொத்தகத்தை தனது சேட்டினுள்ளே வைத்து நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். புதிய மையினுடைய வாசனை அவனைச் சூழ கமழ்ந்து கொண்டிருந்தது. அவனுக்கு மகிழ்ச்சியூட்டிக் கொண்டிருந்தது.

தினை, உப்பிட்ட கிழங்கு. பச்சை வெங்காயம், ஒரு கோப்பை கொதிக்கவைத்த நீர் முதலியவை கொண்டதாக அந்த உணவு இருந்தது. அவர்கள் அந்த உண வை உண்டு முடித்தபோது அங்கிருந்த தோழர்கள் பொத்தகங்களை, ஆசிரியர் சாயின் சாக்கினுள் பொதிசெய்து விட்டனர். இரும்பன் தானும் சில பொத்தகங்களை காவிச் செல்லவேண்டும் என்று வற்புறுத்தினான். எனவே அந்த பெண் படையினள் சில பொத்தகங்களை சாக்கிலிருந்து எடுத்து அவனது கூடையுள் தடித்த வைக்கோல் அடுக்குகளுக்கிடையில் வைத்து விட்டாள்.

சாக்கில் எஞ்சியிருந்த பொத்தகங்களின் எடையைச் சம நிலைப்படுத்தி தனது தோளின் மீது போட்டுக் கொண்ட ஆசிரியர் சாய்.

(தொடரும்...)

தமிழில்
வி.பி.யோசப்

# வீதி விபத்துக்களால் விளையும் விபரீதங்கள்



இன்று எம் காதுகளில் ஒலிக்கும் பிரச்சினைகளில் ஒன்று வீதி விபத்து. தினசரிப் பத்திரிகைகளிலும் சரி, வானொலிகளிலும் சரி நித்தம் இதைப்பற்றிய தகவல்கள் வந்த வண்ணமே உள்ளன. எமது நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் நாளாந்தம் இவ் வீதி விபத்துக்கள் நடை பெறுகின்றன. இதனால் பல மனித உயிர்கள் மட்டுமல்லாது ஏனைய உயிர் இனங்களும் சூழலும் பாதிப்படைகின்றன.இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமாதானசூழலிலும் வீதிகளில் வாகனப்போக்குவரத்து அதிகரித்துள்ளது. இது நாம் எல்லோரும் அறிந்தவிடயம். ஏ-9 பாதை திறப்பின் பின் இப்போக்குவரத்தானது முன்னைய காலங்களை விட பன்மடங்கு அதிகரித்துள்ளது.

இன்று வீதிகள் ஓரளவு செப்பனிட்டு திருத்தப்பட்டுள்ளன. இதனால் வாகனங்களின் வேகம் அதிகரித்துள்ளது. இவ் வேகத்தினால் பல வீதி விபத்துக்கள் நாளாந்தம் நடைபெறுகின்றன. வாகன வேகத்தை வாகனம் செலுத்துபவர் தான் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். ஒரு வாகனத்தை வீதியில் செலுத்துவதற்கு உலகளாவிய ரீதியில் சில சட்ட திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

வீதி விபத்துக்கள் தொடர்பாக ''கென்டம் பிரபு'' என்பவர் ஒரு அழகான தத்துவத்தை கூறியிருக்கிறார். அதாவது "வீதி விபத்து நடக்காது, அப்படி நடப்பதாயின் வீதி ஒழுங்கில் கூறப்பட்ட விதிமுறையை யாரோ ஒருவர் கடைப்பிடிக்கத் தவறிவிட்டார்" யார் அந்த ஒருவர்....? அது நாங்கள்தான். வீதியில் வாகனத்தை செலுத்துபவர்கள் தான். அவர் தத்துவத்தை மட்டும் கூறவில்லை. வீதியில் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகளையும் கூறியிருக்கிறார்.

ஒரு வாகனத்தை செலுத்துபவர் வீதிக் குறியீடுகளை அவதானிக்க வேண்டும். அதாவது ஒரு வீதியில் நாம் வாகனத்தை செலுத்துவதற்கான வீதி சமிக்ஞைகளை கவனிக்க வேண்டும். உதாரணமாக ஒரு பாடசாலை குறியீடு தெரிந்தால் அதற்கேற்ப வேகத்தில் எமது வாகனத்தை செலுத்தவேண்டும். இத்துடன் முன்னே நீதிமன்றம் அமைதி, மருத்துவசின்னம், முன்னே வலது பக்க வளைவு, இடதுபக்க வளைவு, நாற்சந்தி, வழுக்கும் பாதை என்பன இவற்றுள் அடங்கும். இப்படியாக 121 குறியீடுகள் வீதிகளில் உள்ளன. நம் வீதிகளில் இவை தற்போது குறைவு. ஆனாலும் நாம் இவற்றை அறிந்திருக்க வேண்டும். அத்துடன் பிரதான வீதிச் சட்டம், குறுக்கு வீதிச்சட்டம், வட்டப்பாதைச் சட்டதிட்டம், வாகன வீதிச் சைகை என்பனவற்றின் அறிவு கட்டாயம் ஒரு சாரதிக்கு தெரிந்திருக்கவேண்டும்.

அதாவது பிரதான வீதியில் வாகனத்தைச் செலுத்துபவர் வீதி சட்ட திட்டங்களுக்கேற்ப வாகனத்தைச் செலுத்த வேண்டும். குறுக்கு வீதியில் இருந்து பிரதான வீதிக்கு வாகனத்தை செலுத்துபவர் பிரதான வீதி அண்மித்ததும் தனது வாகனத்தின் வேகத்தைக்குறைத்து இரு பக்கங்களும் பார்த்துத்தான் திருப்பவேண்டிய பக்கத்துக்கு வாகனத்தைசெலுத்தவேண்டும். வட்டப் பாதையில் வாகனத்தைச் செலுத்தும் போது வலது பக்கமாக வரும் வாகனத்திற்கு முன்னுரிமை வழங்கவேண்டும். இத்துடன் வட்டப்பாதையில் நிற்கும் வீதிப்போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தும் காவல்துறை அதிகாரிக்கும் மதிப்பளித்து அவரது சட்ட திட்டங்களை ஏற்று வாகனத்தை செலுத்த வேண்டும்.

ஒரு வாகனத்தை முந்திச் செல்வதாயின் எதிரே உள்ள தெரு தெளிவாகவும் எவ்வித தடையுமின்றி நன்கு புலப்பட்டால் மட்டுமே வாகனத்தை முந்திச் செல்ல வேண்டும். தெளிவில்லையெனின் முந்திச் செல்லக் கூடாது. வாகனத்தில் இருக்கும் பார்வைக் கண்ணாடியை குறைந்தது ஒரு நிமிடத்துக்கு பத்து தடவையாவது பார்க்க வேண்டும். ஒரு வாகனத்தை வீதியில் செலுத்தும்போது வாகனச் சைகை அதாவது SIGNAL காட்டப்பட வேண்டும். அப்போதுதான் ஏனைய வாகனச் சாரதிகளுக்கும் தெரியும். இப்படி பல சட்ட திட்டங்களையும் தத்துவத்தையும் ஆழமாக கென்டம் பிரபு அவர்கள் கூறியிருக்கிறார். இவற்றையெல்லாம் கடைப்பிடித்து நாம் வாகனத்தை செலுத்துவோமாயின் விபத்திலிருந்து எம்மை முற்றாகப் பாதுகாத்துக் கொள்வதோடு எம் வாகனங்களையும் பாதுகாத்துக்கொள்ளமுடியும். எமது சாரதிகளின் அசட்டையீனத்தால் எத்தனை உயிர்கள் நாளாந்தம் எம்மைவிட்டுப் பிரிந்து செல்கின்றன.



N. உத்தமன்

# இளையநாதம்

## அழுவதை நிறுத்து

தோழனே!
காற்றைக் கண்களால் கண்டுபிடி
வானவில்லுக்கு புது வண்ணமிடு
நிலவுக்கு புது ஒளி கொடு
கண்ணீரைக் கடைந்து தங்கமெடு
மீனுக்கு நடக்கவும் மானுக்கு நீந்தவும்
கற்றுக் கொடு

மின்னலுக்கு ஆயுள் கேள்
வேர்களுக்கு வெளிச்சம் கொடு
துட்டனைக் கண்டால் சுட்டுக்கொள்
நன்மையானதை மட்டும் நாகரிகமாக்கு
தீமைகளைத் தீயிட்டு கொழுத்து

நெருப்போடு விளையாடு
பூமிக்குப் புத்துயிர் ஊட்டு
அழுவதை நிறுத்து
சிரியடா உரத்து

அ. கௌரி

## நம்பிக்கை

வறுமை
என்முகத்தை
மறைத்தாலும்
என்றுயிர்க் கலங்கள்
துடிப்பாகவேயுள்ளன
கனவுகள்
வாழ்வுப்பரிணாம ஏது
எனக்குள்ளேயும்
தோன்றத்தொடங்குகிறது
ஒரு சிற்பியின்
மனதெண்ணமாய்
அதனைப் பின்தொடர்ந்து
என் வாழ்வினை
அழகுபடுத்துவேன்.

து.தனசீலன்

## காலத்தின் காவியங்கள்

எங்களின் கரங்களில்
உத்தம விருட்'ங்கள்
விழுதுவிட்டு தாங்குகின்றன.
கல்லறைகளும் கண்ணீரை
காணிக்கையாக்கியபடி.
அவை காலத் தீயினில்
கருகுவதில்லை.
கால வரலாற்றில்
காவியங்களாக
கருத்தரிக்கின்றன.

எஸ். சுகந்தி

## பெண்மை பேசுகிறது

சுதந்தரமாய் வானமெங்கும்
சுற்றித் திரிந்தவளின்
சிந்தையையா நீ கலைத்தாய்
சிறகையுமே ஒடித்து விட்டாய்

உத்தமமான உள்ளத்தை
உதிரத்திலே உறையவிட்டு
பெண்ணடிமை வேண்டாமென்று
பெரிய வேடம் போடுகின்றாய்.

காரிகை வென்றே னென்று
கவிதையா கொட்டுகின்றாய்
கறுமி உன்னைப் போலே
கல்லாரும் வேறுளரோ!

பெண்மையைப் பேணாதவர் (ன்)
பெண்ணுரிமை பேச வேண்டாம்.
பெண்ணைப் பெண்ணாக
பெருமையுடன் வாழவிடு.

எஸ். கனகா

## சொல்லவேண்டிவந்த பொய்கள்

எனது தம்பிக்கு திடிரென்று 'விக்கல்'பிடித்து விடாமல் தொடர்ந்து விக்கிக் கொண்டே இருந்தது.

அவனால் ஒழுங்காக சாப்பிடவும் முடியவில்லை எங்களுக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை.

இப்படியிருக்க எங்களுடைய மாமா வெளியிலிருந்து வீட்டிற்கு வந்தவர் தம்பி விக்கிக்கொண்டிருந்ததைப்பார்த்து.

டேய்.

நீ நான்வரேக்க அந்த அறையில சிகரட் குடித்துக்கொண்டிருந்தாய் இல்லையா. உனக்கு இந்த வயதில் ஒரு சிகரட்குடிப்பா - என கேட்டு அப் பாவை கூப்பிட்டார்.

பயந்துபோன தம்பி. நான் அப்படி குடிக்கயில்ல நீங்கள் வேறயாரையோ பார்த்துவிட்டு வந்து சொல்கிறீர்கள் என்றான்.

ஆனால்மாமா விட்ட பாடில்லை அவனை வெருட்டிக்கொண்டிருந்தார்.

தம்பி, மாமாவின் பிடிவாதத்தை தாங்க முடியாது அழுதே விட்டான்.

இறுதியில் தம்பியின் முதுகில் தட்டிக் கொடுத்த மாமா டேய் இப்ப எங்கையடா உன்ர விக்கல் எனக் கேட்டார். எங்களுக்கோ அதிர்ச்சி ஏனென்றால் அவனுக்கு விக்கல் இல்லை.

அதற்கு அவர் இது பொய் வைத்தியம் என்றார்.

எப்படியென்றால் அவர் வெருட்டியபோது பயந்துபோன தம்பி ஆ.... என இழுத்த இழுவை அவனது விக்கலை இல்லாமற் செய்து விட்டதாம்.

இதுக்கு பெயர் பொய் வைத்தியமாம்.

வேழினி

## ஊக்கமாத்திரை

## இல்லறம் இனிமையாக...

இல்லறமே நல்லறம் என்பர் சான்றோர். இனிய இல்லறத்தின் திறவுகோல் திருமணம். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாக கூறுவர். ஆனால் இன்று பல குடும்பங்களைப் பார்க்கின்றபோது திருமணங்கள் நரகத்தில் நிச்சயிக்கப்படுகின்றனவா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. இன்பமயமாக இருக்கவேண்டிய கணவன் - மனைவி உறவு பல குடும்பங்களில் கசப்பாக மாறியிருப்பதையும், கணவன் - மனைவியிடையே சண்டை, சச்சரவு, பிரிந்து வாழுதல், விவாகரத்து என்பன சர்வ சாதாரணமாகி வருவதையும் காணமுடிகிறது.

இல்லறத்தை இறுக்கமாக வைத்திருக்க உதவிடும் முக்கியமான அம்சம் தாம்பத்திய உறவு என்றால் அது மிகையாகாது. செக்ஸ், காதல், திருமணம் என்பன ஒன்றிற்கு ஒன்று தொடர்புடையவையே ஆயினும் திருமணம் என்ற பந்தத்திலேயே இவை மூன்றும் இணைந்திருப்பதுடன், ஒரு படி மேலே சென்று அன்பு, பாசம் என்று பரிணமிக்கிறது.

உலக இன்பங்களில் இல்லற இன்பமே மேலானது. இங்கே தான் தாய்மை, தாய் சேய் உறவு கூட உருவாகிறது. இப்படியாக சிறப்புகள் இருந்தும் கூட இன்றைய உலகில் பல திருமணங்கள் ஏன் சொர்க்கமாக அமைவதில்லை? ஒன்றாக வாழும் குடும்பங்களில் கூட ஏதோ இணைந்துவிட்டோம், சேர்ந்து வாழவேண்டியது தான் என்ற சலிப்புணர்வை அவதானிக்க முடிகிறது.

பெண்கள் விழித்துக் கொண்டு போர்க்கொடி உயர்த்துவது தான் இதற்கான காரணம் என்று ஆணாதிக்க சிந்தனையில் மூழ்கியவர்கள் கருதுகிறார்கள். ஆனால் உண்மைக்காரணம் அதுவல்ல. பெண்ணுக்குச் சம உரிமை வழங்கிட மறுக்கின்ற ஆணாதிக்க சிந்தனையே இன்றைய தம்பதியினரின் இல்வாழ்வைச் சீர்குலைக்கின்றன.

இந்நிலைமாறி இல்லறம் இனிமையாகிட நாம் என்னசெய்ய வேண்டும்? பெண்ணை வெறும் போகப் பொருளாக, வீட்டு வேலைகள் செய்பவளாக மட்டுமே நினைக்கின்ற போக்கு மாறி, அவளும் சகல உரிமைகளும், உணர்வுகளும் கொண்ட மனிதப் பிறவி என்பதை ஆணாதிக்க சமுதாயம் ஏற்றுக் கொள்ளவேண்டும். செயல்வடிவிலும் இவ் ஏற்றுக்கொள்ளலை நடைமுறைப் படுத்திடவேண்டும்.

அடுத்த அம்சம் பரஸ்பர விட்டுக்கொடுப்பும், புரிந்துணர்வுமாகும். கணவன் - மனைவியரிடையேயான புரிந்துணர்வும், விட்டுக்கொடுப்பும் தான் வாழ்க்கையின் கரடுமுரடுகளைச் சீர்படுத்தி, அதை வேதனையற்றதாகவும், இன்பமயமாகவும் மாற்றுகிறது. அன்புக்குரிய துணைவருக்கு விட்டுக் கொடுப்பதில் ஒரு ஆனந்தம் ஒளிந்திருக்கிறது. துணைவருக்கு என்று நான் குறிப்பிடும்போது துணைவன், துணைவி என்று இருபாலாரையுமே குறிப்பிடுகிறேன்.

திருமண வாழ்க்கையின் இன்ப ரகசியமே விட்டுக் கொடுப்பில் தான் தங்கியிருக்கிறது. விட்டுக் கொடுப்பதில் போட்டி இருக்க வேண்டுமேயன்றி, விட்டுக் கொடுக்காமையில் போட்டி இருக்கக் கூடாது. அவர் விட்டுக் கொடுத்தாலென்ன, நானா விட்டுக்கொடுக்க வேண்டும்? என்ற சிந்தனை இருவருக்குமே எழக்கூடாது. இவ்வாறு எதிரும் புதிருமாக நினைத்துக் கொண்டிருந்தால் இறுதியில் மிஞ்சும். இன்பம் பறந்தோடி விடும்.

திருமணபந்தத்தில் இணையும் இருவருக்கும் ஏகப்பட்ட கனவுகள், எதிர்பார்ப்புகள், கொள்கைகள் இருக்கும். சில தம்பதியினரில் இருவரதும் இரு துருவங்களாகக் கூட இருக்கக்கூடும். திருமணத்தின் பின் இவை தெரிய ஆரம்பிக்கின்றபோது முரண்பாடுகள் ஏற்படலாம். காதலித்துத்திருமணம் செய்தவர்களில்கூட இது விதிவிலக்கல்ல. எனினும் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் வெற்றியின் இரகசியமாகும்.

இல்லறத்தில் முதற்கட்டமாக ஒருவரை ஒருவர் முழுமையாகப் புரிந்துகொள்ளவேண்டும். ஒருவரது எண்ணங்களை, கனவுகளை மற்றவர் புரிந்துகொள்வதன் மூலம்தான் அவற்றை எவ்வாறு நிறைவு செய்துகொள்ளலாம் என்கின்ற வழி பிறக்க ஏதுவாகும். சில விடயங்களை இருவரும் மனம்விட்டுப் பேசி பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இரு சில்லுகளும் ஒரே திசையில் செல்லாது விட்டால் பயணம் முடியாத காரியமாகிவிடுமல்லவா?

குடும்ப பொருளாதாரம் கட்டி எழுப்பப்பட வேண்டியது தலையாய கடமை. எனினும் இதற்கு மேலாக கணவன் - மனைவியிடையேயான பிற எதிர்பார்ப்புகளும் நிறைவேறிட இருவரும் சில விட்டுக்கொடுப்புகளைச் செய்வதன் மூலம் இல்லறத்தை இன்பமயமாக்கலாம்.

வாக்குவாதம், சண்டை, பிடிவாதம்சிற்றம் என்பவை தலையெடுக்காத வண்ணம் பார்த்துக் கொண்டால் இல்லற இன்பத்திற்கு இணை வேறேதும் இல்லை!

ச. முருகானந்தன்

## குறுக்கெழுத்துப்போட்டி - 45

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | | 06 | |
| | | 10 | 11 | | | |
| | | 17 | | 19 | | |
| | | | | | | 28 |
| | | | 32 | | | |
| | | 38 | | | | |
| 43 | | | | | 48 | |

**இடமிருந்து வலம்**
01. கொல்லாமை.
10. குரு.
17. ஐந்தொழில்களில் ஒன்று.
32. சாவு குழம்பி உள்ளது.
43. சனி பார்த்தல்.
48. முக்கனிகளில் ஒன்று (மாறியுள்ளது).

**மேலிருந்து கீழ்**
01. அறிகுறி.
02. திசைகளில் ஒன்று.
03. உணவு குழம்பி உள்ளது.
06. இங்கு நெல் செழித்து வளரும்.
11. இது கைப்பழக்கம் என்பர். இறுதி எழுத்தை இழந்துள்ளது.
19. பொறுமைக்கு இலக்கணமாக உள்ளவள்.
28. ஈடாக வைக்கும் பொருள் குழம்பி உள்ளது.
38. சிரார்த்த தினம்.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.43 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**
01. ஆனந்த பைரவி.
08. சமாதானம்.
15. இனம்.
20. கிலி.
22. பரிதாபம்.
31. கடிகாரம்.
36. சிகரம்.
45. பதிவிரதை.

**மேலிருந்து கீழ்**
01. ஆசனம்.
07. விக்கினம்.
09. மாம்பழம்.
12. பங்கம்.
36. சிசு.

**இளையவர்களே!**
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி.இல.45
வெள்ளிநாதம்
ஈழநாதம்
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.43 இன் பரிசுக்குரியவர்**

S. கீதா,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.42 இன், பாராட்டுக்குரியவர்கள்.**

கா.தனுஷன், இராமநாதபுரம் மேற்கு.அ.த.க.வி.

வ.சுமதி, ஆனைவிழுந்தான், கிளிநொச்சி.

ந. செந்தூரன், அண்ணாசிலையடி, அக்கராயன்.

கா.சுவேந்திரன், கனேசபுரம், கிளிநொச்சி.

தி. சிறிதரன், குருமன்காடு, வவுனியா.

டெ. டிலக்ஷன் லோ, சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

# ஹெமிங்வேயின் உலகம்... சில குறிப்புகள்

**Sea and the oldman[கடலும் கிழவனும்] என்ற தனது இணையற்ற படைப்பிற்காக இலக்கியத்திற்கான நோபல்பரிசை பெற்றவரான அமெரிக்க எழுத்தாளரான 'ஏர்னஸ்ட் ஹெமிங்வே' தொடர்பான சில பதிவுகள்...**

ART SEOPE - WEDNESDAY. OCT-16

ஏர்ணஸ்ட் மில்லர் ஹெமிங்வே 1899ம் ஆண்டு யூலை மாதம் 21ஆம் திகதி இலு நோயிஸ் மானிலத்தில் "ஒக் பாக்" என்ற இடத்தில் ஆறு பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் இரண்டாவது பிள்ளையாகப்பிறந்தார். இவரது தந்தை, கிளரென்ஷ் எட்மண்ட் ஹெமிங்வே ஒரு மருத்துவராவார். இவர் மீன் பிடித்தலிலும், வேட்டையாடுவதிலும் அதிக பிரியம் கொண்டவராக இருந்தார். இவரது தாயார் "கிரேஷ் சால்" தெய்வ பக்தி மிக்க பெண்மணியாவார்.

ஏர்ணஸ்ட் ஹெமிங்வே சிறு வயதில் மல்யுத்தப் பயிற்சியில் அதிக நாட்டம் கொண்டிருந்தார். தனது ஒரு கண்ணையும் இதில் இழந்திருந்தார். எழுதுவதிலும் உதைபந்தாட்டதிலும் இவருக்கு அதிக ஆர்வம் இருந்தது. இவர் நகைச்சுவையாகவும் பிரச்சினைகளை ஆழமாகவும் எழுதும் ஆற்றல் கொண்டிருந்தார். பிற்காலத்தில் இவரது கதைகளில் இவை தென்பட்டன.

ஒரு எழுத்தாளனின் பயிற்சி என்பது அவனது இளமையில் சந்திக்கும் வறுமை என குறிப்பிட்டிருந்தார். இவர் தனது குடும்ப வாழ்விலும் கிராமத்து வாழ்விலும் சலிப்படைந்திருந்தார். இரு முறை தனது வீட்டை விட்டு ஓடினார். தனது 17வது வயதில் ஒக்பார்க்கில் உள்ள உயர்கல்வி நிலையத்தில் கற்று பட்டதாரியாக தேறினார். முதலாவது உலகப் போரில் பங்குபற்றும் எண்ணம் இருந்தும் இவர் "கன்சாஷ்" நகரத்திற்கு புறப்பட்டுச்சென்றார். இவர் படையில் சேர்வதற்கு தடையாக இருந்தது இவரின் கண்பார்வையில் ஏற்பட்ட குறைபாடும், வயதுக்குறைவுமாகும். நகரில் அப்போது பிரபலமாக இருந்த "கன்சாஷ் சிட்டி ஸ்ரார்" என்ற பத்திரிகையில் செய்தி சேகரிப்பவராக தொழில் புரிந்தார். அந்தத்தொழிலில் அவருக்கிருந்த ஆர்வமும், வலுவும் குறிப்பிடத்தக்கதாகும். பின்னர் போர் நடைபெற்ற நேரத்தில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் மதிப்பிற்குரிய ஒரு அதிகாரியாக கடமை புரிந்தார். குறிப்பாக காயப்பட்டவர்களுக்கு சேவைபுரிந்தார். இத்தாலியின் எல்லைப்பகுதியில் "அம்புலன்ஸ்" வண்டிச் சாரதியாக கடமைபுரிந்தார். 1918 யூலை 08ஆம் திகதி இத்தாலியில் படைவீரர்களுக்கு இனிப்புப் பொருட்களை வழங்கிக்கொண்டிருந்தபோது மோட்டார் குண்டின் சிதறிய பாகங்கள் இவரது முழங்காலில் காயத்தை ஏற்படுத்தியது. 1919ல் முதலாவது உலக யுத்தம் முடிவிற்கு வந்தபோது அமெரிக்காவிற்குச் சென்று மிக்சிக்கன் மாகாணத்தின் வட பகுதியில் குடியேறினார். அவர் வாசிப்பதிலும் எழுதுவதிலும் மீன் பிடித்தலிலும் காலத்தை செலவு செய்தார். 1920 ரொரண்ரோ ஸ்டார் என்ற பத்திரிகையிலும் "ஸ்டார் வீக்லி"என்றவாராந்த சஞ்சிகையிலும் கடமை புரிந்தார். வாழ்வில் ஈடுபாடும் பிடிப்பும் இழந்த நிலையில் திரும்பவும் சிக்காக் கோவிற்குத் திரும்பினார். 1921ஆம் ஆண்டு தனது முதலாவது மனைவி "காட்லி ரிச்சாட்சனை" திருமணம் செய்து பாரிசிற்குத் திரும்பினார். 1922 கிரிக்கோ- துருக்கி போரில் பங்குகொண்டார். பல இளம் எழுத்தாளர்களுக்கு ஆலோசனையும் உதவியும் வழங்கி வந்த "கேட்றுட் ஸ்ரென்" என்ற எழுத்தாளரின் வழிகாட்டலில், ஒரு எழுத்தாளராக தன்னை நிலைப்படுத்திக் கொள்வதற்கு திட்டமிட்டார். இவரது தனிப்பட்ட வாழ்விலும், இலக்கியப் பணியிலும் பல வெற்றிகளையும் தோல்விகளையும் சந்திக்க நேர்ந்தது. இவர் வாழ்ந்த காலத்தில் அமெரிக்காவின் சிறந்த எழுத்தாளராக திகழ்ந்தார். இவரது கதைகளில் காணப்பட்ட போக்குகள், கதைசொல்லும்முறை தேர்ந்தெடுக்கும் கதைமாந்தர்கள் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தது. நவீன காலத்து புனைகதைகளில் மொழியும், நடையும் பிரபல்யமாக இருந்தன. இவர் அசாதாரண அளவில் புகழ் பெற்றிருந்த மனிதராக இருந்தும் இவரையோ அல்லது இவரது எழுத்தின் ஆழத்தையோ எவராலும் அளவிட முடியாத நிலையில் இருந்தார். இவரின் கதையில் சிருஷ்டிக்கப்படும் பாத்திரங்கள் குழப்பம், ஒழுங்கீனம், கொடூரம், மரணம் ஆகியவற்றை வெளிப்படுத்தின. இப்பாத்திரங்களுக்குள்ள மரியாதை, துணிச்சல் ,சகிப்புத்தன்மை ஆகியன இப்படியாக குண இயல்புகளில் இருந்து அவர்கள் மீள்வதற்கு தேவைப்பட்டன. இவரது பாத்திரங்கள் யாவும் ஒருவிதத்தில் தனிப்பட்ட முறையிலோ, சமூக ரீதியாகவோ சிக்கல்களுக்குள் அகப்பட்டிருந்தன.

## செல்வாக்கு.(INFLUGNCE)

1923ம் ஆண்டு பாரிசில் "3கதைகளையும் 10 கவிதைகளும்" என்னும் தொகுப்பை பிரசுரித்திருந்தார். இக்கதைகளிலும் கவிதைகளிலும்"செறிவூட் அன்டசென்" என்னும் நண்பனும் இலக்கிய ஆசானுமாகிய ஒருவரின் பிரதிபலிப்புக்கள் தென்பட்டன. 1925ஆம் ஆண்டில் "எங்கள் காலத்தில் (IN OUR TIME) என்னும் தொகுப்பை பிரசுரித்திருந்தார். இதில் 14 சிறு கதைகள் அடங்கியிருந்தன. இக்கதைகளில் எதிலுமே அவர் அமைதியை வெளிப்படுத்தவில்லை. 1926ம் ஆண்டுமுதல் நாவல் "இலைதுளிர் காலத்து சித்திரவதை" (TORMENTS OF SPRINS) பிரசுரிக்கப்பட்டது. இக் கதைகள் நையாண்டி(SATIRE) மொழி நடையில் அமைந்திருந்தது. இதில் மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், எல்லாம் மட்டமாக விமர்சிக்கப்பட்டன. அல்லது முட்டாள் தனமானவைபோல் காட்சியளிக்குமாறு எழுதப்பட்டன. பல விமர்சகர்கள், ஒரு காலத்தில் "ஹெமிங்வே"க்கு இலக்கியப் பாதிப்பை ஏற்படுத்திய சேர்வூட் அண்டசன்"ஐ"அவரது இலக்கியத்தில் பலவீனம் இருப்பதாக தெரிவிப்பதாக எண்ணினார்கள்

அதே ஆண்டில் அவரது உண்மைக் கதையான சூரியனும் உதிக்கின்றது. (SUN ALSO RISES)என்று வெளியிட்டார். இக் கதையில் கதாநாயகனாகச் சித்தரிக்கப்பட்டிருந்த "யேக் பார் நெற் "முதலாவது உலகப் போரில் காயப்படுகின்றான். தனது கடந்த காலங்களை மீட்டுப் பார்க்கும்போது அவனால் நித்திரை செய்யமுடியாது அவதிப்படுகின்றான்.மத்திய தர வர்க்க குடும்ப அமைப்பில் இருந்தும் வெளியேறி நோக்கம் இன்றி பாரிசில் தன்னைப் போன்ற எண்ணங்கள் கொண்டவர்களாக அலைந்து திரிகின்றான். அக்கூட்டத்தில் உள்ள அத்தனை மனிதர்களும் போரின் கொடுமையால் பாதிப்புக்குட்பட்டவர்கள். இவர்களை "தலைமுறையை தவறவிட்டவர்கள்" (LOST GENERATION) இப்படியான கதை அமைப்பு அவரது இரு நாவல்களில் வெளிப்படுகின்றன.

இவற்றில் காணப்படும் உரையாடல் வாசிக்கும்போது மனத்திற்கு சந்தோசம் தருவதாக அமைந்துள்ளது. நகைச்சுவை மிக்கதாகவும், அர்த்தமுள்ள கதை அமைப்பு கொண்டதாகவும் அமைந்திருந்தது.

1927ஆம் ஆண்டு தனது முதல் மனைவி "காட்லே"யை விவாகரத்துச் செய்தபின் "போலின் பெரி பெர்" என்ற பெண்ணை திருமணம் செய்திருந்தார். "பெண்கள் இல்லாத ஆண்களும்" (MEN WITHOUT WOMEN) 14 சிறுகதைகளை கொண்ட தொகுதியாக அமைந்தது. இதிலும் "திக் அடம்" என்ற கதாபாத்திரத்தின் இயல்புகளையே வெளிப்படுத்தி இருந்தார்.

1929 ஆம் ஆண்டு "போர்க் கருவிகளுக்கு பிரிவுபசாரம்" (FAREWEL TO ARMS) என்ற நாவலை பிரசுரித்தார். இதுவும் சூரியனும் உதிக்கிறது (SUN ALSO RISES) உம் மிகச்சிறந்த நாவல்களாக கருதப்பட்டுள்ளன. முதல் 04 மாதங்களில் 80 ஆயிரம் பிரதிகள் விற்பனையானது. இத்தாலிய எல்லைப்பகுதியில் போர்க்காலத்தில் இவருக்கு ஏற்பட்ட அனுபவங்கள் விபரிக்கப்பட்டிருந்தன. போர் மனிதனை எவ்வாறு தாக்கத்திற்குட்படுத்துகின்றதென்பது இந் நாவலில்நன்கு விபரிக்கப்பட்டிருந்தது. மாலையில் ஏற்பட்ட மரணம் (DEATH INTHEAFTERNOON)



ஸ்பெயினில் சந்தித்த காளை மாட்டுச் சண்டையை விபரித்திருந்தார். "வெற்றி பெற்றவன் எதையும்எடுத்துச் செல்லவில்லை" (WINNER TAICE NOTHINS) என்பது 14 சிறுகதைகளைக் கொண்டிருந்தது. இதிலும் ஹெமிங்வேயின் கதாநாயகன் "திக் அடாம்ஷ்"ன் குணஇயல்புகளும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. நேர்மை, ஆண்மை, எளிதில் உணர்ச்சி வசப்படும் நிலை, எப்பொழுதும் வெளிவாழ்க்கையில் நாட்டம், மரணத்தின் முன் ஆயிரம் முறை செத்துப்பிழைக்கும் போக்கு ஆகியனவற்றை வெளிப்படுத்தி இருந்தார்.

## உளநடத்தைகள்(BENAVIOARS)

ஹெமிஸ்வேயின் நாவல்களில் எல்லாம் கதாநாயகர்களுக்கு உதவிகள் தேவைப்பட்டன. இதன் மூலம் - தான் தோல்வியடைபவராகவே காட்டியுள்ளார். .இதனால் அவரின் கதைகளில் கதாநாயகர்களுக்கு உதவி புரிந்தவர்கள் என இவர்களின் மூலம் போராட்டங்கள், மனக்குழப்பங்கள் உளைச்சல் ஆகியவற்றிற்கு எதிராக போராடமுடிந்தது. இதன் மூலம் துணிச்சலையும், மரியாதையையும், சகிப்புத் தன்மையையும் பாத்திரத்தால் பெறமுடிந்தது. இவற்றின் மூலம் தனது வாழ்விலும் கூட வாழ்வதற்காக போராட முடிந்தது.

(GREEN HILLS IN AFRICA)

ஆபிரிக்காவின் பச்சை மலைகள் 1935, ஆபிரிக்கா காடுகளில் வேட்டையாடுதலை மையமாகக்கொண்டு புனையப்பட்ட கதை. "மாலையில் ஏற்பட்ட மரணம்" என்ற நாவலும் மரணத்தைப்பற்றியே விபரிக்கின்றது. மனிதர்கள், எருதுகள், எருதுகளுடன் போராடும் மனிதர்கள், குதிரைகள் ஆகியவற்றின் மரணங்களை விபரிக்கின்றன.

இரண்டு நாவல்களுமே ஆழமான உளவியல் அழுத்தங்கள் மத்தியில் எழுதப்பட்டிருந்தன. தனது சமூகத்தில் இருந்து பிரிந்து சென்ற மனிதனின் உளநிலைகளை இந்நாவல்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. 1936ஆம்ஆண்டில் இருந்து 1937ஆம் ஆண்டு வரை ஸ்பானிய உள்நாட்டு போரில் தீவிரமாக ஈடுபாடுகொண்டிருந்தார். ஸ்பெயினின் அரசிற்கு விசுவாசமானவர்களுக்கு 1937இல் உள்ளவனும் இல்லாதவனும் (HAVE AND HAVE NOT) என்ற நாவல் ஹெமிங்வேக்கு அதிகம் வெற்றியைத்தரவில்லை. இந்நாவல் ஹெமிங்வே மீண்டும் சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கு முற்பட்டதை விபரிக்கிறது. இந்த சமூகத்தை அவர் இருபது ஆண்டுகளுக்குமுன் நிராகரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒருவர் தனது சமூகத்தில் இருந்து பிரிந்து வாழ்வது பலனற்றது என்பதை விபரிக்கிறது. 1938இல்இவரால் எழுதப்பட்ட ஒரேயொரு நாடகம் இதுவாகும் இதற்கு "ஐந்தாவது பகுதி" எனப்பெயரிடப்பட்டது. ஸ்பெயினில் ஏற்பட்ட போர் அனுபவங்கள் இதில் விபரிக்கப்பட்டுள்ளன.

1940இல் நன்கு விற்பனையான "யாருக்காக மணி அடித்தது" (FOR WHOM THE BELL TOLL) அந் நாவலும் யப்பானிய போரை மையமாகக்கொண்டே புனையப்பட்டிருந்தன. காதல்கதை ஒன்று யதார்த்தமாக்கப்பட்டிருந்தது. அக்கதையின் கதாநாயகனின் மரணம், வாழ்கை என்பது வாழ்வதற்கு தகுதி கொண்டது, மேலும் மரணம் கூட சரியான நோக்கம் இருந்தால் சிறந்தது என விபரிக்கப்பட்டுள்ளது. இதே ஆண்டில் போலினிடமிருந்து விவாகரத்துப்பெற்று "மர்த்தா செல்கோன்" என்பவரை திருமணம் செய்தார்.

ஆங்கில மூலம் :- உபுல்.பீ.லீகம்கே
தமிழில் :- ஜெயராஜ்

## பூமியில் உயிரினங்களின் தோற்றம் கோழி முந்தியதா ? முட்டை முந்தியதா?

பூமியில் முதன் முதலில் கடலிலே உயிரினங்கள் தோன்றின. கடலில் தோன்றி தரைக்கு வந்தன பரிணாமவளர்ச்சி அடைந்தன. கடலில் 2000 அடி ஆழம்வரை சூரிய ஒளி ஊடுருவின. அந்தப்பகுதிவரை கடலில் கடல் தாவரங்கள் பெருமளவு முதலில் தோன்றின என்றெல்லாம் விஞ்ஞானிகள் ஆய்வுகளைமேற்கொண்டு கூறுகிறார்கள். சூரியனிலிருந்து ஒளியை பெற்று இத்தாவரங்கள் வளர்ச்சி அடைந்தன. மூடிய வன்கோது தடித்த கல்சியம் காபனேற்று உடைய அமைப்புக்குள் உயிரினங்கள் பூமியில் முதலில் தோன்றியது $CaCo_3$ Ca,P கல்சியம் காபனேற்று கல்சியம், பொசுபரசு உடைய மூடிய அமைப்புக்குள் அதாவது சிற்பி மட்டி சங்கு சோகி ஊரி போன்றன முதலில் தோன்றின. பூமியில் முதல் தோன்றிய உயிரினங்கள் கண், காது, மூக்கு,வாய் அங்க உறுப்புக்களை கொண்டிருக்கவில்லை. தனிய இறைச்சியே, புரத மூலக் கூறே முதலில் தோன்றியது. குறிப்பாக சிற்பிகள் மட்டிகள் அங்க உறுப்பு அத்தனை மூடிய அமைப்புக்குள் இறைச்சி புரதம் உடையது. முட்டைகளும் பறவைகள், மீன்கள், ஊர்வன போன்றவற்றின் முட்டைகள் கல்சியம் காபனேற்றால் ($CaCo_3$) ஆன மூடிய அமைப்பாகும். அதனுள் புரதம் விற்றமின்கள் உயிர்களெனப்படுகிறது. கோழி தோன்றியதா? முட்டைமுதலில் தோன்றியதா? என்ற கேள்வி இங்கு எழுகிறது. முதலில் முட்டைகள் தோன்றி அதனை சூரியன் அடைகாத்து குஞ்சுபொரித்தது ஆகும். இது உண்மை நிகழ்வே. மீன்கள் பறவைகள் ஆமைகள் ஊர்வன முட்டைகளை இன்றுவரை சூரியன் அடைகாத்தே குஞ்சு பொரிக்கின்றது. உலகில் முதலில் தோன்றிய உயிரினங்களுக்கு சிவப்பு நிற ஈமோகுளோபின் உடைய குருதி காணப்படவில்லை. ஆதியில் தோன்றிய மட்டி சிற்பி, ஊரி போன்ற உயிரினங்கள் ஈமோகுளோபின் அற்ற வெண்ணிற குருதி மட்டும் உடையதாகும். மூடிய தடித்த வன்கோது ($CaCo_3$) அமைப்புக்குள் உலகில் முதலில் உயிரினம் முட்டை தோன்றியது எனவும் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இதனை சூரியன் அடைகாத்து சூரியவெப்பத்தினால் குஞ்சு பொரித் தவையாகும். முட்டை முந்தியது ஆகும். உலகில் உயிரினங்களின் தோற்றத்தில் முக்கியபங்கு சூரியனுக்கே உரியது. இதனாலேயே சூரியனை கடவுளாக வழிபடுகின்றனர். தமிழர்கள் வாழும் உலகில் சூரியனுக்கு பொங்கல் விழா எடுத்து வழிபட்டு கொண்டாடி மகிழ்கின்றனர் எனவும் நாம் கொள்ளலாமா?

சுவிசிலிருந்து மு.ரகுபாலன்



# நவீன ஓவியங்கள் மீது ஒரு பார்வை

நவீன ஓவியங்கள், நவீன சிற்பங்கள், நவீன கட்டடக்கலை போன்ற சொற்பிரயோகங்களை நாம் அன்றாடம் கேட்டு வருகின்றோம். 'நவீன' என்ற சொற்றொடரை சாதாரணமாக எல்லோரும் 'தற்காலத்துக்கு ஏற்ற' பாணி அல்லது முறை என்னும் அடிப்படையிலேயே புரிந்து வைத்துள்ளனர். அகராதிக் கருத்தும் இதுவேயாகும். உண்மையில் நவீன என்பதற்குரிய சரியான கருத்து வழமையில் இருந்தும் 'வித்தியாசப்பட்டது' என்பதேயாகும் இதிலிருந்து 'நவீன' என்பது காலம் சார்ந்த ஒன்றாகாது என்பதை விளங்கிக் கொள்ளலாம். பலவருடங்களுக்கு முன்னுள்ள ஏதாவது ஒரு வடிவத்திலும் நவீன அம்சங்கள் இருந்திருக்கலாம். ஆனால் இன்று காலையில் ஆக்கப்பட்ட வடிவத்தில் அவ்வம்சங்கள் இல்லாது போகலாம்.

பொதுவாக நவீன ஓவியர்கள் எதைப் பார்க்கின்றார்களோ அதை வரையாது எதை உணர்கின்றார்களோ அதனை வரையவே முயற்சிக்கின்றார்கள் எனக் கூறினால் அது பிழையாகாது. இந்த வரிசையில் வான்கோ, பிக்காஸோ சிசான்,போன்ற கலைஞர்களைக் குறிப்பிடலாம். உதாரணமாகப் பெருந்தீ கொழுந்து விட்டெரிக்கின்றது என வைத்துக் கொள்வோம். ஓர் ஓவியர் தீச்சுவாலையின் போக்கு, அதன் நிறம் அதன் புறவடிவம் இவற்றில் கவனத்தைச் செலுத்தி அடிச்சுவாலையை யதார்த்தமாகக் காட்டி விடுவார். வேறு ஓர் ஓவியர் இவற்றையெல்லாம் காட்டாது சூடு அல்லது வெப்பம் என்று உணரக்கூடிய அம்சத்தை நிறங்கள் ஊடாக அல்லது ஏதாவது உத்திகளைக்கையாண்டு காட்டிவிடுவார். இங்கு இரண்டாம் வரை நவீன போக்குள்ளவர் எனக் கூறலாம். அதாவது ஒன்றின் சாரம்சத்தை காட்டுபவர் என இவரைக் குறிப்பிடலாம்.

நவீன ஓவியங்களைப் புரிந்து கொள்வதற்கு ஓவியங்களை அடிக்கடி பார்ப்பது மிகவும் அவசியமானது. பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட வேண்டும். தர்க்கரீதியான வினாக்கள் கேட்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும். கடுமையாக உழைக்கும் சுரங்கத் தொழிலாளர்களைக் காட்டுவதன் மூலம் எடுத்துக்கொள்ளப்பட்ட விடயத்துக்கு மேலதிக அழுத்தத்தை கொடுக்கமுடியும். உழைத்து உழைத்து தொழிலாளர்களே சப்பாத்து ஆகிவிட்டார்கள். அவர்களின் வாழ்வு நிலை சப்பாத்துப் போல் தேய்ந்து கொண்டு போகின்றது என்னும் கருத்துக்களை இவ்வடிவங்கள் ஊடாக பிரதிபலிக்க செய்யமுடியும். இதே தொழிலாளர்களை கரி நிறமான உடுப்புக்களுடனும் வியர்வை முகங்களுடனும் உள்ளதை உள்ளவாறே யதார்த்தமாக காட்டவும் முடியும். ஆனால் இதற்கு வரையவேண்டிய தேவையில்லை. சுரங்கத்தொழிலாளர்களைக் கலைத்துவமாக நவீன புகைப்பட கருவி மூலம் படம் பிடித்து விட்டுப்போகலாம். புகைப்படக் கருவியின் வரவு ஓவியக்கலையில் மாற்றத்தை உண்டு பண்ணியுள்ளது. புறத்தே உள்ள காட்சியானது புறத்தே உள்ளவாறு கலைஞரால் காட்டப்பட வேண்டுமென்பது பார்வையாளர்களால் நிபந்தனை படுத்தப்படுகின்றது. இதன் காரணமாக சிறு வித்தியாசங்கள் இருந்தாலும் கூட அவர்கள் மனது ஏற்க மறுக்கின்றது. இவ்வாறு மனது ஏற்க மறுப்பதற்குக் காரணம் சிந்தனை என்பது எப்போதும் நிபந்தனை படுத்தப்பட்டு வருவதனால் ஆகும்.

நியூட்டனுக்கு முன்பு இருந்தவர்கள் எல்லோருமே நியூட்டனின் வம்சத்தவர்கள் கூட அப்பிள் பழம் சாதாரணமாகக் கீழேதான் விழும் அது விழாமல் மேலே போகாதோ எனச்சிந்திக்கவில்லை. ஆனால் நியூட்டன் மட்டுமே பழத்தின் விழுகை பற்றிச் சிந்தித்தார். இந்த மாதிரிச் சிந்தனையே புவி ஈர்ப்புக் கொள்கையைத் தந்தது.

பொருள் ஒன்றைச் சாதாரண மனிதர்கள் பார்த்தல், அதனைக் கலைஞர்கள் பார்த்தல்: அதனை விஞ்ஞானிகள் பார்த்தல் என மூன்று நில்லகளை எடுத்துக் கொள்வோம். பொருள் ஒன்றாக இருப்பினும் பார்வையானது வித்தியாசப்படும் என்பதை எல்லோரும் இலகுவாக விளங்கிக்கொள்ளமுடியும். எடுத்துக்காட்டாக கோளவடிவான உலக உருண்டையைச் சாதாரண மாணவர்கள் பார்ப்பார்களானால் அங்குள்ள நாடுகளை இனங்காண்பார்கள். விஞ்ஞானி ஒருவர் பார்த்தாரெனின் அது எப்படித் தோன்றிற்று என்ன மூலகங்களால் அது ஆக்கப்பட்டுள்ளது. கோளமாக அது ஏன் இருக்கின்றது. எப்போதோ ஒரு நாள் இது வெடிக்கும் என்றவாறு சிந்திப்பார். எனவே நவீன ஆக்கம் என்பதில் கலைஞரின் மன உணர்வு முக்கிய இடத்தை வகிக்கின்றது X என்ற பொருளை இரு கலைஞர்கள் பார்க்கின்றார்கள் என வைத்துக் கொள்வோம். ஒருவர் X என்பதை எந்த மாறுதல்களும் செய்யாது X போன்றே வரைகின்றார். மற்றவர் X என்ற வடிவத்துடன் 'தன் உணர்வுப் பார்வை' அனுபவம் இவற்றைக் கலந்து Y என ஆக்குகின்றார். எனினும் Y என்பது வரையும் போது அல்லது படைப்பு ஆகும்போது Z ஆகின்றது. இதுவே ஆக்கதிறன் சாதாரணமாகப் படைப்பாற்றல் என இதனைக்கூறுவோம்.

நவீன பாணி ஓவியங்கள் என்ற போதிலும் திரும்பத்திரும்ப ஒரேபாணியைப் பின்பற்றி ஓர் ஓவியர் வரைவாரெனில் அந்த ஓவியங்கள் இருந்த ஓவியங்களாகவே கொள்ளப்படும். அதாவது கலைஞர் என்பவர் தனது பாணிக்குள் தானே சிறை வைக்கப்பட்ட நிலைக்கு உள்ளாவார் என்பதே இதன் கருத்தாகும். மரபை மீறிச் செய்தாலும் திரும்பத் திரும்ப ஒரே மாதிரிகள் பலவருமெனின் அவையாவும் மீண்டும் மரபாகிவிடும் ஆபத்து உண்டு என்பது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும்.

நவீன ஓவியத்தில் கோடுகளின் சுயாதீனம், நிறத்தின் சுயாதீனம் ஓவியத்தின் மேற்பரப்புக்கும் தூரிகைக்கும் உள்ள தொடுகைத் தடங்கள்: பெரும் சுமையைச் சுமந்து கருத்தைக் கடினப்பட்டுக் காட்டாமல் லாவகமாக காட்டுதல் போன்றவை முக்கியமான அம்சங்கள் ஆகும். அதிக விபரிப்புகள் ஓவியத்துக்குப் பலவீனத்தையே கொடுக்கும்.

தன் அக உணர்வு நிலைகளை உணர்வுகள். சிதைவடையாது உருவங்களாகவும் நிறங்களாகவும் வெளிப்படுத்தியவர்களில் வின்சென்ட்வான்கோ மிகவும் முக்கியமானவர், இவரின் தூரிகைத் தடங்கள் உயிரானவை. தனது படுக்கை அறையுடன் தான் எவ்வாறு உணர்வு பூர்வமாக ஒன்றித்து இருந்தாரென்பதை My bed room என்ற தலைப்பிலான அவரின் ஓவியத்தில் இருந்து நாம் புரிந்து கொள்ளமுடியும். அந்த அறையில் உள்ள பொருள்களுக்கு நிற பேதங்களின் மூலம் அதிக வித்தியாசத்தை அவர் காட்டவில்லை. ஏனெனில் உணர்வு பூர்வமான ஒன்றிப்பில் பேதங்கள் அதிகம் தெரியாது என்பது வெளிப்படையான ஓர் உண்மை.

எவ்வளவு ஓவியங்களைப் பார்த்தாலும் மூன்றாவது கண் என்பதன் ஊடாகப் பார்க்கும் போதே புரிகல் தெளிவாகும்.

**கோ. கைலாசநாதன்**



# மழை நீரைச் சேகரித்து வளம் பெருக்குவோம்

நாம் உயிர் வாழ்வதற்கு உறுதுணையாக உள்ளவை காற்று(வளி), நீர், உணவு முதலியன. இவற்றுள் காற்று எம் மூச்சுடன் இரண்டறக்கலந்துள்ளது. காற்றைப் புறக்கணித்து ஒருகணமேனும் நாம் உயிர் வாழ முடியாது.

அதற்கடுத்தபடியாக எமது உயிரைக்காப்பதற்கு அத்தியாவசியமானது நீராகும். உணவின்றிச் சில நாட்களேனும் வாழ முடியும். நீரின்றி ஒரு நாளேனும் வாழ்வது கடினமே. கடுமையாகத்தாகம் ஏற்படும்போது ஒரு வகையான சோர்வு ஏற்படு வதை நாம் உணருகின்றோம்.

''வானின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்த மென்று உணரற்பாற்று'' என்று வள்ளுவர் கூறுகின்றார். உலகம் நிலைபெற்று நிற்பதற்கு மழை இடையறாது பொழிவதால், அந்தமழை உலகிற்கு அமிழ்தம் என உணரப்படுகின்றது என்பது அவர் கூற்று.

தாங்கமுடியாத தாகமேற்படும் வேளை, நீரைப்பருகும் போது பத்துக்கறியுடன் சோறு உண்டது போன்று திருப்தியடைகின்றோம்.எமது வாழ்க்கை நீருடன் பின்னிப்பிணைந்துள்ளதென்பதை எமது நாளாந்த கருமங்கள் மூலம் அறியமுடியும்.

காலையில் எழுந்தவுடன் கால் முகம் கழுவிக் குளிப்பதற்கும், துணிகளைத் துவைத்துசுத்தம்செய்வதற்கும் உணவு வகைகளைத் தயாரிப்பதற்கும் நீரின் தேவையை யாவரும் அறிவர். இதன் பொருட்டு முன்னதாகவே நீரைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு மிகவும் அவசியமானதும், பெறுமதிவாய்ந்ததுமாகிய நீரை எவ்வாறு பயன்படுத்துகின்றோம்? பல சந்தர்ப்பங்களில் அதன் பயனை உணராது தேவையற்ற வகையில் வீணே விரயமாக்குகின்றோம்.

எமது வளவிற்குள் கிணறு இல்லையென்றால் நாம் அயல் வீட்டிற்கோ, குளத்திற்கோ எமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகச் செல்கின்றோம். எனவே நீரின் அவசியம் பற்றி மேலதிகமாகக் கூற வேண்டியதில்லை.

மாரிகாலம் முடிந்து கோடை காலம் ஆரம்பிக்கும் போது நீரின் தேவையும், அவசியமும் படிப்படியாக உணரப்படுகின்றன. தென்றற் காற்று என்று கூறப்படும் சோளகக்காற்று வீச ஆரம்பித்து விட்டால் கிணறுகள், குளங்களிலுள்ள நீர்வற்ற ஆரம்பித்துவிடும். இக்காலத்தில் மரஞ்செடிகளின் வளர்ச்சிக்கும், உணவு, உபஉணவுப் பொருட்களின் உற்பத்திக்கும் தேவையான நீரைப் பெறுவது இயலாத காரியம் ஆகிவிடுகின்றது.

எனவே நாம் வருவாய் அதிகரிக்கும் போது வங்கிகளில் பணத்தைச் சேமித்து, அவசியமான வேளைகளில் அதனைப் பயன்படுத்துவது போன்று நீரையும் வரண்ட காலத் தேவைக்காகச் சேமித்துப் பயன் பெறக் கடமைப்பட்டுள்ளோம்.

கோடைகாலம் முடிந்து மாரிகாலம் ஆரம்பித்துக் கொண்டிருக்கிறது, பருவமழை பொழியத் தொடங்கி விட்டது.

காடடர்ந்த வன்னி பெருநிலப் பரப்பில் கோடைகாலத்தில் வெப்பம் அதிகமாகக் காணப்படும். இதன் காரணமாக வன்னி மண்ணை ஆட்சி செய்த குறுநில மன்னர்கள் ஆயிரக்கணக்கான குளங்களை அமைத்துள்ளதனால், அவை வன்னி மக்களுக்கு நற்சுகத்தையும், செல்வத்தையும் அள்ளிக் கொடுக்க வல்லனவாக நீரினால் நிறைந்துள்ளன. அவற்றைப் பராமரித்து நீரைத் தேக்கி அந்நீரை விநியோகம் செய்வதற்கு நீர்ப்பாசனப் பகுதி பணியாற்றி வருகின்றது.

ஆயினும் மக்களாகிய நாம் பொறுப்புணர்ச்சியுடன் நீரைச் சேமித்துப் பயன்படுத்தக் கடமைப்பட்டுள்ளோம். "குளங்களில் நீர் நிறைந்திருந்தால் கிணறுகளிலும் நீர் இருக்கும் தானே" என நினைத்து முழுப் பொறுப்பையும் நீர்ப்பாசன இலாகாவிடம் விட்டுவிடலாகாது. நீரைச் சேமிப்பதில் எமக்குள்ள பொறுப்பையும்,கடமையையும் உணர்ந்து கொண்டால் வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லது செய்தவர்களாவோம்.

இங்குள்ள காணிகள் மிகப் பெரியனவாகவுள்ளன. அதனால் அதிகளவில் நீரைச் சேமிக்கும் வாய்ப்பும் உள்ளது. அதற்காக நாம் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றிக் கவனிப்போம்.

காணியின் நான்கு எல்லைகளிலும் வரம்புகளை உயரமாகவும், உறுதியாகவும் அமைத்து மழைநீர் வெளியேறாதவாறு தடுக்கவேண்டும்.

காணியின் நில அமைப்பை (அதாவது ஏற்றம், இறக்கம், சரிவு என்பனவற்றை) நன்கு அவதானித்து நீரோட்டத்திற்கமைய ஒரு அடி அகலம், ஒன்றரை அடி ஆழமான வாய்க்கால்களை அமைத்து நாலு பக்கமும் ஓடுகின்ற நீரை ஒருமுகப்படுத்தவேண்டும்.

கிணற்றிலிருந்து 20 அல்லது, 25 அடித் தூரத்தில், 2அடி அகலமானதும் 2அடி ஆழமுள்ளதுமான நீர் தேங்கும் ஓடையை அமைக்க வேண்டும்.

அநேகமாகக் கிணற்றை அண்மித்த இடத்தில் நீர் தேங்குவதால் இது நிலத்தினுள் இறங்கி நிலத்தடி நீராக இருப்புக் கொள்ளும், கோடை காலத்தில் இந்நீர் மிகவும் கை கொடுக்கும்.

கிணற்றுக்கு அருகாமையில் கறையான் புற்றுக் காணப்படின் அப்புற்றுக்குள் ஒருமுகப்படுத்தப்பட்ட நீரைப் பாயச்செய்யலாம்.இப்படிச் செய்வதன் மூலம் நீர் தேங்கி நீண்ட நாட்கள் நிற்பதையும் தவிர்க்க முடியும்.

காணிக்கருகில் உள்ள ஒழுங்கைகளில் நீர் ஓடும் போது பொருத்தமான ஒரு இடத்தில் அதைத்தடுத்து நிறுத்திக் காணியின் உட்பக்கமாக அமைக்கப்பட்டிருக்கும் வாய்க்கால் மூலம் உள்வாங்கிச் சேமிக்கலாம். ஒவ்வொருவரும் நீர் சேமிப்பதில் அக்கறை எடுப்பார்களானால் தமது வீட்டுக்கும் மேலதிகமாக எமது நாட்டுக்கும் மிகவும் நன்மை செய்தவர்களாவர்.- நாடும் வளம்பெறும்.

**மாரீசன்**



அடக்கிப் பணிய அறியாதவன் ஆணையிட அறியான். - பென்சமின் ஃபிராங்க்லின்

# ஆரம்பக்கல்வியில் மகிழ்ச்சிகரமான கற்பித்தல்

தோ.வீனஸ் பெஞ்சமின்

பொருத்தப்பாடுடைய நபர் ஒருவரை உருவாக்க உதவும், முறைசார்ந்ததும் ஒன்றிணைந்ததுமான தொழிற்பாடுகள் யாவும் ஆரம்பக்கல்வி எனப்படும். தரம்-01 தொடக்கம் தரம்-5 வரையான வகுப்புக்கள் ஆரம்பக்கல்விப் பிரிவினுள் உள்ளடங்கும்.

குழந்தை ஒன்று ஐந்து வயதினைப் பூர்த்தி நிலையிலேயே ஆரம்பக்கல்விக்கு அனுமதிக்கப்படுகின்றது. குழந்தையின் இயல்பான குணங்கள், நடத்தைக்கோலங்கள் என்பன விளையாட்டுடன் கூடியவையாக காணப்படுகின்றன. அன்னையின் அரவணைப்பில் வளர்ந்த குழந்தை அன்பையும், அரவணைப்பையும் பாடசாலையிலும் எதிர்பார்ப்பது நியாயமானதே. தனியே வீட்டுச்சூழலில் தாய், தந்தை, சகோதரர்கள் என்ற குடும்ப உறவில், மிகச்சிறிய சமூகத்தில் வாழ்ந்த குழந்தை பல்வேறு தனியாள் வேறுபாடுடைய பாடசாலைச்சூழலில் தன்னை இணைத்துக்கொள்ளும் போது பல சவால்களை எதிர்கொள்ளவும், பாடசாலை சமூகச் சூழலோடு பொருந்தி வாழக்கூடிய இயல்புநிலையை அக் குழந்தைக்கு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டியதும் ஒவ்வொருஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

ஆரம்பக்கல்வியைப் பொறுத்தமட்டில் ஆசிரியைகள் பெரும்பாலும் பிள்ளைகளால் விரும்பப்படுவதும், அன்னையின் இயல்பொத்த குணங்களை அவர்கள் ஆசிரியர்களிடத்தில் எதிர்பார்ப்பதும் இயல்பானதே. பொறுமையுள்ளவர்களாகவும் அதிக பிள்ளைகளை பராமரிக்கக்கூடிய பொறுப்பு பெண்களுக்கு இயல்பான ஒன்றாக இருப்பதாலும் பிள்ளைகள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு அன்பு, அரவணைப்பு, சுதந்திரம், விளையாட்டு ஆகிய வற்றைக் கூட்டாக இணைத்து செயற்படுத்துவதன் மூலம் மகிழ்ச்சிகரமான ஒரு சூழலை, மகிழ்ச்சிகரமான ஒரு கற்றல் கற்பித்தலை ஆசிரியர்- மாணவரிடையே ஏற்படுத்த முடியும்.

ஆரம்பக்கல்விச் செயற்பாட்டில் ஆசிரியர்கள் பயிற்றுவிப்பாளர்களாகவும் கற்றல், கற்பித்தலை மேற்கொள்பவர்களாகவும் இருந்து வரும் நிலைமையானது ஆரம்ப மாணவர்களிடையே பயம், தடுமாற்றம், அமைதியின்மை, நெருக்கீடுகள் போன்ற உளவியல் தாக்கங்கள் ஏற்பட வாய்ப்பாக அமையலாம். இந்த வகையில் அவர்கள் கற்றல்- கற்பித்தலை தம்மீது சுமத்தப்படுகின்ற திணிப்பாக எண்ணலாம். இப்படியான அவர்களது எண்ணப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தி கற்றலில் மாற்றத்தை ஏற்படுத்த அவர்கள் விருப்புடனும், ஆர்வத்துடனும் செயற்பட, சுயமாக இயங்க ஆடல் பாடலுடன் இயல்பாகவே மகிழ்ச்சியாக செயற்பட மகிழ்ச்சிகரமான கற்பித்தல் செயற்பாடு ஆரம்பக் கல்விச்செயற்பாட்டில் விரும்பத்தக்க ஒரு விடயமாகும். மகிழ்ச்சிகரமான கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர் மாணவர்களுடன் இணைந்து அவர்களுள் ஒருவராக செயற்பட வேண்டியிருக்கும். கற்பிப்பவராக இல்லாது வழிகாட்டுபவராக செயற்படுவார். ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகளுடன் கூடிய கல்விச் செயற்பாடுகள், திட்டமிடப்பட்ட விளையாட்டுக்கள், பாத்திரமேற்று நடித்தல், கலந்துரையாடல்கள், குழுக்களாகச் செயற்படல் என்பன மகிழ்ச்சிகரமான கற்பித்தல் செயற்பாட்டில் செயற்படுத்த வேண்டியவையாகும். ஆசிரியர் தன்னைத்தானே தயார் படுத்தவேண்டியதும், தொழிற் தகைமைகளை மேலும் வளர்த்துக் கொள்ளவேண்டியதும் தொடர் கற்றலில் ஈடுபடுவதும் அவசியமானவையாகும்.





மகிழ்ச்சிகரமான கற்பித்தலை மேற்கொள்வதற்கு ஆசிரியர்களின் மனங்களில் மாற்றம் ஏற்படவேண்டியது மிக அவசியமானதொன்றாகும் குடும்பச்சிக்கல்கள், பொருளாதாரப் பிரச்சினைகள், நெருக்கீடுகள், நடைமுறைப் பிரச்சினைகள், அசாதாரண சூழ்நிலைகளால் ஏற்படுகின்ற பிரச்சினைகள், கணவன்-மனைவி தொழில் பார்ப்பதால் ஏற்படும் பிரச்சினைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் ஈடு கொடுத்து அவைகளைச் சமாளித்து இயல்பு நிலையை ஏற்படுத்துவதென்பது இலகுவான தொன்றல்ல. ஆகவே இவற்றை சுமுகமான முறையில் கலந்துரையாடி, மனம்விட்டுப்பேசி அவற்றிற்கு தீர்வு கண்டு மன நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி தெளிவான மனதுடன் செயற்படும் போதுதான் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு ஏற்படுகின்றது. இம் மகிழ்ச்சியான சூழ்நிலை மகிழ்ச்சிகரமான கற்பித்தலை மேற்கொள்ளுவதற்கு பொருத்தப்பாடாக அமையும்.

மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் G.T.Z/T.I.P. நிறுவனமும் T.A.G அமைப்பும் கல்வித்திணைக்களத்துடன் இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்திவருகின்றன. மகிழ்ச்சிகரமான கற்றல், கற்பித்தல் தொடர்பான செயலமர்வுகள், முகாமைத்துவ செயலமர்வுகள், சேவைக்கால பயிற்சி செயலமர்வுகள், வதிவிடப் பயிற்சிப் பட்டறைகள், அரங்குச் செயற்பாடுகள் போன்ற செயற்பாடுகளை ஆசிரியர்களுக்கும் கல்விசார் அலுவலர்களுக்கும் வழங்கிவருகின்றது. வழமையான கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் இருந்து, நெகிழ்வுடையதாக மாணவர்கள் விரும்புகின்ற பாணியில் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் இச்செயற்பாடுகள் எதிர்காலத்தில் பரவலாக்கப்படும் என நம்பப்படுகின்றது.

நீண்ட காலமாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் சிறிலங்கா அரசின் திட்டமிடப்பட்ட யுத்தம் காரணமாக இப்பிரதேசம் கல்வியில் பல இடர்பாடுகளை எதிர்கொண்டதோடு, கற்றல் தொடர்பாக மாணவர்களின் மன நிலைகளும் பாதிக்கப்பட்டன. இவ்வாறாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் மன நிலைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி கற்றல் -கற்பித்தல் கருமத்தொடரை மகிழ்ச்சிகரமாக்க வேண்டியது ஒவ்வொரு ஆசிரியர்களின் பொறுப்புமாகும். இடப்பெயர்வுகளின் துயரங்கள், பொருளாதாரத் தடைகள், இழப்புக்கள், அழிவுகள் போன்ற பல்வேறு துன்ப துயர சம்பவங்களையும் சந்தித்து வந்த எம்மாணவர்களின் எதிர்கால நல் வாழ்வுக்காக எம் செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்வோம்.

கல்விக் கட்டமைப்பில் ஆரம்பக் கல்வி, இடைநிலைக்கல்வி, உயர் கல்வி என்ற படி நிலைகளில் மாணவன் ஒருவனுக்கு ஒழுங்கான அடித்தளம் ஆரம்பக்கல்வியிலே இட்டால்தான் எதிர்காலத்தில் சிறந்ததொரு பலாபலனை மாணவரிடையே எதிர்பார்க்க முடியும். ஆரம்பக்கல்விச் செயற்பாட்டில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குறைவாக உள்ளமையும் ஆரம்பக்கல்விப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பட்டப்படிப்புக்களை மேற்கொண்டு வேறு பாடத்துறைகளுக்கு மாறிச் செல்வதும் ஆரம்பக்கல்வியில் பின்னடைவுகள் ஏற்படுவதற்கு காரணமாகவும் அமையலாம்.

எனவே எதிர்கால சந்ததியினரின் நன்மைகளைக் கருத்தில்கொண்டு ஆரம்பக் கல்விச் செயற்பாட்டினை ஒழுங்கமைப்போம். பிள்ளைகளின் ஜனரஞ்சகமான, யதார்த்தமான வாழ்வுக்கு வழிசமைக்கும் வகையில் எமது கடமைக் கூறுகளை நாம் முன்னெடுப்போம். நாட்டின் நெருக்கடி நிலைகளையும், சவால்களையும் மன உறுதியோடு எதிர்கொள்வோம். எமது நெருக்கீடுகளை ஒருவரோடு ஒருவர் மனம் விட்டு பேசுவதன் மூலம் நாமே தீர்த்துக்கொள்வோம்.மகிழ்ச்சிகரமான கற்பித்தற் சூழ்நிலைக்கு எமது மனங்களைத் தயார் படுத்துவோம். இளம் பிஞ்சுகளின் மனங்களில் மகிழ்ச்சியை வளரச்செய்வதற்கு ஏற்ற செயற்பாடுகளை முன்னெடுப்போம். கற்றல் இனிமையானது என அவர்களை உணர வைப்போம். அவர்கள் தாமாகவே கற்றலில் ஆர்வத்தையும் விருப்பத்தையும் ஏற்படுத்த எமது பங்களிப்பை முழுமையாக வழங்குவோம். மாணவர்களின் வெற்றியில் எமது பங்கும் அளப்பெரியது. எனவே அதற்கமைய நாம் செயற்படுவோமாக!

---

# வரலாறு படைத்த உப்பளங்கள்

இலங்கையில் உள்ள அனைத்து உப்பளங்களிலும்பார்க்க உப்பு விளைச்சலாலும், உப்பின் தரத்தாலும்வரலாறு கண்ட உப்பளங்கள் இரண்டே இரண்டு என அடித்துக் கூறலாம். அவை ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு என்பனவையாகும். 1977-1985ஆண்டுகளின் இடைப்பட்டகாலங்களில இலங்கை வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு ஆகக் கூடிய விளைச்சலை இவ்விரு உப்பளங்களும் தந்தன. 1984ஆம் ஆண்டில் மட்டும் 80.000 மெற்றிக் தொன் உப்பை இவ்விரு உப்பளங்களும் சேகரித்து சாதனை படைத்தன. 1977-1980 ஆகிய ஆண்டுகளுக்குள் வெளிநாடுகளுக்கு உப்பு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு இவ்விரு உப்பளங்களும் உப்பை பெற்றுக்கொடுத்தன. அந்த நாளில் வெளிநாடுகளுக்கு உப்பை ஏற்றுமதி செய்யும் தரகர்களாக தனபாலசிங்கம்,ஜெயபாலசிங்கம் ஆகிய இருசகோதரர்களும் முன்நின்று இவ்விரு உப்பளங்களிலுமிருந்து உப்பை பெற்று பங்களாதேஷ், உகண்டா, மாலைதீவு போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். மேற்படி இரு உப்பளங்களையும் முன்னேற்றிய பெருமை கீழ்க் கண்ட முகாமையாளர்களுக்கே உரித்தாகும். காலஞ்சென்றவரான சிவசுப்பிரமணியம்(யாழ்ப்பாணம்), கனகநாயகம் (வட்டுக்கோட்டை), நல்லையா (மானிப்பாய்), செல்வராஜா (பருத்தித்துறை) ஆகிய முகாமை யாளர்களின் ஊக்கத்தினால் மேற்படி இரு உப்பளங்களும் உப்பின் மூலம் இலங்கைக்கு அதிக வருமானத்தை பெறக்கூடியதாகவிருந்தது. இவர்களின் வரிசையில் வேலாயுதபிள்ளை என்பவரையும் எடுத்துக் கொள்ளலாம். இவர் ஒருவர் மட்டும் வடபகுதியில் இருக்கிறார். தற்போது மேற்கொள்ளும் முயற்சியின் ஊடாக மீண்டும் ஒரு வரலாற்றை படைக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. மேற்படி இரு உப்பளங்களிலும் அனுபவம் உள்ளவர்களைச் சேர்த்து உப்புச் செய்கையைமேற்கொள்வதன் மூலம் பொருளாதார ரீதியில் உப்பின்மூலம் வடபகுதி நிச்சயம் முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை. தற்போது "மஹாவேவாய" என்ற பெயருடன் இயங்கிவரும் அம்பாந்தோட்டை உப்பளமும் கூட ஒரு காலத்தில் இவ்விரு



உப்பளங்களின் வருமானத்தைக் கொண்டே முன்னேற்றமடைந்தது என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. உப்புச் சேகரிப்பில் அனுபவம் பெற்று தற்போது தென்பகுதி உப்பளங்களில் முகாமையாளர்களாக கடமையாற்றி வரும் திருவாளர்கள் குலேந்திரன் (அம்பாந்தோட்டை), ஒப்பிலாமணி (புத்தளம்), ஏகாம்பரம் (பாலாவி) ஆகியோர்களை பெற்றுக்கொடுத்த பெருமை ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்களையே சாரும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எது எப்படி இருந்தாலும் வட பகுதியில் அமைந்துவிட்ட இவ்விரு உப்பளங்களையும் சிறந்த முறையில் செய்கைப்படுத்தினால் பொருளாதார ரீதியில் வட பகுதி நிச்சயம் வெற்றிபெறும்.

சுருங்கச் சொன்னால் இவ்விரு உப்பளங்களின் எதிர்கால வளர்ச்சி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உப்பு உற்பத்தி பகுதியினரின் கையிலேயே தங்கியுள்ளது என்று கூறுவது பொருத்தமானதாகும்.

க.கணபதிப்பிள்ளை

---

எல்லாமே வேடிக்கையானது தான்- அது மற்றவர்களுக்கு நடக்கும் வரை. - வில் ரோஜர்ஸ்

# நடுநிலை தவறிய விமர்சகர்கள்

**உருவம்**, உள்ளடக்கம் தொடர்பில் சரியான வகையில் அமைந்த சில சிறுகதைகளைப் பார்ப்பதற்கு முன்னர். இவ்விரு விடயங்கள் தொடர்பாக மேலும் சில கருத்துக்களை கவனிப்பது அவசியமானது எனக் கருதுகின்றேன்.

கலை கலைக்காக என்ற பக்கமோ, கலை மக்களுக்காக என்ற பக்கமோ சாராமல் தன் கருத்துக்களை முன்வைத்த கலாநிதி. நா.சுப்பிரமணியன் அவர்கள் 1993ஆம் ஆண்டுக் கருத்துக்களை இங்கு முதலில் பார்ப்போம்.

"1950க்குப் பிற்பட்ட காலப்பகுதியில் திறனாய்வை முதன்மைப்படுத்திய ஒரு 'சிந்தனையாளார் இலக்கியவாதிகள்' மரபு உருவானது. இவர்களில் ஒரு சாரார் மணிக்கொடிக் காலத்தின் புத்திலக்கிய உணர்வெழுச்சியால் தூண்டப்பெற்று உருவான புதிய தலைமுறையினர். மற்றொருசாரார் அப்பொழுது புது வரவாக அமைந்த மார்க்சியத் தத்துவத் தளத்தில் நின்று கலை இலக்கியத் துறைகளில் தனிக்கவனம் செலுத்தியவர்கள். முதல் வகையினர்க்குச் சான்றாக க.நா. சுப்பிரமணியம், சி.சு. செல்லப்பா முதலியோரைச் சுட்டலாம். ஜீவானந்தம், தொ.மு.சி.ரகுநாதன், நா. வானமாமலை, க.கைலாசபதி, கா.சிவத்தம்பி முதலியோர் இரண்டாவது பிரிவு சார்ந்தோர்."

க.நா.சுப்பிரமணியம், சி.சு.செல்லப்பா முதலியவர்களை அழகியல் அணுகுமுறையினர் என்பது மரபாகிவிட்டது. இவர்கள் ஒரு ஆக்கம் இலக்கியமா அல்லவா என்பதை தனித்து நோக்குவதில் தனிக்கவனம் செலுத்தியவர்கள். கருத்துப்பிரச்சாரத்துக்கும் அறப்போதனைக்கும் புறம்பானதான இலக்கியத்தின் இயல்பைத் தெளிந்து கொண்டவர்கள்."

"க.நா.சு.வும், சி.சு. செல்லப்பாவும் ஒரு ஆக்கத்தை இலக்கியமா அல்லவா எனக் காண்பதில் புலப்படுத்தி நின்ற தீவிரமான பார்வை வெங்கட் சுவாமிநாதன், தருமு.சிவராமு முதலியவர்களால் மேலும் வீச்சுடன் தொடரப்பட்டு வருவது கடந்த முப்பது ஆண்டு கால வரலாறு. க.நா.சு., சி.சு.செல்லப்பா ஆகியவர்களுடன் இவர்களையும் சேர்த்து முன்னவர்களான வ.வே.சு.ஐயர், டி.கே.சிதம்பரநாத முதலியார் ஆகியோரையும் உள்ளடக்கிய அழகியல் வாதிகள் என வகைப்படுத்தும் மரபும் உள்ளது. இவர்களை மட்டுமல்ல, செல்வக்கேசவராயர், விபுலாநந்தர், புதுமைப்பித்தன், கு.பா.ரா, சிட்டி, அ.ச.ஞானசம்பந்தன் முதலிய முன்னவர்களையும் கூட அழகியல் வாதிகள் எனக் கூறினால் அது மிகையாகாது. இவர்கள் அனைவருமே இலக்கியத் தன்மையை - அழகைப் பற்றிப் பேசியவர்கள் தான்; இலக்கிய ஆக்கம் எனச் சுட்டப்படுவது கருத்தின் வாகனமாகச் செயற்படும் நிலைக்கும் உணர்வு, உள்ளடக்கம், உருவம் என வேறுபடுத்தலியலாத நிலையில் அனுபவச் செறிவாகத் திகழும் நிலைக்குமான வேறுபாட்டை நன்குணர்ந்தவர்கள்தான்; தமது திறனாய்வுப் பார்வையில் அனுபவ அம்சத்துக்கு முதன்மை கொடுத்தவர்கள்தான். எனவே செல்வக்கேசவராயர் முதல் பேசப்பட்டு வந்த இலக்கிய அழகியலைத் தொடர்ந்து வளர்த்து முன்னெடுத்துச் செல்லும் பணியையே க.நா.சு., செல்லப்பா ஆகியோரும் அவர்களைத் தொடர்ந்தோரும் செய்து வந்தனர் என்பதால் அதனை விரிவாகவும் அழுத்தம் கொடுத்தும் செய்தனர் என்பதும் நமது கவனத்துக்குரியனவாகின்றன.

மேற்காட்டியவாறு இலக்கியத்தின் அழகியல் பற்றிய சிந்தனை ஆழமும், விரிவும் எய்திக்கொண்டிருந்த சூழலில் அதனை விமர்சிக்கும் தளத்தில் நின்று மார்க்சியவாதிகள் தமது திறனாய்வு நோக்கை முன்வைக்கலாயினர். இவர்கள் இலக்கியத்தின் சமூகப் பயன்பாட்டை முதன்மைப்படுத்தியவர்களாவர். இவர்களது நோக்குநிலை "சமூகவியல் நோக்கு" எனப்படும்.

இலக்கியம் தரும் அனுபவம் சமூகத்துக்குப் பயன்படவேண்டுமானால் அதிற்பேசப்படும் - உணர்த்தப்படும் விடயம் சமூகம் சார்ந்ததாக அமையவேண்டும். சமூகத்தின் உண்மையான பிரச்சினைகளின் பிரதிபலிப்பாக இலக்கியம் அமையவேண்டும். சமூகம் என்பது வர்க்கங்களாகப் பிளவுண்டு கிடப்பது, சமூகத்தின் பெரும்பகுதியான உழைக்கும் மக்கள் - வர்க்கம் சிறுபகுதியான சுரண்டும் ஆதிக்க வர்க்கத்தால் எய்தும் அல்லல்களே சமூகத்தின் பிரச்சினைகளுக்கான



இலக்கியப்பகிர்வு

அடிப்படைகள். இந்த அல்லல்களிலிருந்து அம்மக்கள் விடுதலைபெற நிகழ்த்தும் போராட்டத்தின் வரலாறே சமூக வரலாறு. இந்த விடுதலைக்குத் துணை புரிவதே - அம்மக்கள் வாழ்வின் முழுமையை நாடத் துணைபுரிவதே கலை - இலக்கியம் என்பவற்றின் கடப்பாடாகும். இலக்கியத்தின் தகுதி பற்றிய கணிப்புக்கு இதுவே அடிப்படையாகும்."

"இவ்வாறான 'சமூகவியல் நோக்கு' 1940களிலேயே தமிழகத்திலும் ஈழத்திலும், கருக்கொள்ளத் தொடங்கிவிட்டது. ஆயினும் 50 - 60 களிலேயே முனைப்பாக வெளிப்பட்டது. தமிழகத்தில் ப.ஜீவானந்தம், தொ.மு. .சி.ரகுநாதன், நா.வானமாமலை முதலியோர் இந் நோக்கைப் பல்வேறு தளங்களில் புலப்படுத்தி நின்றனர். ஈழத்தில் 1946 இல் உருவான முற்போக்கு இலக்கிய இயக்கத்தில் தொனிப்பொருளாக அமைந்த இந்த நோக்குநிலை 50 களின் பிற்பகுதியில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. இவ்வாறு ஓங்கி ஒலிக்கும் பணியை முன்நின்று செயற்படுத்தியவர்கள் என்ற வகையிலேயே பேராசிரியர்கள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகிய இரு பேறிஞர்களின் செயல்திறன் தமிழின் சமகாலத் திறனாய்வியல் வரலாற்றில் தனிக்கணிப்புக் குரியதாகின்றது."

"ஈழத்தவர்களான கைலாசபதி, சிவத்தம்பி ஆகியவர்களின் செயற்பாடுகள் பல்கலைக்கழகத் தளத்தில் நின்று மேற்கொள்ளப்பட்டமையால் பரந்த மாணவர் மட்டத்தை நோக்கி விரித்துசென்றது; ஈழத்தில் மட்டுமன்றித் தமிழகத்துப் பல்கலைக் கழகங்களின் ஆய்வு மாணவர்களிடத்தும் இவர்களது சிந்தனைகள் பரவின."

"இவ்வாறாகக் கைலாசபதி அவர்களாலும் சமகால மார்க்சிய அறிஞர்களாலும் வித முறை, செயன்முறை ஆகிய இருதளங்களிலும் வளர்த்தெடுக்கப்பட்ட சமூகவியல் நோக்கு பொதுவாக முற்போக்கு என்ற தொடர் பாற்சுட்டப்பட்டது. (ஆனால் முற்போக்கு என்ற தொடர்மாக்சியப்பார்வை என்ற வரையறைக்கு உட்பட்டதன்று, சமூக முன்னேற்றத்துக்குப் பயன்படும் மனிதநேய அணுகுமுறைகள் பலவற்றையும் தொகுத்துச் சுட்டி நிற்பது அது ) மேற்படி முற்போக்குப் பேசியபலரும் சமகால அழகியல் நோக்கைக் கடுமையாக விமர்சித்தனர். அழகியல் பார்வை முற்போக்குக்கு எதிரானது என்ற கருத்தும் வளர்ந்து வந்தது. 60 களின் நடுப்பகுதியிலிருந்து இக்கருத்து நிலைவலுப்பெற்றது. சமகாலத்தின் அழகியல் வாதிகளும் சமூகவியல் நோக்கினரைக் கடுமையாக விமர்சிக்கமுற்பட்டனர். 80களின் நடுப்பகுதிவரை இந்தக் கருத்துப் போர் தொடர்ந்தது. "உருவமா? உள்ளடக்கமா? எதுமுக்கியம்?" என்ற வினாவாக இது ஓங்கி ஒலித்தது. இந்நிலையில் முரண்பட்டன போன்ற தோற்றம் தந்த இவ்விரு தளங்களின் இடை வெளியைக் குறைக்கவும், முடியுமானால் இவ்விரண்டுக்கும் மூலமான பொதுவான அடித்தளத்தை இனங்காணவும் பல சிந்தனையாளர்கள் முயன்றனர். இம்முயற்சிமார்க்சிய அழகியல், அமைப்பியல் என்னும் பெயர்களிலான சிந்தனைகளாக விரிந்தது."

"இலக்கியம் ஒரு கலை என்ற வகையில் அழகியல் சார்ந்தது? வாசகனுக்கு அனுபவத்தை தோற்ற வைப்பதிலேயே அது நிறை நிலை எய்தும். மேற்படி அனுபவம் சமூகத்தின் முன்னேற்றத்திற்குப் பயன்படுவதாக அமையவேண்டும் என்பதை நியாய உணர்வுள்ள எவரும் மறுக்கப்போவதில்லை. எனவே அழகியல் நோக்கு, சமூகவியல் நோக்கு என்பன ஒன்றிற்கொன்று எதிரணியின, எனக் கொள்ளப்பட வேண்டியன அல்ல. ஆனால் நடைமுறையில் இந்த இரு நோக்கினரும் முரண் நிலையிலேயே செயற்பட்டனர்.அழகியல் நோக்கானது சமூகத்தை முன்னெடுக்கும் முற்போக்குச் செயற்பாடுகளை நிராக

**சிதம்பரன்**

ரிப்பதாகிவிடும் என சமூகவியல் நோக்கினர் பலரும் கருதினர். அதேபோல சமூகவியல் நோக்கமானது இலக்கியத்தைப் பிரச்சாரமாக்கிவிடும் என அழகியல்வாதிகள் வாதித்தனர். இந் நிலைக்கு படைப்பாளிகள், திறனாய்வாளர் ஆகிய இரு சாராருமே காரணர் எனலாம்.

சமூகத்துக்குப் பயன்படும் நிலையில் இலக்கியம் படைக்க விழைந்த படைப்பாளிகளிற் பலருக்குப் படைப்பாற்றல் போதாமல் இருந்தது. இதனால் பல ஆக்கங்களில் ஒரு செயற்கைத் தன்மை கருத்துத் துருத்திக் கொண்டு நிற்கும் நிலை காணப்பட்டது. கோஷங்களாக - பிரச்சாரங்களாக - எழுத்து மலினப்படும் நிலை இருந்தது. இத்தகையவற்றை இலக்கியம் என ஏற்பதா? புறக்கணிப்பதா? என்பது 1960-80 காலப்பகுதியில் எழுந்த முக்கிய வினாக்களில் ஒன்று. நோக்கம் நல்லது என்பதால் இவ்வாறான ஆக்கங்கள் குறித்த ஆக்கபூர்வமான திறனாய்வுப் பார்வையைச் செலுத்தி இவ்வாறான படைப்பாளிகளை வளர்க்கவேண்டும் என்பது பலரும் ஒப்பக்கூடிய ஒரு கருத்து. ஆனால் படைப்பாளிகள், திறனாய்வாளர்கள் மத்தியில் நிலவிய பல்வேறு குழு மனப்பான்மைகள், சுய விருப்பு வெறுப்புக்கள் என்பன இவ்வாறான ஆக்க பூர்வமான திறனாய்வுகளுக்குத் தடைகளாக அமைந்தன; சில மார்க்சியத் திறனாய்வாளர்கள் தம் அணி சார்ந்த படைப்பாளிகளை "தூக்கிவிட" முயன்றனர்; அதேவேளை மார்க்சிய அடிப்படை சாராத - ஆனால் மனித நேயம்மிக்க முற்போக்கான படைப்புக்களைத் திட்டமிட்டுப் புறக்கணிக்கவும் செய்தனர். தமிழின் சமகாலத் திறனாய்வுச் செல் நெறியில்கடந்தமுப்பதாண்டுக்கு மேலாக இன்றுவரை - தமிழகத்திலும். ஈழத்திலும் காணப்படும் முக்கிய குறைபாடு இது."

## பொறுக்கி எடுத்த பூக்கள்



### இவை பிரார்த்தனை மொழிகள்.

மக்கள் அதிகம் சிந்திக்கக் கூடாது என பிரார்த்திப்பவன் அரசியல்வாதி.
விலைவாசி உயரவேண்டுமென பிரார்த்திப்பவன் பதுக்கல் வியாபாரி.
காதல் ஒழிய வேண்டுமென பிரார்த்திப்பவர் கல்யாணப் புரோக்கர்.
எல்லோரும் தங்க நகைகளை அணிய வேண்டும் என பிராத்திப்பவன் திருடன்.
மாதம் மும்மாரி மழை பொழியப் பிரார்திப்பவன் குடைதிருத்துபவன்.

### இது பீர்பாலின் மொழி

அக்பர், மொகலாய சாம்ராஜ்ஜியத்தின் பேரரசர். ஒரு முறை அரசவையில் சபையோர் முன் வீற்றிருந்தபடி பீர்பாலைப் பார்த்துக் கேட்டார் 'நானா கடவுளா பெரியவர்.... காரணம் கூறி விளக்குவாயா?'
'அரசே கடவுள் அண்ட சராசரத்திற்கும் சொந்தக்காரனாக ஆட்சி செய்பவராக இருப்பதால் அவரால் தனக்கு பிடிக்காத எவரையும் நாடுகடத்திவிட முடியாது. ஆனால் உங்களால் அது முடியும்.... ஆகவே நீங்கள் தான் பெரியவன் என்றார் பீர்பால்.

### மொழி பற்றிய மொழி

உலக மொழிகளை பாகுபாடு செய்த தமிழறிஞர் வண.பிதா தனிநாயகம் அடிகளார் பிரெஞ்சு மொழி காதலுக்கும், இத்தாலியமொழி அரச உறவுகளுக்கும், ஜெர்மன் மொழி தத்துவத்திற்கும், ஆங்கிலம் அறிவியலுக்கும் உரிய மொழிகள் என்றுள்ளார்.
அப்படியானால் தனது தாய் மொழியாம் தமிழைப்பற்றி அவர் எதுவும் கூறவில்லையா என்று கேட்கிறீர்களா?
கூறியிருக்கிறாரே........!
தமிழ் பக்திக்கும் விசுவாசத்திற்குமுரிய மொழி என்று கூறியிருக்கிறார்.

### அரசியல் வாதி பற்றிய மொழி

முட்டையைக் கொடுத்து காசு வாங்குபவன் முதலாளி.
காசைக் கொடுத்து முட்டையை வாங்குபவன் சம்சாரி.
எதையும் கொடுக்காமல் எல்லாவற்றையும் வாங்குபவன் அரசியல்வாதி....

### பதில் கவி மொழி

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் தமிழகத்தில் தேர்தல்காலத்தில் நடைபெற்றது இது. திருவாரூரில் தியாகராஜர் என்பவர் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டார். அவர் தான் வென்றால் திருவாரூரில் தியாகேசர் கோவிலில் உள்ள இழுக்க முடியாத கற்தேரை ஓடவைப்பேன் என்று பிரசாரம் செய்தார். அப்போது அவரை எதிர்த்து பிரச்சாரம் செய்த நாத்திகரான கருணாநிதி,
'ஏரோட்டும் மக்களெல்லாம் ஏங்கித் தவிக்கையிலே தேரோட்டம் ஏனுனக்கு தியாகராசா' என்று முழங்கினார். பதிலுக்கு தியாகராஜாவும் காரில் ஓடி ஓடி பிரச்சாரம் செய்த கருணாநிதியைப்பார்த்து.. 'ஏரோட்டும் மக்களெல்லாம் ஏங்கித்தவிக் கையிலே காரோட்டம் ஏனுனக்கு கருணாநிதி' எனப் பதிலடி கொடுத்தாராம்....

### பொன்மொழியல்ல..... பெண் மொழி

கணவனை அடிக்கும் பெண்களைப்பற்றி உங்களது கற்பனை எப்படி இருக்கும் என மகுடியாரிடம் ஒருவர் கேட்ட போது அவர் கூறிய பதில்-
மணவறைக்கு வரும் போது அடிமேல் அடி எடுத்து வந்தவள் இப்போது அடிக்கு மேல் அடி அடிக்கிறாளே என்று எண்ணுவதுண்டு - என்பதேயாகும்.

பொறுக்கி



# அனுமார் பதில்கள்

● முதல் பழகும் போது நல்ல நண்பர்களாக பழகுகின்றார்கள், பின் சுயநலமாக மாறி விடுவார்கள்.

சர்மிளா,
புதுக்குடியிருப்பு

வேடம் போட்டு நாடகம் நடிக்கலாம்.

வாழ்க்கையை நடிக்க ஏலுமோ?

வேடத்தைப் பார்த்து ரசிக்கலாம்.

பழகி நேசிக்கலாமோ?

● யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் மீது இராணுவ ரக்வண்டிகள் மோதி பலர் காயமடைகின்றனர். இது விபத்தா? அல்லது சதியா?

சௌ.கௌதமி,
புதுக்குடியிருப்பு.

விசமம்.

● அனுமாரே! தற்பொழுது கிளிநொச்சி பெரிய நகரமாகிவிட்டது. இதனால் நான் கிளிநொச்சிப் பகுதியில் மேல்மாடி வீடு கட்டுவதாக உத்தேசம். இதற்கு உமது அபிப்பிராயம் ஏது?

செ.கானப்பிரியா,
மல்லாவி.

தினமும் பல்கணியில் நின்று விபத்துப் பார்க்கும் பாக்கியம் உமக்கு.

● அனுமாரே! அறுபதிலும் ஆசை வருமாமே! அப்படியானால். ஆசை என்பது எப்போது இல்லாமல் போகும்.

இ.மாலினி,
தமிழீழம்.

மரணத்தில் ஆசை வரும் போது.

● அனுமாரே! உலகில் உண்மை சொல்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எஸ்.குமுதினி,
ஆனந்தபுரம்.

நல்லவர்கள் வல்லவர்கள் இல்லை

● அனுமாரே! ஏன் பெண்கள் இறுக்கமான ஆடை அணிகிறார்கள்.

க.நிறஞ்சன்,
யாழ்ப்பாணம்.

அவர்களின் ஆடைப் பறப்பிற்காக ஆண்கள் காத்துக் கிடக்கிறார்களே.

● அறுசுவை உணவு வீட்டிலிருக்க ஹோட்டல் உணவை ருசிப்பவர்கள் பற்றி தங்கள் கருத்து என்ன?

திருமதி. கார்த்திக்,
வட்டக்கச்சி.

ஹோட்டல் உணவுக்கு வீட்டில் இருப்பவர்களையும் தூண்டுகிறோம் என்பது இவர்களுக்குத் தெரியவருவதில்லை.

● ஒரு ஆணும் பெண்ணும் சகசமாக பழகினால் மற்றவர் வித்தியாசமாக நினைக்கின்றார்கள்.

மயூரன்,
கணேசபுரம்.

'ஒருவன் தன்முகத்தையே எதிரில் நிற்பவரிலும் காண்கிறான்.' என்கிறது ஒ்ரு ஸ்பானியப் பொன்மொழி.

● ''எண்ணெய் இழந்த பின்னும் எரியத்துடிக்கும் அந்த தீபம் போல மனம் தவிக்கிறது''எப்படி இருக்கிறது, இந்தப் பாடல் வரியை எப்படி அரசியலாக்கலாம்.

றமேஸ்,
யாழ்/இந்துக் கல்லூரி.

ஆனந்த சங்கரியாருக்குப் பொருத்தி

● ஒரு மனிதன் வாழ்க்கையில் சொல்வதற்கு கூச்சப்படக்கூடாத வார்த்தை எது? கூச்சப்படவேண்டிய வார்த்தை எது?

க. நடராசா,
திருகோணமலை.

மன்னித்துக் கொள்ளுங்கள்!

● தலைவனுக்கும் எஜமானுக்கும் என்ன வித்தியாசம் அனுமாரே!

க.றஜித்தா,
கிளிநொச்சி.

தலைவன் முன்னின்று நடத்துகிறான்.

எஜமான் மனிதர்களை ஓட்டுகிறான்.

தலைவன் நல்லெண்ணத்தை நம்புகிறான்.

எஜமான் அதிகாரத்தை நம்புகிறான்.

தலைவன் அன்பை வியாபிக்கச் செய்கிறான்.

எஜமான் பயத்தை எழுப்புகிறான்.

தலைவன் ''நாம்''என்று சொல்கிறான்.

எஜமான் ''நான்'' என்று சொல்கிறான்.

தலைவன் என்ன தப்பு எனச் சொல்கிறான்.

எஜமான் தப்பு யாருடையது எனக் காண்பிக்கிறான்.

தலைவனுக்கு எப்படிச் செய்வது என்று தெரியும்.

எஜமானாருக்கு எப்படிச் செய்கிறது எனத் தெரியும்.

தலைவன் மரியாதைக்கு ஆளாகிறான்.

எஜமான் மரியாதையைக் கேட்டுப் பெறுகிறான்.

● ஆனந்த சங்கரி B.B.C க்கு கொடுத்த பேட்டிக்கு மாறாக திவயின பத்திரிகையில் சந்திகாவின் நடவடிக்கையை வரவேற்பதாக பேட்டி கொடுத்திருக்கிறாராமே இதை என்னவென்று சொல்வது?

பரமமூர்த்தி,
பூந்தோட்டம்.

இதைத் தான் எங்கள் ஊரில் சொல்வார்கள் முழித்திருக்க முழியைத் நோண்டுவது என்று.


## சாந்தி மணிக்கூடு திருத்தகம்

இதன் கிளை

தற்பொழுது இல.03, பஸ் நிலையம் சாவகச்சேரியில் இயங்குகிறது என்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகிறோம்.

சாந்தி மணிக்கூடு திருத்தகம்,
இல.03, பஸ் நிலையம்,
சாவகச்சேரி.

(சி - 8693)



"வடமாகாணத்தின் மாபெரும் கணனிக் காட்சியறை"

## நொதேன் ரெக்னோலஜி பிறைவேட் லிமிட்டட்
## NORTHERN TECHNOLOGY(PVT)LTD

NT NORTHERN TECHNOLOGY

- சகலவகையான கணனிகளையும் நீங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
- இலங்கையில் எப்பிரதேசத்திலும் இல்லாதவாறு இரண்டு வருட உத்தரவாதம்
- இலகு தவணைக்கட்டண முறை

யாழ்ப்பாணத்தில்:-
இல:20,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021-222 5653

வவுனியாவில்:-
இல:-52,2ம் குறுக்குத்தெரு,
வவுனியா.
T.P:-024-2221649

மன்னாரில்:-
இல:-31A,ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.

(சி-8539)

"கணனி உலகின் காட்சிப்பெட்டகம்"


## படத்திற்கு மெருகூட்டுங்கள் –43

நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.



## படத்திற்கு மெருகூட்டுங்கள் –43

........................................................................

........................................................................

........................................................................

........................................................................

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –42



வே.வலன்ரைன்;
மந்துவில்,
(நெற்றோ)
புதுக்குடியிருப்பு.

### பரிசுக்குரிய வரிகள்

கெஞ்சுகிறது தாயின் மண்டையோடு
என்னைத் தாலாட்ட வேண்டுமென்று
தஞ்சமெனக்கில்லையே – என
பிஞ்சு மனம் அதைக் கொஞ்சுகிறது.

### பாராட்டுக்குரிய வரிகள்

*உற்றுப்பார் உன் அம்மாவின்
மண்டை ஓடுதான். சமாதானத்திற்கான
யுத்தத்தில் புதையுண்டுபோன உன்
அம்மாதான்.*

வ.செல்வராசா,
கிளிநொச்சி.

*சின்ன மலரே?!
ஒளியின்றி ஓடாய்க்கிடக்கும் உன் தந்தைக்கு
கடைசியாய் கன்னத்தில் முத்தமிடவா ஆசை, அல்லது
அடையாளம் கண்டு அணைக்கவா ஏக்கம்.!*

இரா.மாலா,
றெட்பானா.

*யுத்த காலத்தில்
காணாமற்போன தன் உறவை
சமாதான காலத்தில்
சந்திக்கிறது ஓர் உறவு.*

செ.நிசாந்தன்,
தமிழீழம்.

*அப்பனையா பார்க்கிறாய்
அழிந்த மண்டையோட்டுக்குள் நீ!
இப்போதே சபதமெடு
புதைத்தவனை புதைப்பேன் என்று.*

S.சிவா,
பருத்தித்துறை.

*பார்ப்பதற்கு பயங்கரம்
ஆனால் பார்க்கத்தான் வேண்டும்.
என் தந்தையின் தலையோ!
பரிசோதனை தான் செய்ய வேண்டும்.*

ம.தவயோகன்,
மல்லாவி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.



# 45ம் நாள் நினைவஞ்சலி... நன்றி நவிலலும்

மண்ணில் 14-04-1968

அமரர்

விண்ணில் 02-10-2003

## கதிரவேலு கனகரத்தினம் (கடுனேஸ்)

02-10-2003 அன்று அகால மரணம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்தவர்க்கும் மரணச்சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, 15-11-2003 அன்று நடைபெறும் 45ம் நாள் நினைவிலும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சோலை,
வன்னேரிக்குளம்.

அன்னாரின் பிரிவால் வாடும்
மனைவி,பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

SM Graphics

SUMEE

# SM கோல்ட் ஹவுஸ்



காலத்தால்
அழியாத கண்கவர்
தங்க நகைகளை சுத்தமான
22கரட் தங்கத்தில் தெரிவுசெய்து
பெற்றுக்கொள்ளலாம்.

இல: 46A ,தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: - 24-2224247, 077 - 6059672.

[சி-8804]

SM Graphics

# ரயினோ அதிர்ஷ்டத்திற்கு மேல் அதிர்ஷ்டம்!

40 வருடங்களுக்கு மேலாக இலங்கையின் நம்பிக்கையை வென்றெடுத்த ரயினோ அஸ்பெஸ்டஸ் தகடுகளை வாங்கி, பெறுமதி மிக்க பரிசுகளை வெல்லுங்கள்.

* புத்தம் புதிய மாருதிகார்
* 2 புத்தம் புதிய125cc மோட்டார் சைக்கிள்கள்
* 10, 2கதவு குளிர்சாதனப் பெட்டிகள்
* 10, 21தட்டையான திரையிலான வர்ணத் தொலைக்காட்சிகள்
* 10, சலவை இயந்திரங்கள்

முடிவுதிகதி 23 டிசம்பர் 2003

நிபந்தனைகள் நடுவர்களின் முடிவு இறுதியானது
இப்போட்டியில் ரயினோ ரூ.்.பிங் புரடக்ட்ஸ் லிமிற்றெற்றினதும், ட்ரைஅட் அட்வர்டைஸிங் (பிறைவேற்) லிமிற்றெற்றினதும் அலுவலர்களும், அவர்களது உறவினர்களும் பங்குபற்றமுடியாது.

பெயர்:........................................
விலாசம்:........................................
விற்பனை நிலையத்தின் பெயர்:........................................
விற்பனை நிலையத்தின் விலாசம்:........................................
இக்கூப்பனை நிரப்பி 2003 டிசம்பர் 15க்கு முன்னர் உங்கள் சிட்டையின் (Bill) புகைப்படப் பிரதியுடன் கீழேயுள்ள விலாசத்திற்கு தபாலில் அனுப்பி வையுங்கள்.



RHINO

ரயினோ ரூ.்.பிங் ப்ரடக்ட்ஸ் லிமிற்றெற்
752, பேஸ்லைன் வீதி, கொழும்பு-09.
தொலைபேசி -2693694, 2674765 பக்ஸ்: 2667267

40 வருட மேன்மையான சேவை

[சி-8803]

# EXPOAIR

your friend in the skies

எக்ஸ்போ எயார்



யாழ்-கொழும்பு பயணத்தின் போது
ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின்
சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் - 021-2223891, 021-2226297, 074 512666, 01-2360291, 0712-348888, 0712-349999, 01-2360290,

e-mail- jaffna@expoavi.com

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை

C8540


இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.